Saraswathi Vilasa Sabha Play Series No. 1.

# RAMAYANA

# AYODHIA KANDAM,

## A TAMIL PLAY IN THREE ACTS

DRAMATISED BY

**V. T. SAMBANDHAN,**

TAMIL PANDIT, THE JAFFNA HINDU COLLEGE,

EDITOR *INTHUSATHANAM*

PLAY WRIGHT, & HONRY PLAY DIRECTOR, SARASWATHI VILASA SABHA,

COMMENTATOR ON CAMBRIDGE TAMIL SELECTIONS,

AND AUTHOR OF A SERIES OF TAMIL READERS ETC.,

SECOND EDITION.

PUBLISHED BY

**N. RAMACHANDRAN,**

ASST. MASTER, THE JAFFNA HINDU COLLEGE,

AND HON. ASST. SECY. S. V. S. JAFFNA.

February 1926.

(*Copyright Registered*)

Price Cents 75.

சரஸ்வதி விலாசசபை நாடகமஞ்சரி மலர்-க.

உ

# இராமாயணம்

# அயோத்தியா காண்டம்

## (பாதுகா பட்டாபிஷேகம்.)

இஃது

நாடகரூபமாக

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்போதகாசிரியரும்
“இந்துசாதன” பத்திரிகாசிரியரும்
சரஸ்வதிவிலாசசபை நாடகாசிரியருமாகிய
ம. வே. திருஞான சம்பந்தப் பிள்ளையால்

எழுதி

யாழ்ப்பாணம் கிளவ் யந்திரசாலையில்
அச்சிடுவிக்கப்பெற்றது.

உ-ம் பதிப்பு.

குரோதன ௵ மாசி ௴.

1926.

[Copyright Registered.]

விலை சதம் 75.

To

**Sriman C. Rasanayaga Mudaliyar, C. C. S. V. T.**

*Office Assistant to the Government Agent, N.P., [illegible] ...mple,*
*and Hony: Secretary, Saraswati Vilasa Sabha, Jaffna.*

as a token of the regard and esteem in which he is held for the zeal he has shown in the cause of Tamil literature,

THIS BOOK

IS RESPECTFULLY DEDICATED

BY

**THE AUTHOR.**

---

இச்சிறியநூல்

யாழ்ப்பாணக் கச்சேரி உதவிக் கவண்மென்ற் ஏசண்டர்

ஸ்ரீமாந். செ. இராசநாயக முதலியாரவர்கட்கு,

அவர்கள் செந்தமிழபிமானத்தின்பொருட்டு

ஷை நூலாசிரியரால்

அர்ப்பணஞ் செய்யப்பெற்றது.

---

# FOREWORD.

I HAVE been asked to write a foreword to the play cntitled "AYODHYA KANDAM" written to be staged by the Jaffna Saraswati Vilasa Sabha by Pandit V. T. Sambandhan. The author has produced a work in simple, elegant Tamil and has dramatised a very interesting episode in the great Tamil epic of the sweet-tongued, Tamil poet Kamban. The chief aim of any great work of literature is to educate in the true sense. It must store the mind of the reader with true knowledge and must lead to useful healthy action. Dramatic literature, since it is intended to be acted will appeal forcibly not only to the intellect but also to the emotions. Unless the play is pure and moral in its tone, it will have a demoralising effect upon young minds and hearts. But where the tone is pure and healthy it becomes a potent power in enlightening the mind and in rousing and chastening the emotions in the right direction. True dramatic literature has always been of great educative value to the world. Pundit Sambandhan has kept these things in view in the production of this play. The characterisation and the moral teaching will be found blameless even by a sensitive critic. Mr. V. Ramanathan has added to the beauty of the play by his poetic and musical talents. The songs he has composed will add not a little to the aesthetic enjoyment of the play.

N. SELVADURAI, B. A.,
Principal, Hindu College,
JAFFNA.

Vannarponnai, Jaffna,
2nd November, 1919.

# நூன்முகம்.

செந்தமிழுணர்ந்த செல்வர்காள்,

பூர்வ இந்துக்களுக்குரிய ஆசாரங்களும், நமது செந்தமிழ்ப் பாஷையும், பழைய சங்கீதசாஸ்திரமும், இன்னோரன்ன பிறவும் காலகதியில் அருகிவருதலைக் கண்டு, இவ்வியாழ்ப்பாணத்தின்கணுள்ள பேரபிமானிகள் சிலர், அவற்றை விருத்திசெய்யும் நோக்கமாக, இற்றைக்குச் சிலவருடங்கட்குமுன் சரசுவதி விலாசசபையென்னும் ஒரு சபையை ஆரம்பித்து, அதுவாயிலாகச் சில நாடகங்களை நுட்பமாக நடாத்திவரலாயினர். இச்சபையார் கொண்ட நன்னோக்கங்களுட் பல இன்னமுங் கைகூடில. ஒரு விஷயத்தைச் செவிப்புலன்வாயிலாகக் கேட்பதுடன் கட்புலன்வாயிலாகப் பிரத்தியக்கமாகக் காணின், அவ்விஷயம் நன்குபதியுமென்னுங் கருத்துப் பற்றியே உலகில் எப்பாஷையாளரும் நாடகத்தை அநுசரித்துவருகின்றனர். ஆதிக்காலத்தில் கல்வியறிவுடையோரால் நடத்தப்பெற்றும் சன்மானிக்கப்பெற்றும் வந்த நாடகம், பின்னர் பாமரசனங்கள் கைப்பட்டு, காமசிருங்கார வருணனைகள் மலிந்தமையால் அறிவுடையோர் அதனைப் பெரும்பான்மையும் உபேட்சிக்கத் தலைப்பட்டனர். இக்குறையை நீக்குதற்பொருட்டுச் சென்னையிலுள்ள கல்வியறிவுடையோர் சிலர் சுகுணவிலாசசபையென்னும் ஒரு நாடகசபையை ஆரம்பித்தனர். அதனைப் பின்பற்றியே ஏனைய சபைகள் உண்டாயின.

நம்மவர்கள் ஜீவனார்த்தமாக ஆங்கிலத்தை ஆர்வத்துடன் கற்கப்புகுந்து, தாய்ப்பாஷையாகிய தமிழைக் கல்லாதொழிந்தனர். அக்காரணத்தினால், தமிழ்ப்பாஷையில் இனிய செய்யுள் நடையிலுள்ள இராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்களும், கந்தபுராணம் பெரியபுராணம் முதலிய புராணங்களும் கற்கப்படாதொழிந்தன. இவ்விதிகாசங்களும் புராணங்களும் கூறுஞ் சரித்திரங்களை அறிந்தவர்களுஞ் சிலரினுஞ்சிலராயினர். இவைகளுட் பொதிந்துள்ள நீதிகளும் பிறவும் செவிடன்காதிற் சங்கீதம் போலாயின.

ஆயினும், இக்காலத்துள்ளார் சிலர் தமிழில் எழுதப்பட்ட நவீனங் (Novels) களையும் இதுபோன்ற நாடகங்களையும் இந்தியாவிலிருந்து தருவித்துப் படித்தலைக் கண்ணுற்ற யான், பழைய புராணேதிகாசங்களை இங்ஙனம் நாடகமாக வெழுதி வெளியிடின் லோகோபகாரமாகுமெனவெண்ணி, கம்பராமாயணத்துள்ள இரண்டாங் காண்டமாகிய இக்காண்டத்தை வெளியிடத் துணிந்தேன். கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரது 'செருப்படியிற் பொடிபொவ்வா' தவனாகிய சிறியேன், அவர் கருத்தை உலகோருக்கு இந்நாடகநூல் வாயிலாகப் புலப்படுத்தத் துணிந்தமை, ஒன்றுமறியாச் சிறுவன் கொல்லதெருவில் ஊசிவிற்கப் புறப்பட்டாற் போலிருக்குமாயினும், யான்கொண்ட நோக்கம் நன்னோக்கமாகலின் பெரியோர் அதனை எள்ளாரென்பதே என்றுணிபு. திருவருளுக்குச் சித்தமானால், இராமாயணத்துள்ள ஏனைய காண்டங்களையும், வேறு பழைய நூல்களிலுள்ள சற்போதம் பயக்குஞ் சரித்திரங்களையும் இவ்வாறு நாடகமாக எழுதி வெளியிடலாமென்பது எனது பேராசை.

நிற்க, இந்நூலை யெழுதுங் காலத்தும் அச்சிடுங்காலத்தும் எனக்குப் பெருந் துணையாய் நின்று என்னைப் பலவாறு ஊக்கப்படுத்திய எனது அரிய நண்பர்களுக்கும், தமது சிரமத்தையும் அரிய நேரத்தையும் பொருட்படுத்தாது சந்தர்ப்பங்கட்கு வாய்ந்த இனிய பாக்களைப் பாடியுதவி இதனை ஒருவாறு பூரணமாக்கிய நண்பர் ஸ்ரீ. வை. இராமநாதனவர்கட்கும் பெரிதும் கடமை பூண்டுள்ளேன்.

இந்நூல் இலங்கைச் சர்வகலாசங்கத் தமிழ்ப்பாடமாகவும், கேம்பிறிஜ் சர்வகலாசங்க ஜூனியர் பரீட்சைக்குத் தமிழ்ப்பாடமாகவும் விதிக்கப்பட்டது; இப்பொழுது ஆசிரியர்வகுப்பு முதல் வருட மாணவருக்குப் பாடமாக விதிக்கப்பெற்றுளது. இது இரண்டாம் பதிப்பாகும்.

யாழப்பாணம்,
இந்துக்கல்லூரி,
குரோதனஞு,
மாசிமீ.

இங்ஙனம்,
ம. வே. திருஞானசம்பந்தன்.

## இந்நாடகத்துக் குரியவர்கள்.

| | |
|---|---|
| தசரதர் | அயோத்திநாட்டுச் சக்கரவர்த்தி. |
| ஸ்ரீராமர் | கோசலையின் மகன் (கதாநாயகன்.) |
| பரதன் | கைகேசியின் மகன். |
| இலட்சுமணன் }<br>சத்துருக்கன் } | சுமித்திரையின் புதல்வர். |
| சுமந்திரன் | தசரதரது முதன்மந்திரி. |
| வசிட்டர் | குலகுரு. |
| பரத்துவாசர் | ஒரு முனிவர். |
| குகன் | சிரிங்கிபேரம் என்னும் நாட்டு வேட்டுவ [அரசன். |
| கோசலை }<br>கைகேசி }<br>சுமித்திரை } | தசரதன் மனைவிமார். |
| சீதை (ஜானகி) | ஸ்ரீராமரின் தேவி. |
| மந்தரை (கூனி) | கைகேசியின் தோழி, |

முனிவர், அரசர், அமைச்சர், சேனாவீரர், பிரஜைகள், ஏவலர், வேடர், தோழியர் முதலானோர்.

கதை நிகழுமிடம்:—அயோத்தியாபுரி, சித்திரகூடத்திற்குச் செல்லும் மார்க்கம், சித்திரகூடம், நந்திக்கிராமம்,

# இராமாயணம்

# அயோத்தியா காண்டம்.

## முதல் அங்கம்.

### முதற் காட்சி.

காலம்-காலை. இடம்-தசரதர் மந்திராலோசனை மண்டபம்.

[தசரதர் சிம்மாசனத்தில் வீற்றிருக்க, சுமந்திரன் முதலிய அமைச்சர் இருமருங்குமிருக்கின்றனர்கள்.]

தச: அமைச்சர்காள்! என் மனத்தில் நெடுநாளாகக் குடிகொண்டிருந்த ஒரு விசேஷமான விஷயத்தை உங்களுடன் யோசிக்கும்படியே உங்களை இங்கு அழைத்தேன்.

சும: அரசர்பெருமானே! தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டால் ஏதோ எங்கள் சிற்றறிவிற்கு எட்டியபடி ஆராய்ந்து சொல்லுகின்றோம்.

தச: மந்திரத்தலைவர்காள்! "ஆலம்விழுதுபோல் அமைச்சர்" என்றபடி உங்கள் பேருதவியைக் கொண்டு நெடுங்காலமாக யாதுங் குறைவின்றி இந்த அயோத்தியாபுரியையும் மற்றுந் தேசங்களையும் பரிபாலித்துவந்தேன்; சம்பராசுரனை வென்றேன்; வேறும் பகைவரைக்கொன்றேன்; புத்திரரில்லையேயென்று பெரிதும் வருந்திப்புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து இரத்தினங்கள் போன்ற நான்கு புத்திரரைப் பெற்றேன்; அவர்களோ வில்வித்தையிலும் மற்றும் யுத்தப் பயிற்சியிலும் கல்வியறிவொழுக்கங்களிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாதவராயினர்; யானோ அதிக விருத்தாப்பியதசையை யடைந்துவிட்டேன்: இவ்விராச்சியபாரத்தை வகித்தல் இனி என்னால் முடியாது; அல்லாமலும் மறுமைக்கு உறுதுணையாயுள்ள தவத்தைக் கைக்கொண்டொழுகுவதே என் பிரதான கடமையாகும்; ஆதலால் துறவியாகத் துணிந்தேன்; உங்கள் கருத்தென்னவோ சொல்லுங்கள்.

(இதற்கிடையில் வசிட்டர் வர எல்லோரும் எழுந்து வணங்குகிறார்கள்.)

வசி: அரசனே! ஜபமுண்டாகுக; அமருங்கள், அமருங்கள்.

[எல்லோரு முட்காருகிறார்கள்.]

தச: முனிவர்பெருமானே! இச்சமையத்தில், தங்களுடைய திருச்சமுகத்தை மிகவும் வேண்டி நின்றேன்; திருவருள் தேவரீரை இப்போது இங்கு இட்டுக்கொண்டுவந்தது; நான்செய்த பாக்கியமே பாக்கியம்; என்மனத்தில் எழுந்த ஓர் எண்ணத்தை எனது அமைச்சருக்குத் தெரிவிக்குஞ் சமையத்தில், தாங்களும் இங்கே எழுந்தருளினீர்கள். அவ்விஷயத்தைக் குறித்துத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டும்.

வசி: அரசனே! உன்மனசினுள்ள சிந்தனை யாது? சொல்லுதி.

தச: முனிபுங்கவ! யான் வயோதிகதசையை யடைந்துவிட்டமையால், இனி இவ்விராச்சியபாரத்தை என் அருந்தவக் குழந்தையாகிய இராமனிடம் கொடுத்துவிட்டு, வானப்பிரஸ்த நிலையை அநுசரிக்க எண்ணங்கொண்டேன்; இவ்விஷயத்தில் தங்கள் சித்தம் எப்படியோ? சொல்லியருள வேண்டும்.

வசி: மன்னவ! இராச்சியபரிபாலனத்துக்குப் பெரிதும் உரிமை பூண்டவர்கள் அமைச்சர்களாவர்; ஆதலால் அவர்கள் தங்கள் தங்கள் எண்ணங்களை எடுத்துச் சொல்லியபின்பு, யானும் என்னபிப்பிராயத்தைக் கூறுவேன்.

[தசரதர் சுமந்திரனைநோக்க அவன் குறிப்பறிந்து எழுந்து]

சும: அரசர்கட்கரசே! உம்மைவிட்டுப்பிரிய நேரிடுகின்றதே என்ற எண்ணமானது எங்கள் மனசைப் பெரிதும் வருத்துகின்றது; ஆனாலும் மறுமைக்கு உறுதுணையாயுள்ள துறவறத்திற்கு இடையூறாகப் பேசுதல் மதிமந்திரிகட்கு அழகன்று. சூரியகுலத்தில் ஸ்ரீராமனைப்போன்ற ஒரு புத்திரசிகாமணியைப் பெற்றவர் உம்மையன்றி வேறு யாருளர்? ஆதலால் ஸ்ரீராமனிடம் இராச்சியபாரத்தை ஒப்புவித்துத் தங்கள் விருப்பத்தின்படி துறவறம் பூணுதல் தக்கதேயாமென்பது சிறியேன் அபிப்பிராயம்.

தச: (வசிட்டரை நோக்கி) அருந்தவச்செல்வ! தங்கள் அபிப்பிரா யத்தை அறிய விரும்புகின்றேன்.

வசி: பூபாலா! யான் புகல்வதைக் கேள்: இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாத் துணையாய் உள்ளது தவமேயாகும்; அந்தத் தவத்தைப் பெறுதற்கு இதுவே தகுந்த சமையம்; இராமனோ தன்னுயிர்போல் மன்னுயிரனைத்தையும் இனிது காப்பன்; கௌசிகன் போன்ற வேந்தரும் இராச்சியபரிபாலனத்தை விடுத்துத் துறவறத்தை மேற்கொண்டனரென்றால் தவத்தின் பெருமையை யார்தான் எடுத்துச் சொல்ல வல்லார்? ஆதலால், அரசனே! இராமனுக்கு மகுடஞ்சூட்டி நீ தவஞ் செய்யும்படி காட்டிற்குப் போதலே முறையாகும்; இதுவே எமதபிப்பிராயம்.

தச: சுவாமீ! நன்று கூறினீர்கள்; தங்களைப்போன்ற மகான்களைக் குலகுருவாகப் பெற்ற எனக்கு என்ன குறைதான் நேரிடும். (முனிவரை வணங்கிப் பின் சுமந்திரனைப் பார்த்து) சுமந்திரா! இராமனை இங்கே அழைத்துவருகுதி.

(சுமந்திரன் செல்கின்றான்.)

(வசிட்டரை நோக்கி) அருந்தவக் குன்றே! எனது மகனோ ஒன்றுமறியாப் பாலன்; இராச்சியபாரத்தைச் சுமத்தல் எளிதல்ல என்பது தங்களுக்கே நன்கு தெரியும்; ஆதலால் அவனுக்கு அரசாங்கமுறையைப் போதிப்பது தங்கள் கடனாகும்.

வசி: அரசனே! உன் மகனைச் சாமானியனென் றெண்ணாதே; அவனோ அவதாரபுருஷனாகும்; ஆயினும் உனது விருப்பத்தின்படி அவனுக்குவேண்டிய விஷயங்களைப்போதிக்கின்றேன்;

(ஸ்ரீராமரும் சுமந்திரனும் வருகின்றனர்; ஸ்ரீராமர் வசிட்டரை வணங்க அவர் ஆசீர்வதித்தபின் தந்தையை வணங்குதலும் அவர் எடுத்துத் தழுவுகின்றார்.)

தச: அப்பா கண்மணி! இப்படி அமருவாய்; உனக்கு நான் சொல்ல வேண்டிய ஒரு செய்தி உளது; அதனைக்கேள்.

இ: எந்தையே! பணித்தருளவேண்டும்.

தச: வாராய் என்செல்வமே! யானோ நெடுங்காலமாக இராச்சிய பரிபாலனஞ் செய்து மிகவும் அலுத்தேன்; வயோதிகமும்

என்னை வருத்தத் தலைப்படுகின்றது; மானுடயாக்கை எடுத்த யான் இனிமேலாயினும் அதனால் எய்தற்பாலதாகிய பேற்றை யடைதற்கான பிரயத்தனஞ் செய்யவேண்டாமா? இகபரமிரண் டினையும் பெறுதற்குப் பெருந்துணையா யுள்ளவர்கள் சற்புத்தி ரர்களாம்; உன்னைப் பெற்ற யான் அவற்றைப் பெறுதற்கு யாது தடையுளது? மகனே! நமது சூரியகுலத்தரசர் எல்லோ ரும் தங்கள் அரும்பெறற் புதல்வர்கள் வாயிலாகவே புண்ணி யத்தையும் புகழையும் பூண்டார்கள். எவ்வளவோ பிரயா சைப்பட்டு அரிய யாகஞ் செய்துமுடித்து உன்னைப் பிள்ளையா கப் பெற்றேன்; அப்படிப் பெற்ற யான் இந்த வயோதிக காலத்திலும் இவ்விராச்சியத்தை வகித்துக்கொண்டு கஷ்டப் படுவது அழகாகாது; உன் மூதாதையாகிய பகீரதன் சிவபி ரானை வேண்டி அருந்தவஞ் செய்து அவனருளாற் கங்கை யைப் பெற்றுத் தன் முன்னோராகிய சகரரை ஈடேற்றினான்; எனக்குமுன் னிருந்த அரசர்களும் விருத்தாப்பிய காலத்தில் தவநெறியைக் கடைப்பிடித்து மோட்சமடைந்தனர்; ஆதலால் யானும் இவ்விராச்சியத்தை உன்னிடம் ஒப்புவித்துத் தவஞ் செய்யக் கருதுக்கொண்டேன்; குழந்தாய்! என் விருப்பத்தை மறுக்காது முடிபுனைந்து இவ்விராச்சியத்தை ஆளுதி; இதுவே மகன் தந்தைக்காற்று முதவி

இ: எம்பிதாவே! உமதுவாக்கிற்கு எதிர்வாக்குமுண்டா? உமது சித் தம் எப்படியோ அதற்கு யான் உடன்படுகின்றேன்.

தச: என் கண்ணே! மகிழ்ந்தேன், மகிழ்ந்தேன்; யான் பெற்ற செல் வம யார்தான் பெற்றார்; குழந்தாய்! நீ உன் மாளிகைக்குச் செல்.

[இராமருஞ் சுமந்திரனுஞ் செல்கின்றனர்.]

தச: (வசிட்டரை நோக்கி) சுவாமீ! இராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வதற்கான ஆயத்தங்கள் செய்யவேண்டுமல்லவா?

வசி: ஆம் அரசனே! சோதிடர்களை அழைத்து மகுடாபிஷேகத்திற் காகிய ஓர் சுபமுகூர்த்தத்தை நிச்சயித்தபின் சகல அரசர்கட் குந் திருமுகம் அனுப்புதல் வேண்டும் கிரீடதாரணத்திற்கு வரும்படி.

தச: சுவாமீ! ஏதோ, மகுடாபிஷேகத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் அனைத்துஞ் செய்கின்றேன்.

வசி: சக்கரவர்த்தியே! யான் நின்மகனிடஞ் சென்று அவனுக்கு இராசரீகத்திற்கு வேண்டிய விஷயங்களை இப்பொழுதே போதித்தல் வேண்டும்; விடைதருகுதி.

தச: சுவாமீ! தங்கள் திருவுள்ளப்படியே. (வசிட்டர் செல்கின்றார்; சக்கரவர்த்தி மற்றொருபுறமாகப் போகின்றார்.)

---

## இரண்டாங் காட்சி-

காலம்-பின்பகல். இடம்-ஸ்ரீராமரது மாளிகையில் ஒரு மண்டபம்.

[வசிட்டர் ஸ்ரீராமருக்கு உபதேசஞ் செய்தல்.]

வசி: ஏ இராமச்சந்திரா! உன் தந்தை உனக்கு நாளையத்தினம் முடிபுனையச் சித்தங்கொண்டார்; அவரது ஆஞ்ஞைப்படி நடத்தல் உன் கடனாகும்; நீயோ புத்தியிற் சிறந்தவன்; ஆனாலும், உன் பிதா விரும்பியவண்ணம் சிலவற்றைக் கூறுகின்றேன்; கேட்குதி.

இ: முனீந்திர! அடியேன் தந்நியனானேன்; சொல்லியருளல் வேண்டும்.

வசி: இராகவா, இயம்புவேன் கேள்; மும்மூர்த்திகளைப் பார்க்கினுஞ் சிறந்துள்ளவர்கள் முனிவர்களும் அந்தணர்களுமே; அவர்களோ உலகத்திலுள்ள ஆன்மாக்கள் செய்யும் பாவங்களையும் அகற்றும் பான்மையர்; பூசுரர் என விபந்துசொல்லப்படுபவர்; அவர்களை எந்நாளும் பூசித்து அவர்களுடைய தயையைப் பெற்று வாழுதி; பகைவரில்லையேற் போருமில்லை; ஆதலால் பகையை உண்டாக்கிக்கொள்ளாதே; எஞ்ஞான்றும் நீங்காப் புகழைப் புனைந்துகொள்; சத்தியத்தைக் கடைப்பிடி; நிலைபோய், வனத்தினிற்போய், செல்வம்போய், வஞ்சனீசனுக்கு விலைபோயும் உன் மூதாதையாகிய அரிச்சந்திரன் மெய்போனதில்லை; எத்துணை நுண்ணறிவுடையவரேயாயினும் அமைச்சர்சொற் கேளா அரசர் உய்யமாட்டார்; அன்பென்னும் அருங்குணத்தை எப்பொழுதும் ஈட்டிக்கொள்ள வேண்டும்; "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புளார், என்புமுரியர்

பிறர்க்கு,"; அரசனானவன் தன்னாலும் தன்பரிவாரத்தாலும், கள்வராலும், பகைவராலும், விலங்குகளாலும் யாதும் இடையூறு வாராதபடி தன்னுயிர்போல் மன்னுயிரையும் ஓம்புதல் வேண்டும்; இன்சொல்லே உலகம் விரும்பும்; வன்சொல் எவராலும் இகழப்படும்; பட்சபாதமென்னுந் தீயகுணத்தை அறக்கடிதல்வேண்டும்; உலகத்தாருக்கு அரசனே கண்கண்ட தெய்வம்; தொகுத்துச் சொல்லுகில் தீயனயாவையும் விலக்கி நல்லவை யனைத்தையுங் கடைப்பிடித்து ஒழுகுதலே செங்கோன் மன்னர் செயலாகும்; நீயோ இவையெல்லாம் நன்குணர்ந்துள்ளனை; சொல்லவேண்டும் என்னும் முறைபற்றிச் சொன்னேன்.

இ: முனீஸ்வர! தம்மைக் குருவாகப்பெற்ற நாம் தீயவழியை யடைதற்கு நேருமா?

வசி: பாலகா! மகிழ்ந்தேன்; யான் செல்லவேண்டும், விடைதருகுதி.

இ: (வணங்கி) சுவாமீ சென்றுவாருங்கள்; (போகின்றார்.)

(ஸ்ரீராமரும் மற்றொருபுறமாகச் செல்கின்றார்.)

---

## மூன்றாங் காட்சி.

காலம்-மாலை. இடம்-கைகேசியின் அந்தப்புரம்.

[கைகேசி மஞ்சத்தின்மீது சயனிக்கின்றாள்; மந்தரை (கூனி) வருகின்றாள்.]

மந்: (தனியே) நாளைக்காம் முடிபுனைவது இராமனுக்கு; இந்தக்கருமங் கைகூடுமானால் நான் இருப்பதைப்பார்க்கிலும் இறப்பதே நலம்; இவனே நமக்குச் சன்மசத்துரு; ஏனென்றால் இவன் பாலனாயிருக்கும்பொழுது நான் கிழவியென்பதையும் பாராது தன் செவிலித் தாயென்பதையு மெண்ணாது, என்னைப் பரிகாசஞ்செய்துவந்தான்; தன் கையிற்கொண்ட சுண்டுவில்லிலே மண் உண்டைகளை வைத்து எனது கூனிய முதுகிலே பிரயோகித்தான்; இன்றைக்கும் அவன் செயலை யெண்ணும்போது என்னுடம்பும் மனமும் நோகின்றன; அவனுடைய தீச்செயலை யறிந்த அவன் அன்னையாகிய கௌசலையும் அவனைக் கண்டிக்கவில்லை; சக்கரவர்த்தியிடம் இதனைச் சொல்லவும் என்மனந் துணியவில்லை; என்ன செய்யலாம்; 'செல்லாவிடத்திற் சினந்

குற்றம்" (சிறிது நேரம் யோசித்து) பரதனே எனக்கு இனியவன்; ஆம்! ஆம்! புத்திமான் பெலவானாவான்; உபாயத்தால் எந்தக் காரியந்தான் கைகூடாது; அறிவுள்ளவர் தாம் நினைத்த காரியம் கைகூடமுன்னர் அதனைப் பிறருக்குச் சொல்லமாட்டார்; நான் எண்ணிவந்த காரியத்தை முடிப்பதற்கு இக்கைகேசியே சிறந்த துணையாகும்; சரி ஆனமட்டும் பார்ப்போம்; என் எண்ணத்தை அவள் அங்கீகரியாவிட்டால் 'உன்னைச் சோதிப்பதற்காக அல்லவா இப்படிச் சொன்னேன்' என்று அவளுக்குச் சமாதானஞ் சொல்லுவேன்.

(கைகேசிக்குச் சமீபத்திற் சிறிது சென்று பின் மீளுகின்றாள்.)

ஐயையோ என்னை அறியாமல் என் மனம் படபடக்கின்றது: உடம்பு நடுங்குகின்றது; இராச குடும்ப விஷயமெதனையும் ஆராய்ந்து செய்யவேண்டும்; இக்காரியம் பிரதிகூலமானால் என் உயிருக்கு அழிவுதான்.

(செயலின்றிச் சற்றே நிற்கின்றாள்.)

என்ன பேதைமை! பிறந்தவர் இறப்பது திண்ணம்: ஆறிலும் சா, நூறிலும் சா; வருவது வரட்டும்; ஏ பேதை மனமே! ஏன் அஞ்சுகிறாய்? மந்தரையால் முடியாத காரியம் ஏதுமுண்டா? நின்று யோசிப்பதிற் பயனில்லை; வெள்ளம் வருவதற்கு முன்னரே அணை கோலிக்கொள்ள வேண்டும்: இந்த இரவு நீங்கினால் நாளைக்கு இராமன் சக்கரவர்த்தியாகிவிடுவான்: காலதாமசஞ் செய்யக்கூடாது.

(சமீபத்திற் போய்க் கைகேசியின் பாதங்களை வருடி அவளை எழுப்ப முயலுகின்றாள்; கைகேசி புரண்டு சயனிக்கின்றாள்.)

மந்: அம்மா, சூரியன் அஸ்தமித்து 'இன்னும் ஐந்து நாழிகையும் ஆகவில்லையே; இதற்குள்ளாக என்ன இவ்வளவு தூக்கம்?

(கைகேசி விழிக்கிறாள்.)

கைகாய்! ஏதும் உடம்புக்கு அசௌக்கியமா என்ன?

கை: இல்லை மந்தரா! ஏதோ சிறிது சாய்ந்து அயர்ந்துவிட்டேன்; என்னை அதிகநேரம் நின்று எழுப்பினையோ?

மந்: இல்லை, இல்லை—நல்லாயிருந்தது உன் நித்திரை!

(என்றுகூறிப் பெருமூச்சு விடுகின்றாள்.)

கை: (மந்தரையை உற்றுப் பார்த்து) என்ன மந்தரா! ஏன் வாடிய முகத்துடன் வந்து நிற்கின்றாய்? என்ன விசேஷம்? எதற்காகப் பெருமூச்சு விடுகின்றாய்? உனக்கு வந்த துன்பம் என்ன?

மந்: அம்மா! எனக்கு வந்த துன்பமொன்றுமில்லை; ஒருவர்மீது உண்மையான அன்பு வைத்தால் அவருக்கு வந்த துன்பம் நமக்கு வந்ததுதானே.

கை: சகி! என்ன இன்றைக்கு விபரீதமான வார்த்தை பேசுகின்றாய்? ஆரிடத்தில் அன்புவைத்தாய்? அவருக்கு வந்த துன்பம் என்ன? அதனை ஒளியாமற் சொல்; எந்த இடரையும் என்னால் நீக்கமுடியும்.

மந்: அம்மா! உன்மீதும் உன் மகன் பரதன்மீதும் அல்லாமல் வேறு யாரிடத்தில் அன்பு வைப்பது? நீயோ வஞ்சகமில்லாதவள்; உனக்குவந்த பெரும் ஆபத்தை நீயெண்ணாமல் அசைவற நித்திரை செய்கின்றாய்; இப்படியிருந்தால் நல்லாய் வாழலாம்! ஆம்! ஆம்! கேடு வரும்போது மதிகெட்டு வரும்; உன்மேற் குற்றமில்லை

கை: (புன்னகை செய்து) மந்தரா! எனக்குக் கேடாவது வருவதாவது; என் கண்மணிகள் நால்வருமிருக்கையில் என்ன கேடுவரப் போகின்றது; போ, போ, பைத்தியகாரி; இராமனைப் பெற்ற எனக்கா இடர் வருவது? விடு, விடு உன் வீண்பேச்சை.

மந்: அம்மா! இப்படித்தான் உலகம்; தன் குறைவு தனக்குத்தெரியாது, அன்பின் நிமித்தமாக உனக்கு உண்மையைச் சொல்ல வந்தேன்; நீயோ என் வார்த்தையை அலட்சியம் செய்கின்றாய்; சரி, நான் பொல்லாதவள்; போகின்றேன்; 'பட்டறி கெட்டறி பத்தஞ்சிறுத்தறி' வந்தபின் என்மேற் குற்றஞ் சொல்லாதே; (என்றுசொல்லிப் போக முயலுகின்றாள்.)

கை: (அவள்கையைப் பிடித்து இருக்கச்செய்து) மந்தரா! என்ன கோபத்துடன் செல்கின்றாய்? நீ சொல்லப்போவதைச் சாவதானமாய்க் கேட்கின்றேன்; ஒன்றையும் ஒளியாமற் சொல்.

மந்: வேறொன்றுமில்லை அம்மா, கோசலை புத்தியுள்ளவள்தான்; அவள் தன்புத்தியினாலே பெருவாழ்வைப் பெற்றாள்; நீயோ

கபடமில்லாதவள்; எல்லாரையும் நல்லவர்களென்று எண்ணு வது உன் சுபாவம்; எந்தக் காலத்திலும் தந்திரமில்லாமல் ஒன்றும் முடியாது.

கை: தந்திரமில்லாமல் ஒன்றும் முடியாதென்றதிருக்கட்டும்; கோச லைக்குவந்த வாழ்வென்ன? எனக்குவந்த தாழ்வென்ன? நாய கன் இருவருக்கும் சக்கரவர்த்திதானே; நான் பாதனைப் பெற் றேன், அவள் இராமனைப் பெற்ருள் பிள்ளைகளாக; என்னைப் பார்க்கிலும் அவளுக்கு என்ன கூடிய வாழ்வு?

மங்: அவளுக்கு என்ன கூடிய வாழ்வா? நாளைக்கு அவள் மகன் இராமன் சக்கரவர்த்தியாகப் போகின்ருன்; அப்படியாலுல்—

கை: (முகமலர்ச்சி காட்டி) ஆகா! அப்படியா செய்தி, சந்தோஷம், நமது இராமனுக்கு நாளைக்கா மகுடாபிஷேகம், அதை என் சக்கரவர்த்தி எனக்கு இன்னும் சொல்லவில்லை? இந்த மங்கல செய்தியை எனக்கு நீ தெரிவித்ததற்காக, இந்தா, இந்த முத்துமாலையை அணிந்துகொள்.

(தான் அணிந்திருந்த முத்தாரத்தைக் கொடுக்கின்ருள்; மந்தரை அதனைவாங்கி நிலத்திலெறிந்துவிட்டு மிக்ககோபத்துடன் பார்த்து)

மங்: நீயே அக்கோசலைக்குத் தொண்டு செய்து உள்ள நாள்மட்டும் துன்பத்தை அனுபவித்துக்கொண்டிரு; அவளுடைய பணிப் பெண்களுக்குக் குற்றேவல் செய்ய என்னுல் முடியாது; உன் னேவல் செய்ய வந்தேனல்லாமல் மற்றவர்களுக்குக் குற்றே வல் செய்ய வந்தவளென்று எண்ணுதே.

கை: மந்தரா! நீ இன்றைக்குப் பேசுவதெல்லாம் விபரீதமாயிருக் கின்றன; நீ சொல்லுவதொன்றும் எனக்குப் புலப்படவில்லை; நான் என்னசெய்யவேண்டுமென்கின்ருய்?

மங்: நான் சொல்லுவதென்ன? உன் மகன்மீது உனக்கே அன்பில்லை; நான் கேவலம் ஒரு பணிப்பெண்; அப்பாதனிடத்தில் அதிகம் அன்புடையவளாயிருந்தாலும் என்னுலென்னசெய்ய முடியும்? வேருென்றுமல்ல, நாளைக்கு அந்த இராமனும் சீதையும் சிம் மாசனத்தில் வீற்றிருக்க, உன் புதல்வன் வெறு நிலத்தில் இருக்கப்போகின்ருன்; அதைப்பற்றி உனக்கு எள்ளளவுங் கவலையேயில்லை; இராமனுடைய மகுடாபிஷேகத்தைக் கேட்டு

நீ மகிழ்கின்றாய்: இப்படியல்லவா தாய்க்குப் பிள்ளையில் அன்பிருக்கவேண்டும்; இராமனும் இலட்சுமணனும் நாடாளுவதாம்; பரதன் பார்த்துக்கொண்டிருப்பதாம்; ஏன் இதைப்பார்க்கிலும் பரதனும் சத்துருக்கனும் நாட்டை விட்டுக் காட்டிற் போய்த் தவஞ் செய்யலாமே? வெட்கங்கெட்டகதை, விடு விடு, வெளியிற் பேசாதே.

கை: ஏ மந்தரை, என்ன உளறுகின்றாய்? உனக்கென்ன சித்தப் பிரமையா?

மங்: ஆம், ஆம், நான் கூறுகின்ற வார்த்தை உனக்கு உளறுபடையாய்த்தானிருக்கும், ஐயோ! என்ன அநியாயம்! சூரியன் மரபிற் பிறந்த பரதன், சக்கரவர்த்தியின் அருந்தவப் புதல்வன்; அந்த அரச வரிசையில் வைத்து எண்ணப்படப் பாக்கியம் பெறவில்லையாம்; இப்போதல்லவா விளங்குகின்றது சக்கரவர்த்தி பரதனைக் கேகயநாட்டுக்கு அனுப்பியதன் காரணம்; ஐயோ! தந்தையும் வஞ்சகன், தாயும் அன்பில்லாதவள்; பாவம், அப்பா! பரதா, நீதான் என்ன செய்வாய்! ஏ! அம்மா! நான் சொல்வதைக் கேள்; வீணே என்சொல்லைத் தட்டாதே; இராசவம்சத்திற் பிறந்து, இராசவம்சத்தில் வளர்ந்து, இராசவம்சத்திற் புகுந்து, ஒரு பெரிய சக்கரவர்த்தியின் பத்தினியாயிருக்கின்ற உனக்கு, உன்மகன் அரசனுகவேண்டுமென்ற ஆசை ஏன் வரவில்லை? ஐயோ! உன் மகன் கல்வியிற் குறைந்தவனு? கட்டழகிற் குறைந்தவனு? வலிமையிற் குறைந்தவனு? ஒழுக்கத்திற் குறைந்தவனு? அரசனுக்கு உரிய குணங்களில் அவனுக்கு என்ன குறைவு? அவன் அரசனுகாவிட்டால் இந்த அரிய குணங்களெல்லாம் காட்டுக்கெறித்த நிலாப்போல வீண் போமல்லவா? நான் சொல்வதைச் சற்றே ஊன்றி யோசித்துப் பார்.

கை: (கோபித்து) ஏ! துஷ்டை! என்ன சொன்னுய்? என்னை ஆரென நினைத்தாய்? பேசுவதை அவதானமாகப் பேசு; கேவலம் பணிப்பெண்ணுகிய உனக்கு அரச பரம்பரை முறை தெரியுமா? மூத்த பிள்ளை இருக்க இளைய பிள்ளைக்கு முடிசூட்ட முறை யுண்டோ? நீ இங்கே வந்து எனக்கு இனியவள்போலப் பேசுகின்றாய்; அடி! நீ எனக்கு நல்லவளுமல்ல, என் மகன்

பாதனுக்கு நல்லவளுமல்ல, உற்றுப் பார்த்தால் உனக்கு நல்லவளுமல்ல, ஏதோ கெடுகாலத்தினால் இப்படித் துரோகமான எண்ணங்கொண்டாய்; கொஞ்சமும் புத்தி யில்லாதவளே, சொல்லத்தகாத இந்த வார்த்தையைச் சொன்ன உன் நாக்கையும் அரிந்து, பற்களையுங் கொட்டி விடுவேன் எனக்குண்டான கோபத்திற்கு; ஆனாலும் நீ பழையவளென்றெண்ணி அப்படிச் செய்யாமல் விட்டேன்; என்முன் நில்லாதே, ஓடிப்போ; அல்லது உன் வாயை மூடு.

மந்: (சிறிது பயப்படுபவள்போல் நடித்துப் பின் கைகேசியின் கையை முத்தமிட்டு) அம்மா! எதற்காகக் கோபிக்கின்றாய்? சொல்லுங் காரியத்தை முற்றாய் விளங்காமற் கோபிக்காதே; நியாயஞ் சொன்னால் ஏன் கோபம் வரவேண்டும்? நான் முழுவதும் சொன்னபின், சொல்வது சரியெனக் கண்டால் அதை அங்கீகரி, அன்றேல் தள்ளிவிடு; உனக்கு நன்மையான விஷயத்தைச் சொல்லவந்த நான் நீ கோபித்தாலும் போகேன்; அடித்தாலும் போகேன்; மருந்து குடிக்கும்போது கசப்பாயிருந்தாலும் பின்பு பிணியை நீக்கும்; நான் உன்னிடத்து அன்புள்ளவள்; உன்னுடைய நன்மையைக் கருதி வந்தவள்; வீணே என் வார்த்தையைத் தட்டிக் கெட்டுப்போகாதே.

கை: எனக்கு வந்த கேடு ஒன்றுமில்லை; நீதான் உனக்குக் கேட்டைத் தேடுகின்றாய்.

மந்: அம்மா கைகாய்! உன்பொருட்டு நான் கெட்டாலும் பிரமாதமல்ல; நான் சொல்வதைச் சற்றே பொறுமையுடன் கேள்; உலகத்திலே பணத்தை விரும்பாதவர் ஒருவருமில்லை; 'பணமென்றாற் பிணமும் வாய்திறக்கும்' என்பது பழமொழி; செல்வம் வந்தால் ஒருவனுக்குக் கண் தெரியாது, காது கேளாது, வாய் பேசாது, வந்தவரை மதியான், பழைய சிநேகிதரை 'நீ எந்த ஊர்' என்று கேட்பான்; இது உலக இயல்பு; நாளைக்கு இராமன் அரசனானாற் கோசலை தன்னை மறந்துவிடுவாள்; இங்கேயுள்ள பொருளெல்லாம் அவளுக்கே உரியனவாய்விடும்; உனக்கொன்றுங் கிடையாது; அவள் மனமிரங்கி ஏதுந் தந்தால், நீயும் உன் மகனும் அதை வாங்கிச் சீவனஞ் செய்ய வேண்டிவரும்; அப்படிச் செய்வதற்குத்தான் நீ மனமொத்

துக்கொண்டாலும், கேகயநாட்டிலிருந்து உன் பிதா அல்லது மற்றுஞ் சுற்றத்தவர்கள், உன்னைக் காணவேண்டி வந்தால், ஆருடைய பொருள் கொண்டு நீ அவர்களை உபசரிப்பாய்? இதுதான் இருக்கட்டும்; ஒரு யாசகன் வந்து 'அம்மா! பசிக்கின்றது, ஏதாயினுங் கொடுங்கள்' என்று கேட்டால், நீ என்ன செய்வாய்? உனக்குரிய பொருள் இங்கே ஒன்றுமில்லையே; அந்த யாசகனுக்குப் பொருளில்லையென்று சொல்வாயா? அல்லது கோசலையிடம்போ என்று சொல்லுவாயா? இல்லாவிட்டால், அவளிடத்தில் இரந்து பின்பு அந்த யாசகனுக்குக் கொடுப்பாயா? இல்லையென்று சொல்ல வெட்கப்பட்டுத் தலை குனிந்து நிற்பாயா? என்னசெய்வாய், சொல்லு பார்ப்போம்? கைகாய்! ஏன் ஒன்றுஞ் சொல்கின்றாயில்லை? நீ புத்தியிற் குறைந்தவளல்லவே; என்னுடைய நன்மையை விரும்பி இங்கே நான் ஒன்றுஞ் சொல்ல வரவில்லை; சொல்லுவதெல்லாம் உன் நன்மையை விரும்பித்தான்; இன்னுங் கேள், இராமன் அரசனானால் பின்னும் அவனுடைய சந்ததிக்கேயல்லாமல், பரதனுடைய சந்ததிக்கு ஒருபோதும் இந்த இராச்சியம் வரமாட்டாது; மேலும் உன் தந்தைக்கும் சீதையின் பிதாவாகிய சனகனுக்குமிடையே நெடுநாட் கொண்ட பகைமை உண்டு; சக்கரவர்த்திக்குப் பயந்தே சனகன் உன் பிதாவுடன் பகைமை சாதியாது சும்மா இருக்கின்றான்; அவனுடைய மருமகனாகிய இராமனுக்கு அரசுரிமை கிடைக்குமானால், சனகன் உன் பிதாவை உய்ய விடான்; இது உண்மை; பின்வருங் காரியத்தை முன்னதாகவே யோசிக்கவேண்டும்; ஏதோ சொல்லவேண்டியவையெல்லாஞ் சொல்லிவிட்டேன்; இனி உன் இஷ்டம்.

கை: (சிறிதுநேரம் யோசித்துப் பின் மந்தரையை நோக்கி) ஆம், ஆம், மந்தரா! என் பிரியசகி! ஏதோ என் அறியாமையால் உன்னை வாயில்வந்தபடி தூஷித்துவிட்டேன்; அதனைப் பொறுத்துக் கொள்.

மந்: அம்மா! அதைப்பற்றிக் குற்றமில்லை; அவையெல்லாம் நான் பொறுத்துக்கொண்டேன்; நீயும் உன் மகனும் நல்லாயிருக்க வேண்டுமென்பதே என் ஆசை.

கை: என் மீதும் என் மகன்மீதும், நீ பாராட்டிய அன்பை நான் இன்றுதான் அறிந்தேன்; உன்னைப்போல் நல்லவள் உலகத்தில் எங்களுக்கு ஆரிருக்கிறார்; சரி இருக்கட்டும்; ஆனால் ஒரு சந்தேகம்; நமது சக்கரவர்த்தியும் வசிட்டர் முதலானோரும நாளைக்கு இராமனுக்குப் பட்டாபிஷேகமென்று நிச்சயித்துக் கொண்டால், அதை நாம் எப்படி மாற்ற முடியும்? முடியாத காரியத்தை நினைத்து என் வருந்துவான்? 'கிட்டா தாயின் வெட்டெனமற'

மங்: கைகாய்! நான் இருக்கும்போது நீ எதற்காக யோசிக்கவேண்டும்? உபாயத்தால் முடியாத காரியம் ஒன்றுமில்லை; நான் சொல்லுகிறபடி செய்வாயானால் இராமனல்ல, பரதன்தான் நாளைக்கு அரசன்; இது சத்தியம்; அப்படிச் செய்கின்றாயா? சொல்லு

கை: மந்தரா! நீயே என்புதல்வனுக்குத் தந்தையுந் தாயும்: உன்னையன்றி அவனுக்குத் தஞ்சம் வேறில்லை; எந்த உபாயத்தால் இராமனுக்குப் பட்டங்கட்டாமற் செய்யலாம், சொல் பார்ப்போம்.

மங்: அம்மா! சக்கரவர்த்தி சம்பராசுரனுடன் யுத்தஞ் செய்து அவனை வென்றபோது, நீ அந்த யுத்தத்தில் துணைசெய்தாயென்றும், அதற்கவர் உவந்து, உன்னை இரண்டு வரங் கேட்கும்படி சொன்னாரென்றும், நீ அந்தவரங்களை அப்பொழுது கேளாமல் வேண்டியகாலத்திலே தரல்வேண்டுமெனச் சொன்னாயென்றும் எனக்கு முன்னே நீ கூறினையல்லவா? அது உனக்கு ஞாபகத்திலிருக்கிறதா?

கை: ஆம். ஞாபகந்தான்; அப்படியிருந்தால்?

மங்: சரி; அந்த இரண்டு வரத்தில் ஒரு வரத்தால் இராமனைக் காட்டுக்குப் போகவும், மற்ற வரத்தால் இந்த நாடு முழுவதையும் பரதன் ஆளவுஞ் செய்யவேண்டும்; இதுவே உபாயம்.

கை: (மிகவும் மகிழ்ந்து) மந்தரா! இன்றல்லவோ உன்புத்தியை மெச்சினேன்; இவ்வளவுகாலமும் என்னுடன் நீ யிருந்தபோதும் உன் அருமையை யான் அறியவில்லை; இந்த ஆபரணங்களையெல்லாம் நீயே பெற்றுக்கொள்; இந்தா, பீதாம்பரம், நீ தரித்துக்கொள்.

மங்: அம்மா! எனக்கிவைகளொன்றுந் தேவையில்லை. இருந்தாலும் அன்பாய்த் தந்தவைகளை வாங்கிக்கொள்ளுகின்றேன்.

கை: சரி நீ போய்வா; ஒன்றிற் பரதனுக்கு நான் முடிசூட்டி வைக்கிறேன்; இல்லாவிடில், சக்கரவர்த்தி முன்னிலையிலே பிராணத்தியாகஞ் செய்கிறேன்; இப்படிச் செய்யாவிட்டால் நான் கைகேசியல்லள்.

(மந்தரை செல்ல, கைகேயி யோசித்துக்கொண்டிருக்கின்றாள்.)

---

## நாலாங் காட்சி.

காலம்-மாலை. இடம்-கோசலையின் அந்தப்புரம்.

[கோசலையும் சுமித்திரையும் சம்பாஷித்துக்கொண்டிருக்கிறார்கள்]

கோ: சுமித்திரா! எப்போது வருவார்கள் கேகயநாட்டிற்குப் போன நமது சிறுவர்கள்? அவர்கள் இங்கில்லாதது என் மனத்துக்கு வருத்தமாகவே யிருக்கின்றது.

சுமி: அம்மா! நான் நேற்று விசாரித்தேன் கைகேசிதேவியிடம்; அவள் இன்னும் சிலநாட்களுள் வருவார்களெனச் சொன்னாள்.

கோ: ஆம், ஆம், வரத்தான்வேண்டும்; பரதனோ தமையனைப் பிரிந்திருக்கமாட்டான்

(இதற்கிடையில் ஒரு சேடி குதூகலத்துடன் ஓடிவருகிறாள்.)

சேடி: அம்மணிகாள்! நமஸ்காரம்.

சுமி: ஏது, கமலா, மிகவுஞ் சந்தோஷத்துடன் வருகின்றாய்? என்ன விசேஷம்?

சே: அம்மா! எங்கள் சின்னமகாராசாவுக்குப் பட்டாபிஷேகமாம் நாளைக்கு.

சுமி: யாருக்கு என் மகன் இராமனுக்கா?

சே: ஆம், அம்மா.

கோ: எப்படி யறிந்தாய் நீ?

சே: குருமகாராஜாவும் மஹாராஜாவும் பெரிய மந்திரியார் எல்லோரும் இதைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கோ: அப்படியா? (என்றுசொல்லிச் சும்மாவிருக்கிறாள்.)

சுமி: இந்தா, கமலா, இம்மங்கல செய்தியைச் சொன்னதற்காக இப் பதக்கத்தைப் பெற்றுக்கொள். (சேடி நமஸ்கரித்து வாங்கிக் கொண்டு அனுமதியுடன் செல்கின்றாள்.)

(கோசலையை நோக்கி) அம்மா! என்ன நூதனம்! நமது பிள்ளையின் பட்டாபிஷேகச் செய்தியைக் கேட்டவுடனே மலர்ந்தமுகம் மாறுபட்டுத் துக்கமடைந்த காரணமென்ன?

கோ: சுமித்திரா! மகனுடைய பட்டாபிஷேகச் செய்தியைக் கேட்டு மகிழ்ந்தேன்; ஆனால் தப்புதல்வனுக்கு மகுடஞ்சூட்டிவிட்டுக் கானகஞ் சென்று வானப்பிரஸ்த ஆச்சிரமத்தை அனுசரிக்க வேண்டுமென்பது சக்கரவர்த்தியின் கருத்து; அதை எண்ணியே என்மனஞ் சஞ்சலமடைகின்றது.

(தசரதர் வருகின்றார்,)

கோ-சு: பிராணேசா! வாருங்கள், வாருங்கள்; இங்கே அமருங்கள்.

தச: கண்மணிகாள்! இப்பொழுது உங்களுக்கு ஒரு மங்கலமான செய்தியைத் தெரிவிக்கும்படி வந்தேன் இங்கு.

கோ-சு: பிராணேசா! அதை ஒருவாறு அறிந்தோம் நாங்களும்.

தச: எப்படி அறிந்தீர்கள்!

சுமி: கமலா வந்து சொன்னாள்.

தச: இந்த விஷயம் சந்தோஷந்தானே உங்களுக்கும்.

சுமி: ஆம் சந்தோஷந்தா—ன். —ஆனால்—

கோ: பிராணேசா! நமது புதல்வனிடத்து இராச்சியத்தை ஒப்பித்துவிட்டுத் தாங்கள் பின்னர் என்னசெய்யப்போகிறீர்கள்?

தச: கண்ணே! பின் என்னசெய்வது, சூரியகுலத்தவராகிய நமது முன்னோரது வழக்கம்போல் வானப்பிரஸ்த நிலையை அநுசரிக்கவேண்டியதுதான்

கோ: பிராணநாதா! எங்கள் அரியமக்களை விட்டுத்தானே கானகஞ் சென்று வானப்பிரஸ்தநிலையை அனுசரிக்கப்போகின்றீர்கள்.

தச: கண்மணி! என்ன கேவலம் ஒன்றுமறியாத சாமானிய பெண்களைப்போலப் பேசுகின்றாய்நீயும்; எல்லாம் அறிந்தநீ இதற்கு மனம் வருந்தலாமா? இம்மைக்குரியதாகிய இப்பிரபஞ்சத்தின் கண்ணே இதுகாறுங் கிடந்து தடுமாறினேன்; மறுமைக்குறு

துணையாயுள்ள தவத்தை இனியாயினுஞ் செய்யாவிட்டால் என்கதி என்னாகும்? தவத்திற் பெரியதுதானேது, கண்ணே;

"தவந்தனில்மிக்கதொன் றில்லைதாவில்சீர்த்
தவந்தனை நேர்வதுதானுமில்லையால்
தவந்தனிலரியதொன் றில்லைசாற்றிடில்
தவந்தனக்கொப்பதுதவமதாகுமே" என்றார் பெரியோரும் ஆதலால் மானே! இதற்காக நீ வருந்தாதே; தம் நாயகன் செய்யுந் தவத்திற்குத் துணையாயிருக்கவேண்டியது உன்னைப் போன்ற கற்புடைய மாதர் கடனல்லவா? அல்லாமலும் இராமனைப் பிள்ளையாகப் பெற்ற நீயா இதற்கு வருந்துவது?

கோ: பிராணேசா! பொறுத்தருளவேண்டும்; பெண்மதியால் இப்படிச் சொன்னேன்.

தச: கோசலா, சுமித்திரா! இருக்கள்; நான் கைகேசியிடஞ் செல்கின்றேன்; அவளுக்கும் இந்த மங்கல செய்தியைத் தெரிவிக்க வேண்டும். (செல்கின்றார்.)

---

## ஐந்தாங் காட்சி.

காலம்-முதல்யாமம். இடம்-கைகேசியின் அந்தப்புரம்.

[கைகேசி ஆபரணாதிகளையகற்றிவிட்டுத் தலைவிரிகோலமாய்த் தரையிற் கிடந்து புலம்புஞ் சமையத்தில், தசரதர் பிரவேசிக்கின்றார்.]

தச: (பதைபதைத்து ஓடிவந்து இரு கரங்களாலும் அணைத்துத் தூக்கி) கண்மணி! ஏன் அழுகின்றாய்; வந்த ஆபத்தை அஞ்சாமற் சொல்லு; வருந்தாதே, வருந்தாதே.

கை: சீ! என்னைத் தீண்டாதீர் (என்று சொல்லிக் கையைத் தட்டிவிட்டுப் பின்னரும் நிலத்திற் புரண்டு அழுகின்றாள்.)

தச: இதென்ன விபரீதம்! கண்ணே! நடந்ததென்னே? எவர் உனக்கு இடர் விளைத்தார்? இதோ சொல்லு அனுப்புவேன் யமலோககம் அவர்களை. எழுந்திரு கண்ணே (என்று சொல்லி எழுந்திருக்கச் செய்கிறார்.)

கை: பிராணநாதா! நீரிருக்கும்போது வேறார் எனக்கு இடர் செய்பவர்! என்மீது நீர் வைத்த அன்பெல்லாம் பாசாங்கு; இப்பொழுதுதானறிந்தேன்; போதும், போதும் உமது உபசாரம்.

தச: ஆ! கண்மணி! இன்று நீ பேசுவதெல்லாம் விபரீதமாயிருக்கின்றது; என்ன, என் அன்பு பாசாங்கா? (தனியே) இதென்ன விபரீதம்; இவளேன் இப்படிச் சொல்லவேண்டும்; ஒரு நாளுமில்லாதது; சரி இவளுடைய கருத்தை அறிவோம்; (சமீபத்திற் சென்று) கண்மணி! நீ வருந்தாதே; என்னை வீணில் வருத்தாதே; உண்மை என்னவென்று தெரிவிக்கின்றாயில்லையே; இது பரமசங்கடமாயிருக்கின்றதே.

கை: ஆம், ஆம், உண்மை தெரிவிக்காததுதான் குறை; தெரிவித்தாலென்ன, தெரிவிக்காமல் விட்டாலென்ன; ஆகப்போவதொன்றுமில்லை; என்விதியிது.

தச: பிராணசகி! தசரதன், ஐம்பத்தாறு தேசங்களுக்கும் அதிபன், இவனால் ஆகாத காரியமும் ஒன்றுளதா? என்னவிஷயமாயிருந்தாலும் இப்பொழுதே சொல்; என் அருந்தவப் புதல்வன் இராமனாணை அதனை முடித்தல்லாமல் அன்னாகாரம் அருந்தேன்; இது நிச்சயம் சீக்கிரம் சொல்.

கை: சத்தியந்தானே?

தச: ஆம், சத்தியந்தான்.

கை: பிராணேசா! சம்பரனைக் கொன்றகாலத்தில் எனக்கு இரண்டு வரந் தந்தீர்கள்; ஞாபகமிருக்கின்றதா?

தச: ஆம் ஞாபகமிருக்கின்றது.

கை: இப்பொழுது தரவேண்டும் அந்த இரண்டு வரத்தையும்.

தச: (கைகொட்டி நகைத்து) கண்ணே! இதற்காகவா இத்தனை கஷ்டம்; கேள் தருகின்றேன்.

கை: என் மகன் பரதனுக்கே பட்டஞ்சூட்டவேண்டும்.

தச: சரி, அப்படியானால் இராமன்?

கை: இராமனா? அவன் பதினான்குவருஷம் வனவாசஞ் செய்யவேண்டும்.

தச: (திடுக்கிட்டு) நங்காய்! என்ன, என்னைப் பரீட்சிக்கின்றனையா? அல்லது பரிகாசமா?

கை: பரீட்சையுமல்ல, பரிகாசமுமல்ல; உண்மைதான்.

தச: ஆ! சண்டாளி, சண்டாளி!!

(மூர்ச்சையாகிப் பின் ஒருவாறு தெளிந்து பெருமூச்சு விடுகின்றார்; கைகேசியைச் சினந்து பார்க்கின்றார்; திடீரென்றெழுந்து ஸ்தம்பம்போல் நிற்கின்றார்; சிறிது உலாவுகின்றார்; பின்னர் உட்காருகின்றார்;)

(தனக்குள்) ஐயோ! நான் காண்பதுங் கேட்பதும் கனவா! அல்லது நனவா! இங்கே நிற்பவள் கைகேசிதானா! சீ! அவளா இப்படிச் சொல்வாள்; ஒருபோதும் இப்படிச் சொல்லமாட்டாள். சீ! என்ன பேதைமை? வரங்கொடுத்ததுண்மை; அவள் இப்போது கேட்டதுண்மை? ஆ சண்டாளி! நீ இப்படியும் எண்ணலாமா? என் கண்மணி, என் ஆருயிர், என் அருந்தவப் புதல்வன். அவன் காட்டிற்குப் போவதா; ஐயோ! இது என்னால் நினைக்க முடியவில்லை; சீ! இந்தத் துஷ்டையை என் உடைவாளால் ஒரே வெட்டாய் வெட்டிவிட்டாலோ? இல்லை, அது மதியீனம்; ஸ்திரிஹத்தி வந்து சூழும்; ஆ தெய்வமே! என்ன செய்வேன்; (சிறிது யோசிக்கின்றார்.) இவளைக் கோபிப்பதால் ஆவதொன்றுமில்லை; என் செல்வன் காட்டிற்குப் போனால் நான் உயிர் தரியேன்; சரி இவளை இரந்தாவது கேட்போம் என் பிள்ளையைக் காட்டிற்கனுப்பவேண்டாமென்று; (அருகிற் சென்று) என் கண்ணே, கைகாய்! ஏன் என்னை வீணாய் வருத்துகின்றாய்; நான் சொல்வதைச் சற்றே கேள். இராமனிருக்கப் பரதன் முடிசூடுவது முறைமையல்ல; அன்றியும், பரதனே இதற்கு ஒருபோதும் உடன்படமாட்டான்; அவன்தான் ஒருவாறு உடன்பட்டாலும், இந்த உலகம் அதனை ஒப்புக்கொள்ளாது; வீணாக ஏன் வசைக்காளாகவேண்டும்? மானே! விட்டுவிடு இச்சஞ்சல புத்தியை; இராமன் தானாக இந்த இராச்சியத்தை விரும்பினவனல்லன்; நானே வலிந்து கொடுக்க ஒருவாறு உடன்பட்டான்; இதை அவன் அறிந்தால் தானே சந்தோஷமாய் இவ்விராச்சியத்தைப் பரதனுக்குக் கொடுப்பானே; உனக்கு இஷ்டமானால் உன் மகன் நாடாளட்டும்; கண்ணே, கைகையர்கோன் மானே! தெவிட்டாத தேனே! மற்ற ஒரு கேள்வியைமாத்திரம் மறந்துவிடு; (இரந்து கேட்கின்றார்.)

கை: அரசே! தந்த வரத்திற்கு மாறு சொல்லலாமா?

தச: பெண்ணே! வரந்தந்தது மெய்யே; அதற்குமாறில்லை; ஆனால், வரந் தந்துவிட்டேனென்று இப்படி என்னை வருத்தலாமா? நீ கூறுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் என் உள்ளத்தை ஊடுருவுகின்றதே; ஐயோ! பேயைத்தானும் இப்படி இரந்தால் அது மனமிரங்குமே; உன் நெஞ்சம் கல்லா, இரும்பா; கரையாததென்ன?

கை: அரசே! அதிகம் பேசுவதினால் ஆவதொன்றுமில்லை; தந்த வரத்தை இல்லையென்று சொல்லுதல் உம்மைப்போன்ற சக்கரவர்த்திக்கு அழகல்ல; நீரே சத்தியந் தவறுவீராகில் உலகத்தில் இனி யாரை நம்புவது?

தச: (பதைபதைத்து) யான் ஒருபோதுஞ் சத்தியந் தவறேன்; சரி உன் இஷ்டப்படி உன் மகன் இந்த இராச்சியத்தை ஆளட்டும்; அவன் அரசனானால் இந்த நாடு முழுவதும் உனக்கேயாகும்; என்மகன், என் கண், என் ஆருயிர், எல்லா உயிர்கட்கும் நன்மகன், அந்த இராமன் உன் நாட்டின் ஒரு கோணத்திலிருக்கட்டும்; மாதே! அவனை இந்த நாட்டை விட்டுக் காட்டுக்குப் போகும்படிமாத்திரஞ் செய்யாதே; இந்த ஒரு வரத்தையும் நீ எனக்குத் தா.

கை: அப்படியா சொல்லுகின்றீர்! நல்லாயிருக்கின்றது!!

தச: ஆ கண்ணே! இன்னமும் உன் நெஞ்சம் இரங்கவில்லையா? உன் வாயினின்றும்வந்த கொடிய வார்த்தையைக் கேட்டமாத்திரத்தே சரீரம் பதறுகின்றது; உள்ளம் துடிக்கின்றது; நாவும் உலருகின்றது; என்னருந்தவச் செல்வன், ஆருக்கு மினியான், ஒரு பாபமுமறியான்; அவன் என் கண்முன் நின்று மாத்திரம் நீங்குவானாகில் என் உயிர் தரியாது. கண்ணே! என் ஆருயிர்க் காதலி! என் உயிர் உன் அடைக்கலம்; உன்னையன்றித் தஞ்சம் வேறில்லை; (என்று இரந்து காலில் விழுகின்றார்.)

கை; அரசே! கொடுத்த வரத்தை இல்லையென்று சொல்வது உமக்கு நீதியல்ல; இனி உமக்கு நான் என்ன சொல்வது? நீர் மறுத்தால், பெண்பழிக்கு ஆளாவீர்.

தச: (வீழ்ந்து அயர்ந்து பின்னர் ஒருவாறு தேறி) அடி சண்டாளி! பாதகி! இதுவரையும் உன்னை இரந்தேன்; உன் கன்னெஞ்

சமோ கொஞ்சமுங் கரையவில்லை; சத்தியந் தவறினேனென்னுந் தோஷத்தையும் என்மேற் சுமத்துகின்றனே! அடி கொடியவளே! புருஷன் இறந்தானென்றவுடனே அக்கினியிற் பிரவேசித்துவிடுவர் கற்புடைய மங்கையர்; இதுவரைக்கும் புருஷனைக் கொன்ற பெண்கள் உலகத்திலில்லை; நீயோ பாவம் பாராது, பழிநோக்காது, கணவனென்றுஞ் சிந்தியாது, உன் கொடிய வார்த்தையால் என் உயிரைக் கொள்ளைகொண்டாய்; (தனியே) ஆ! என்ன காலம், சொர்க்கலோகம் வரையுஞ்சென்று இந்திரனுக்காகச் சம்பரன் முதலிய அசுரர்களைச் செயித்து வெற்றிமாலைசூடிய தசரதன், தன் மனைவியால் மடிந்தானென்றால் உலகம் நகையாதா! (கைகேசியை நோக்கி) ஏ இரக்கமற்றவளே! சற்றே யோசி.

கை: அரசே! இதற்காகவா இவ்வளவு மனஸ்தாபம் அடைகின்றீர்? உமது முன்னோனாகிய சிபிச்சக்கரவர்த்தி, சத்தியத்தைக் காக்கும்படி, ஒரு புறாவின்பொருட்டு உயிரைப் பெரிதாக எண்ணாது, தன்னுடைய தசையைத் தானே அரிந்து கொடுத்தான்; இன்னும் எத்தனையோ அரசர்கள் சத்தியத்தைக் காத்தனர்; அக்குலத்துதித்த நீர் இப்படிச் சத்தியந் தவறலாமா?

தச; (கோபித்து) என்னையா சத்தியந் திறம்பினவனென்று சொன்னாய்; உன்னுடைய வரமிரண்டும் ஈந்தேன் ஈந்தேன். நீயும் உன் மகன் பரதனும் இப்பூமியை ஆண்டு என்றும் நீங்காத வசைக்கு ஆளாகுங்கள்; அடி வஞ்சகி! என் மகன் கானகம் போகட்டும்; நானும் வானகம் போகின்றேன். (மூர்ச்சையாகின்றார்.)

---

## ஆறுங் காட்சி.

காலம்-அதிகாலை. இடம்-தசரதன் அத்தாணிமண்டபம்.

[வசிட்டர், சுமந்திரன், சோதிடர் பல வேந்தர்கள் மற்றுமுள்ளோர் ஒருங்குகூடியிருக்கின்றனர். மகுடாபிஷேகத்துக்குரிய ஆயத்தங்களை த்தஞ் செய்யப்படுகின்றன.]

சோ: (வசிட்டரை நோக்கி) சுவாமீ! முகூர்த்தகாலஞ் சமீபிக்கின்றது.

வசி: ஆம் இதோ சக்கரவர்த்தியை வரவழைக்கின்றேன்.

(சுமந்திரனை நோக்கி) மந்திரீ! நீ விரைவிற் சென்று சக்கரவர்த்திபை அழைத்துவருததி.

சும: தங்கள் ஆஞ்ஞைப்படியே செய்கின்றேன். (சுமந்திரன் செல்லல்.)

---

## ஏழாங் காட்சி.

காலம்-காலே. இடம்-கைகேசியின் மாளிகை.

[கைகேசி ஒரு மஞ்சத்தில் ஏகாந்தமாயிருக்கின்றாள்; ஓர் தோழி அவளிடம் வருகின்றாள்.]

தோ: அம்மா, பெரியமந்திரியார் மஹாராசாவைத் தேடிவந்திருக்கின்றார்,

கை: சரி, அப்படியானல் அவரை யிங்கே யழைத்துவா.
(தோழி சென்று சுமந்திரனை யழைத்துவருகின்றாள்.)

சும: அம்மா! நமஸ்காரம், மகுடாபிஷேகத்துக்குரிய ஆயத்தங்களனைத்தும் ஆயின; முனிவர், மஹாராசாவை அழைத்துவரும்படி ஆஞ்ஞாபித்தார்.

கை: மஹாராசா வருவார்; அதிருக்கட்டும், நீ சீக்கிரம் சென்று யான் வரும்படி சொன்னதாக, இராமனுக்கறிவிப்பாய்.
(சுமந்திரன் செல்கின்றான்.)

கை: (தனக்குள்) ஐயோ! எப்படி இந்த விஷயத்தை நான் இராமனுக்குச் சொல்லுவேன்; இதனல் என்ன துன்பங்கள் சம்பவிக்குமோ தெரியவில்லே; இதைக் கேட்டமாத்திரத்திலே சக்கரவர்த்தி மூர்ச்சையாயினர்; நானேன் இவ்வடாத கருமத்திற் கையிட்டேன்; (சிறிதுநேரம் யோசித்து) சீச்சீ! என்ன வீண்புத்தி; இப்படியெல்லாம் யோசித்தால் நாம் எடுத்துக்கொண்ட காரியங் கைகூடுமா? அல்லாமலும் மந்தரை என்னைக் குறித்து என்ன சொல்லுவாள்.
(இதற்கிடையில் ஒரு தோழி ஓடிவந்து கைகேசியை வணங்கி)

தோ: அம்மணி! சின்னமஹாராசா தங்களிடம் வருகின்றார்.

இ: (கைகேசியை வணங்கி) அம்மா! சிறியேனை இவ்விடம் அழைத்தது எதற்காகவோ?

கை: அப்பா இராமா! உன் பிதா உனக்கு அறிவிக்கும்படி எனக்கு ஆஞ்ஞாபித்த விஷயம் ஒன்றுண்டு; கேட்பாய்.

இ: அம்மா! என் பிதா ஆஞ்ஞாபிக்க, தாங்கள் அதை எனக்குச் சொல்வதாயிருந்தால், என்னைப்போற் பாக்கியசாலிகள் யாருளர்?

கை: இராமா! "ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்,
 தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு,
 பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
 ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரசன் றானே"
இதுவே அரசனுடைய கட்டளையாகும்.

இ: அன்னையே! என் பிதாவல்ல, நீங்கள்தானும் இவ்விராச்சியத்தை விட்டு என்னை வனம்போகும்படி ஆஞ்ஞாபித்தால் யான் அதற்கு மறுப்பேனா? யான் ஆண்டாலென்ன? என் தம்பி ஆண்டாலென்ன? அதிலொரு பேதமுமில்லை? என் தம்பி அடைந்த செல்வம் யானடைந்ததற்குச் சரிபல்லவா? என் பிதாவின் கட்டளையைக் கடப்பதற்கு அஞ்சியல்லவா பட்டத்திற்கு உடன்பட்டேன்; இப்பொழுது இப்பெரிய சங்கடத்தினின்றும் நீங்கலானேன்; யான் இதோ தவஞ் செய்வதற்காகக் கானகஞ் செல்கின்றேன்; தங்கள் அநுமதியும் பெற்றுக் கொண்டேன்;

(என்று கூறி, பிதா இருக்குந் திக்கை நோக்கிச் சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து செல்கின்றார்.)

---

## எட்டாங் காட்சி.

காலம்-முன்பகல், இடம்-கோசலையின் மாளிகை,

[கோசலை தனியே ஒரு மஞ்சத்தின்மீதிருக்குப்போது ஸ்ரீராமர் அவ்விடஞ் செல்கின்றார்.]

கோ: (தனக்குள்) ஆகா! இதோ என் செல்வன் வருகின்றான்; இஃதென்னவிந்தை! இன்றைக்கல்லவா மகுடாபிஷேகம்; என் சிறுவன் இன்னும் மங்களஸ்நானம் செய்யவில்லையே; தலையில் கிரீடத்தைக் காணேன்! மகுடம் சூட்டுதற்கு ஏதும் இடையூறுண்டோ? சரி, சமீபத்தில் வந்தபின் அறிந்துகொள்வோம்.

(ஸ்ரீராமர் வந்து தாயை வணங்க, தாய் மகனை அணைத்து)

அப்பா கண்மணி! இப்படி அமருவாய்; என் செல்வமே! ஏன் இன்னும் மகுடாபிஷேகம் ஆகவில்லை? நீ மகுடம் புனைந்து என்

ஆசிர்வாதத்தைப் பெறுதற்காக இங்கே வருவாயென்றல்லவா எதிர்பார்த்திருக்கேன்? பட்டாபிஷேகத்திற்கு ஏதும் பங்க முண்டா?

இ: அம்மா! பட்டாபிஷேகத்திற்கு வந்த பங்கமொன்றுமில்லை; உமது இனிய புதல்வன், எனது அரிய தம்பி பரதன்; அவனுக்கே பட்டாபிஷேகம் நடக்கும்,

கோ: மகனே! ஒருபோது மூத்தவனிருக்க இளையவன் முடி சூடுதல் முறைமையல்லவென்று உலகம் சொல்லக்கூடும்; அதில் என்ன, நீ ஆண்டாலென்ன பரதன் ஆண்டாலென்ன? அதிலொரு பேதமுமில்லை; அல்லாமலும், உன்னிலும் பார்க்கப் பரதனே எனக்கு இனியவன்; குழந்தாய்! நீ உன் இராச்சிய உரிமையைப் பரதனுக்குக் கொடுத்து, அவன் இந்த நாட்டைப் பரிபாலனம் செய்ய, அவனுக்குத் துணைபுரிந்துகொண்டு ஒற்றுமையாக நெடுங்காலம் வாழ்வாய்.

இ: அம்மா! நீர் சொல்வது சரிதான்; என் தம்பி அரசுபுரிவதே எனக்கும் ஆநந்தம்; ஆனால், கூட இருந்து வாழுதற்கு ஒரு தடையுளது; என்னவெனில் நான் கடைத்தேறும்வண்ணம், என்பிதா என்னைக் காட்டிற்சென்று தவஞ் செய்யும்படி ஆஞ்ஞாபித்தார்.

கோ: (இவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் பதை பதைத்துச் சிறிது நேரம் மௌனமாயிருந்து பின்னர்) ஆ மகனே! என் காதிற்படுங் கொடுஞ் சொற்கள் உண்மைதாமா? இது யாருடைய வஞ்சனை? அப்படியானால் நான் உயிர்வாழ்வேனா? சக்கரவர்த்திக்கு நீ யாதாயினுங் குற்றஞ் செய்ததுண்டா? ஆ தெய்வமே! இந்தக் கொடுமையைக் கேட்கவா யான் பிறந்தேன்; ஐயையோ! என்னுள்ளம் பதறுகின்றதே; (என்று கூறி அயர்கின்றாள்.)

இ: (தாயைக் கைகளால் வாரி எடுத்துத் தேற்றி) அம்மா! ஏன் வருந்துகின்றீர்? எல்லாம் அறிந்த நீர் இப்படி வருந்துதல் தர்மமா? எனது பிதாவை, யான் பொய்ப்படுத்தலாமா? தந்தைசொன்மிக்க மந்திரமில்லையல்லவா? என் அரிய தம்பி அரசாள்கின்றான்; பிதாவின் சொற்படி யான் காட்டிற்குச் செல்கின்றேன்; இதனைப் பார்க்கினும் யான் பெறவேண்டிய பாக்கியம் வேறென்ன? இதற்கு நீர் வருந்தவேண்டிய காரணமென்ன?

கோ: அப்பா கண்ணே! பரதன் அரசாளட்டும்; அது எனக்குஞ் சந்தோஷந்தான்; நீமாத்திரங் காட்டிற்குப் போகவேண்டாம்.

இ: அம்மா! நீரும் இப்படிச் சொல்லலாமா!

"தந்தைசொன் மறுப்பவர்கள் தாயுரை தடுப்போர்
அந்தமறு தேசிகர்தம் ஆணையை யிகந்தோர்
வந்தனைசெய் வேதநெறி மாற்றினர்கள் மாறுச்
செந்தழல வாயநிர யத்தினிடை சேர்வார்" என்பது

ஆன்றோர் வாக்கியமல்லவா? இந்தச் சந்திர சூரியர்கள்தாம் தத்தம் நெறி தவறிச் செல்ல நேர்ந்தாலும், யானோ என் தந்தை சொற் கடக்கமாட்டேன்; இதற்காக நீர் மனம் வருந்துதல் வியர்த்தமாகும்; சிறிதும் வருந்தவேண்டாம்.

கோ: மகனே! பிதாவின் வார்த்தையைக் கடக்கும்படி யான் ஒரு போதுஞ் சொல்லேன்; யானோ உன்னைப் பிரிந்து இங்கு இருக்கமாட்டேன்; நீ வனம் செல்லும்பொழுது உன்னுடன் என்னையுங் கூட்டிச்செல்.

இ; அன்னையே! நீரும் உலகத்திலுள்ள சாமானிய பெண்களைப் போற் பேசலாமா? என்னைப் பிரிந்தமையால் துக்க சாகரத்திலமிழ்ந்திக் கிடக்கின்ற என் பிதாவுக்கு வேண்டிய ஆறுதல் சொல்லித் தேற்றுதலை விட்டுப் புத்திரனுடன் கூடிக்கொண்டு காட்டிற்கு வருகிறேன் என்று சொல்லுதல் உம்மை ஒத்த கற்புடைய மகளிர்கட்கு அழகாகுமா? பதிவிரதா தர்மத்தை மறந்துவிட்டீரா? அன்றியும் இவ்விராச்சிய பாரத்தை என் தம்பியிடம் ஒப்பித்துவிட்டு வானப்பிரஸ்த நிலையை யனுசரிக்கும்பொருட்டு, என்பிதா கானகம் செல்லுங் காலத்தில் நீரும் அவருடன் செல்லவேண்டியது இல்லற தருமமல்லவா? அல்லாமலும், விண்ணுலகவாசிகளாகிய தேவர்களும் தவத்தையே விரும்புவர்; தவத்தைப்போற் சிறந்த செல்வம் எமக்குக் கிட்டுமோ! முன்பு கௌசிகருக்குக் குற்றேவல் செய்தமையால் நான் பல நன்மைகளை யடைந்தேன் அல்லவா? இப்பொழுதுங் காட்டிற்குச் சென்று அங்குள்ள தபோதனருக்கெல்லாந் தொண்டு செய்வதனுல் யான் அதிகபலனை அடையமாட்டேனு?

கோ: அடா என் கண்ணே! தவஞ்செய்வதற்கு இது உனக்கு வயதல்ல; இதுகாறும் இராச்சியபரிபாலனஞ் செய்துவிட்டு

இப்பொழுதுதான் தவஞ்செய்ய எண்ணங் கொண்டார் உன் பிதா.

இ: அம்மா! உமது விருப்பத்தின்படி இப்பொழுது தவஞ்செய்வதைத்தான் விட்டாலும் உத்தம க்ஷத்திரியகுலத்திற் பிறந்த யான், தந்தைவாக்கிய பரிபாலனஞ் செய்யாமல் விடலாமா? பாசுராமன் தந்தைசொற் கடத்தற்கு அஞ்சித் தாயைச் சிரச்சேதஞ் செய்த செய்தியை அறியீரா? அப்படியிருக்க யான் பிதாசொல்லைத் தட்டலாமா? அம்மா! உம்மைப் பலமுறை நமஸ்கரிக்கின்றேன்; இவ்விஷயத்திற்குத் தடைசொல்லாதீர்.

கோ: (சிறிதுநேரம் யோசித்துத் தனக்குள்) என்ன செய்யலாம்; என் மகனோ பிதாவின் சொல்லைக் கடக்கமாட்டான்; அப்படிக் கடப்பது முறைமையுமல்லத்தான்; சரி நான் சக்கரவர்த்தியிடஞ் சென்று, பரதன் நாடாளட்டும் என் பிள்ளையைக் காட்டிற்கு அனுப்பவேண்டாம் என்று அவரை இரந்து, இவனை வனஞ் செல்லவிடாது தடுப்பேன். (ஸ்ரீராமனை நோக்கி) என் கண்ணே! நீ ஒன்றிற்கும் அவசரப்படவேண்டாம்; யான் உன் பிதாவிடம் போய்வருகின்றேன். (செல்கின்றாள்.)

இ: (தாயை வணங்கியபின் தனக்குள்) என்ன செய்யலாம்! என் அன்னையோ பெரிதும் வருந்துகின்றாள்; விதியை விலக்க எவராலும் முடியாது; யான் எனது சிற்றன்னையாகிய சுமித்திரையிடஞ் சென்று, என் பிரிவால் வருந்துகின்ற தாய் தந்தையரைத் தேற்றும்படி அவளிடஞ் சொல்வதே புத்தியாகும்.

(போகின்றார்.)

---

## ஒன்பதாங் காட்சி.

காலம்-நண்பகல். இடம்-கைகேசியின் மாளிகை.

[தசரதர் மூர்ச்சையுற்றுக் கிடக்கின்றார்; கைகேசி ஒருபுறத்திலிருக்கின்றாள்; சக்கரவர்த்தியைக் காணும்படி வந்த கோசலை அவர் நிலையைக்கண்டு பரிதபிக்கின்றாள்.]

கோ: பிராணேசா! பிராணேசா!! ஐயையோ இதென்ன அநியாயம்; ஒன்றுந் தெரியவில்லையே, (விரைந்து சென்று சக்கரவர்த்தியைப் பார்த்து அவர் மூர்ச்சையுற்றிருப்பதை யுணர்ந்து, பின், தன் கையால் பரிசித்துக் கைகேசியின் முகத்தைப் பார்த்து, அவள் முகவாட்ட

மின்றி யிருத்தலால் நடந்த செய்தியை அவள் வாயிலாக அறிய மண மெழாது பின்னரும் புலம்புகின்றான்.) பிராணேசா! ஏன் என்னுடன் பேசாதிருக்கின்றீர்? யான் உமக்குச் செய்த குற்றமென்ன? யான் அறியாமல் ஏதும் பிழை செய்திருந்தாலும் பொறுக்கக்கூடாதா? மலரணையின் மீது துயிலும்போது மலர்க் காம்புதானும் உடம்பில் உறுத்தினால் அதனைப் பொறுக்கமாட்டாத நீர், இப்படி வெறுந்தரையில் அயர்ந்து கிடக்கலாமா? உமது அறிவைக் கொள்ளைகொண்ட கொடியவர் யாவரோ அறியேன்; ஐயோ உள்ளம் பதறுகின்றதே! உடம்பு நடுங்குகின்றதே! இதற்கு என்னசெய்வேன்! ஆ மகனே! இராமா! உன் தந்தையார் கிடக்கும் நிலையை வந்து நீ பார்க்கவில்லையா!

(இங்ஙனம் புலம்புஞ் சமையத்தில் அவ்வழுகையொலியைக் கேட்டு வசிட்டர் வருகின்றார்.)

வசி: இது என்ன ஆச்சரியம்! அரண்மனையில் அழுகையொலி கேட்பதென்ன! (சமீபத்தில் வந்து) இதென்ன அநியாயம்! அம்மா கோசலா! நமது சக்கரவர்த்திக்கு நேர்ந்த ஆபத்தென்ன? நீ ஏன் வருந்துகின்றாய்?

கோ: சுவாமீ! நானொன்றுமறியேன்; இங்கு வந்தேன், இந்த அநியாயத்தைக் கண்ணாற் கண்டேன்.

வசி: அம்மா! நீ வருந்தாதே! (எனச் சொல்லிக் கைகேசியை நோக்கிய பொழுது, அவள் கிலேசமின்றி யிருத்தலைக் கண்டு தனக்குள்) அரசன் இந்த நிலையிற் கிடக்கவும், இவள் சிறிதுஞ் சஞ்சலமுறாதிருக்கின்றாள்; ஏதோ இவள்தான் இத்துன்பத்துக்கெல்லாங் காரணமாயிருக்கவேண்டும்; சரி, இவளை விசாரித்தறிவோம். (சமீபத்திற் சென்று கைகேசியை நோக்கி) அம்மா, கைகாய்! இங்கு என்ன நடந்தது? சக்கரவர்த்தி ஏன் இந்த நிலையிற் கிடக்கின்றார்? உனக்குத் தெரியாதா? தெரிந்தால் ஒன்றும் ஒழியாமற் சொல்லுதி.

கை: சுவாமீ! விசேஷமொன்றுமில்லை; என்மகன் பரதன் நாடாளவும், இராமன் பதினான்குவருடம் காடாளவும் வரந்தரும்படி கேட்டேன்; தந்தார், பின்பு இராமன் பிரிவையெண்ணி இப்படி அயர்ச்சியானார்; இதுவே நடந்த சமாச்சாரம்.

வசி: அப்படியா சமாச்சாரம்! (என்று கூறிச் சக்கரவர்த்தியை இருகரங்களாலுந்தூக்கி அவர் உடம்பிற்படிந்திருந்த புழுதியைத் துடைத்து எழுந்திருக்கச் செய்து) அரசர்பெருமானே! வருந்தாதீர்; வருந்தாதீர்; ஏதோ பெண்புத்தியினுற் கேட்கத்தகாத வார்த்தைக் கேட்டுவிட்டாள்; இப்பொழுது அவளே இராமனுக்கு மகுடஞ் சூட்டிவைப்பாள்; எழுந்திரும், எழுந்திரும்; வருந்தாதீர்,

தச: இராமா,—இராமா!—

வசி: வேந்கே! எதற்கா இத்தனை கவலை? உமது புத்திரனைக் கானகஞ் செல்லாமல் யான் தடுக்கின்றேன்; நீர் உமது கவலையை நீக்கும்.

தச: (சிறிது அயர்ச்சி நீங்கி) சுவாமீ! எனது புத்திரனைக் காட்டிற்கேகாது தடுத்து முடிசூட்டச்செய்து எனது சத்தியமுந் தவருநபடி காத்தல் உமது கடனுகும்.

வசி: ஆ.! நான் அப்படியே செய்கின்றேன்; நீர் வருந்துவதொழிதிர். (கைகேசியை நோக்கி) அம்மா, கைகயர்கோன் பாவாய்! சக்கரவர்த்தியை வருத்தாதே; உன் புதல்வனுகிய இராமனை முடிசூடச்செய்து, சக்கரவர்த்தியினுயிரைக் காத்து, எங்கள் எல்லோரையும் மகிழச்செய்து, என்றும் அழியாத புகழைப் பெறுதல் உன்கடனுகும்; நீயோ சாமானியமானவளல்லை; மேலான அரசகுலத்திற் பிறந்தவள்; சக்கரவர்த்தியின் இனிய தேவி; உத்தமனுகிய பரதனின் தாய்; கற்பிற் சிறந்த நீ இப்படிச் சித்தம் மாறுபடலாமா? உன்னுடைய ஒரு வார்த்தையால் எல்லாக் கருமமுங் குறைவின்றி இனிது நடைபெறும்.

கை: சுவாமீ! சக்கரவர்த்தி சத்தியந் தவறுவாரென்ருல் நான் உயிரோடிருக்கமாட்டேன்; இப்பொழுதே பிராணத்தியாகஞ் செய்துவிடுவேன்.

வசி: (தனக்குள்) ஆகா! இவள் இப்படிப்பட்ட கொடியவளா! தன் ருபகன் இறக்கின்ருன் என்பதைப் பார்க்கின்ருளில்லை; தனக்கு வரும் வசையை எண்ணுகின்ருளில்லை; கொஞ்சமும் நெஞ்சம் இரங்காமல் இருக்கின்ருள்; யான் எதுஞ் சொன்னுலும் இவள் கேட்கிறவளாய்த் தோற்றவில்லை; சீ! இவளை இரந்து கேட்பதென்ன? (சிறிதுநேரம் யோசித்துச் சினந்து) ஏ, அறிவில்லாதவளே! ஏன் இப்படிப் பிடிவாதமாய் நிற்கின்ருய்?

உன்மனத்திற் கொஞ்சமேனும் இரக்கமில்லையா? நீ பெண்ணு அல்லது பேயா? அல்லது இராட்சசியா? கொண்ட கணவ னுக்குக் கூற்றமாய் வந்தவளே; நீயா இராமனைக் காட்டிற்குப் போகச்சொன்னுய்? சக்கரவர்த்தி ஒருபோதுஞ் சொல்லமாட் டார்; அடி பாவி! உன்னைப்போன்ற பெண்கள் உலகத்தி லுண்டா?

தச: அடி சண்டாளி! என் பிள்ளையைக் காட்டிற்குப் போகும்படி சொல்லிவிட்டாயா? அவன் காட்டிற்குப் போய்விட்டானு? அடி நீலி! நீ இதுவரையும் என்மீது அன்புள்ளவள்போல் நடித்து வந்தாய்; அதை நான் மெய்யென நம்பிவிட்டேன்; வஞ் சகி! இன்றல்லவோ உன் சுவபகுணத்தைக் கண்டேன; அன்று அக்கினி சாட்சியாக உன்னை நான் பெண்டிராகக் கொண்டது பொய்; என் முடிவுக்கு ஒரு யமனைத் தேடிக்கொண்டேன்; அடி பாதகி! என் கண்மணிபோன்ற புதல்வனைக் காட்டுக்கனுப் பினுய், என்னையுங் கொல்கின்றுய்; அடி கொடியவளே! உன் கழுத்திலுள்ள மங்கல்ய சூத்திரக் கயிற்றை, உன்மகன் முடி சூடும்பொழுது, அவனுக்கு ரெட்சாபந்தனமாகக் கட்டிக்கொள். (முனிவரை நோக்கி) முனிவரே! இக்கைகேசி எனக்குப் பெண் டிருமல்லள்; இவள் மகன் பரதன் எனக்குப் பிள்ளையுமல்லன்; என் அந்திய கருமத்தில் அவன் பங்குபற்றக்கூடாது; (கோச லையை நோக்கி) கோசலா! என் செல்வன் வந்து என்னைக் கண்டு போதற்கு இந்தக் கொடுநீலி விடவில்லை; அவன் உன்னிடமும் வரவில்லையா?

கோ: (மிகவும் வருந்தி) பிராணநாத! எப்படித்தான் துன்பம் வந்தா லும் உண்மையினின்றுந் தவறலாமா? பிள்ளைமேற்கொண்ட ஆசையினுல் நீர் சத்தியந் தவறினுல் உலகம் பழிசொல்லு மல்லவா? என்ன செய்யலாம்; முன்செய்த ஊழை மாற்ற முடியுமா?

தச: ஐயோ, என்னருஞ்செல்வமே! இராமா! நீ காட்டிற்குப்போய் விட்டாயா? இந்த அந்தியகாலத்தில் நீ பால்வார்க்க நான் அதை உண்டு மகிழ்ச்சியுடன் உயிர்விடப் பாக்கியம் பெறவில் லையா? அடா மகனே! பரசுராமனை வென்றுயல்லவா? அப்

பொழுது நான் மிகவும் மகிழ்ந்திருந்தேன்; இன்றைக்கு உனக்கு மகுடஞ்சூட்டி, நீ சிம்மாசனத்தில் இருக்கும் பவனியைப் பார்த்து மகிழஇருந்த நான், நீ மரவுரி தரித்துக் காட்டுக்குப் போகின்றாய் என்பதைக் கேட்டு மனந் தரிப்பேனு? அப்பா, கண்ணே! இந்த வயோதிக காலத்தில் இப்படி என்னைத் துன்பப்பட விட்டு நீ போகலாமா? உனக்கு இரக்கமில்லையா! அல்லது நான் இப்பொழுது படும்பாட்டை நீ அறியாயா? (சிறிது நேரம் அயர்ந்து பின் தெளிந்து) அடா மகனே! நான் வானகம் போகமுந்தி நீ கானகம் போகமாட்டாய்; உன்னைப் பிள்ளையாகப்பெற்ற நானல்லவோ உன் அருமையை அறிவேன்; ஆ மகனே! உன்னைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு நான் இக்கைகேசியுடன் வாழ்வேனென்று எண்ணியா நீ போகத் துணிந்தாய்; நீ கானகஞ் செல்லுமுன் என்னுயிர் நீங்காவிட்டால் நான் இக்கைகேசியைப் பார்க்கிலும் கொடியவனுவேன். (என்று கூறி மூர்ச்சையாகின்றார்.)

வசி: அந்தோ! சக்கரவர்த்தி மயக்கமடைந்தனரோ! இதென்ன இது, அரசே! அரசே!

தச: இராமா!—இராமா!

வசி: இராமனை இதோ காட்டுக்குப் போகாமல் அழைத்துவருகின்றேன், வருந்தாதீர்; எழுந்திரும், எழுந்திரும்.

தச: (அயர்ச்சி நீங்கி) சுவாமி! அப்படிச் செய்வீராஞல் என் உயிரைக் காத்தவராவீர்.

வசி: வேந்தே! அஞ்சவேண்டாம்; நான் உமது புதல்வனை இதோ அழைத்துவருகின்றேன். (போகின்ருர்,)

கோ: பிராணநாதா! பிராணநாதா!

தச: (மெல்லிய சத்தமாக) கண்மணி, கோசலா!

கோ: நான் படுந் துன்பத்தைக் கண்ணுற் பார்க்கக்கூடாதா? எங்கள் செல்வன் வருவான்; வருந்தவேண்டாம், வருந்தவேண்டாம்.

தச: என் கண்மணி வருவானு? வருவது நிசந்தானு?

கோ: ஆம் பிராணநாதா! வருவான்; வருந்தவேண்டாம்.

தச: கோசலா! இந்தக் கொடிய கைகேசி கூனிசொல்லைக் கேட்டு பரதனை நாடாளச் செய்தாள்; அது என மனத்தை வருத்தவில்லை; ஐயோ! ஒன்றுமறியாப் பாலன், என் கண்மணியைக் காட்டிற்கனுப்ப ஏன் துணிந்தாள்? என் புதல்வனைக் காட்டிற்கனுப்புவதால் இவளடையும் பயனென்ன? ஆ பாதகி! பாதகி! என் மனங் கொதிக்கின்றதே.

கோ: பிராணேசா! நீர் வருந்தவேண்டாம்; முனிவர் போகின்றார்; எங்கள் மகன் மீண்டு வருவது நிச்சயம்.

தச: கோசலா! வீண் எண்ணம்; அவன் காட்டிற்குப் போவதும், அதனால் என் உயிர் நீங்குவதும் நிச்சயம்.

கோ: பிராணேசா! ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்கள்; எங்கள் முனிவர் போனால் முடியாத காரியம் ஏதும் உண்டோ?

கை: ஒன்றுமில்லை; ஆனால் இது முடியாது; கண்ணே, கோசலா! விதியை யாரால் விலக்க முடியும்?

கோ: பிராணநாதா! எதற்காக இப்படிச் சொல்லுகின்றீர்கள்?

தச: கோசலா! நான் சொல்வதைக் கேள்; எனக்குப் பழைய ஒரு சாபமுண்டு; அதனை இப்பொழுது சொல்லாவிட்டால் நீ ஆறுதலடையமாட்டாய்; கவனமாய்க் கேள்; முன்னொருநாள் நான் வேட்டையாட விரும்பிக் கானகஞ்சென்று, சிங்கம் புலி முதலிய மிருகங்களைக் கொன்று, யானைவேட்டையாடும்படி ஒரு நதிதீரத்தில் பற்றைமறைவில் பதுங்கியிருந்தேன்; அப்பொழுது யானை தண்ணீர்குடிக்குஞ் சத்தங் கேட்டது; கண்ணாற் பாராமல் சத்தத்தை இலக்காகக் கொண்டு அம்பெய்தேன்; உடனே 'ஆ! என் பிதாவே' என்று ஓர் சத்தங் கேட்டது; நான் அம்புவில்லை எறிந்துவிட்டுச் சமீபத்திற் போனபொழுது ஒரு சிறுவன் அம்பேறுண்டு உதிரம் ஆறாய்ப்பெருகக் கிடந்ததைக் கண்டு, நான் பதைபதைத்து அச்சிறுவனை எடுத்தணைத்து குழந்தாய்! நீ ஆர் என்றுகேட்டேன்; அச்சிறுவன் 'ஐயா! நான் சலபோசனுடைய மகன்; என்பேர் விருத்தசேனன்; என் பிதா மாதாக்கள் குருடர்கள்; இக்காட்டிலே சிறிதுதூரத்திலிருந்து தவஞ்செய்கிறார்கள்; அவர்களுடைய தாகத்துக்குத் தண்ணீர் கொண்டுபோகும்படி இங்கே வந்தேன்; வந்த இடத்தில் இப்படி நேர்ந்தது; உம்மேற் குற்றமில்லை; உம்மைப் பார்த்தால்

ஓர் அரசன்போற் காணப்படுகின்றீர்; அரசனே! நீர் வருந்த வேண்டாம்; விதியை யாரால் வெல்ல முடியும்; நீர் எனக்குச் செய்யவேண்டியது ஒன்றுண்டு; தண்ணீர்த்தாகத்தால் வருந்து கின்ற என் பெற்றோரிடம் இத் தண்ணீரைக் கொண்டுபோய்க் கொடுத்து, அவர்கள் அருந்தியபின் நான் இறந்த செய்கியை யும், இறக்கும்பொழுது அவர்களுக்கு வணக்கஞ்செய்தேன் என்பதையுஞ் சொல்லுதிர்; இதுவே நீர் எனக்குச் செய்ய வேண்டிய உபகாரம்' என்று கூறி இறந்தான்; கோசலா! நான் அடங்காத் துயரத்துடன் தண்ணீர் எடுத்துக்கொண்டு அவர் கள் இருக்குமிடந் தேடிப்போனேன்; தங்கள் பிள்ளையைக் காணவில்லையேயென வருந்திக்கொண்டிருந்த அவர்கள், நான் சென்ற அடிச் சத்தத்தைக் கேட்டமாத்திரத்தே 'அப்பா மக னே! இவ்வளவு நேரமும் எங்கே நின்றாய்; இங்கே வா முத்த மிட்டுக்கொள்வதற்கு' என்றார்கள்; நான் ஒன்றும் பேசாது தண்ணீரைக கொண்டுபோய்க் கொடுத்தலும் 'நீ யார்? எங்கள் பிள்ளை எங்கே' என்று கேட்டார்கள்; நான் நிகழ்ந்த செய்தி யைச் சொன்னவுடன் அவர்கள் ஆற்றொணுப் புத்திரசோகங் கொண்டு வருந்தினார்கள்; அப்பொழுது நான் அறியாமற் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்றும், பிள்ளை யைப்போல நானே இருந்து உங்கள் குற்றேவலைச் செய்கிறே னென்றும் இரந்து கேட்டேன்; அவர்கள் என்வார்த்தையைக் கேளாது, புத்திரசோகத்தால் உயிர் விட்டார்கள்; உயிர்விடும் பொழுது 'அரசனே! நீ ஆராய்வில்லாமல் எங்கள் பிள்ளையைக் கொன்றபடியினால் நீயும் எங்களைப்போற் புத்திரனை இழந்த சோகத்தால் இறப்பாய்' எனச் சாபமிட்டார்கள்; உடனே நான் பதைபதைத்து, அவர்களை வணங்கி யான் இறந்தாலும், என் பிள்ளையினுயிரைக் காத்தருள வேண்டுமென்று கேட் டேன்; அப்பொழுது அவர்கள் சிறிது மனமிளகி, புத்திரனைப் பிரிந்த சோகத்தால் இறப்பாயெனப் பிரதிசாபமிட்டார்கள்; ஆதலால் கோசலா! இராமன் வனம்போவதும் நான் இறப்ப தும் நிச்சயம்; நீ வருந்தாதே! வருந்தாதே! இராமா—இராமா —(மூர்ச்சையாகின்றார்.)

## பத்தாங் காட்சி.

காலம்-நண்பகல். இடம்-அத்தாணி மண்டபம்.

[பற்பலதேசத்து மன்னர்களும் பிரதானிகளும் மற்றுமுள்ளோருங் குழுமியிருக்குஞ் சமையத்தில் வசிட்டர் வருகின்றார்.)

அரசர்களில் ஒருவன். சுவாமீ! ஏன் காலதாமசம்; முகூர்த்தமாகியும் இன்னுஞ் சக்கரவர்த்தியும் ஸ்ரீராமரும் இங்கு வாராமலிருப்பது என்னவோ? மகுடாபிஷேகத்திற்கு ஏதும் இடையூறுண்டா?

வசி: (யாதும் மறுமொழியின்றி யோசிக்கின்றார்.)

வேறொருவன்: முனிவர் பெருமானே? மாளிகையில் ஏதோ அழுகுரல் கேட்கின்றது; நடந்த விசேஷமென்ன? சொல்லியருள வேண்டும்.

வசி: வேந்தர்காள்! நிகழ்ந்த செய்தியை என்னவென்று சொல்வேன்; நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது; சக்கரவர்த்தியின் இரண்டாம் மனைவியான கைகேசியாற் பட்டாபிஷேகத்திற்குப் பங்கம் நேர்ந்தது.

ஓர் அரசன். சுவாமீ! என்ன தெரிவிக்கின்றீர்கள்? பட்டாபிஷேகம் இன்றைக்கு நடக்கமாட்டாதா! கைகேசி செய்த இடையூறென்ன?

வசி: அரசர்காள்! கைகேசி சக்கரவர்த்தியிடத்தில் இரு வரம் பெற்றிருந்தாள்; அவற்றின்படி தன் மகன் பரதன் நாடாளவேண்டுமென்றும், இராமன் பதினான்குவருடம் வனவாசஞ் செய்ய வேண்டுமென்றும் பிடிவாதஞ் செய்கின்றாள்; ஆதலால் இராமன் முடிசூடாது இப்பொழுது கானகஞ் செல்லலாயினான்; இதுவே நிகழ்ந்த சமாச்சாரம்

(இதைக் கேட்டமாத்திரத்தில் சபையிலுள்ளோ ரெல்லாரும் மனம் வருந்துகிறார்கள். சபை குலைகின்றது.)

---

## பதினோராங் காட்சி.

காலம்-பின்பகல். இடம்-சுமித்திரையின் மாளிகைக்கணித்தாயுள்ள ஒருவீதி.

[இலக்குமணன் யுத்தசன்னத்தனாய் அடங்காச் சினமுற்று வீராவேசத்துடன் வருகின்றான்.]

இல: ஆகா! நன்றாயிருக்கின்றது!! நன்றாயிருக்கின்றது!!! என்ன நினைத்தாள் அக்கைகேசி? ஏன் அண்ணன் காட்டிற்குப் போவதாம்; பரதன் பாராளுவதாம்; இலக்குமணனு மிருக்கின்றானென்பதை இவள் சற்றும் நினைக்கவில்லைப் போலும்; அரியிருந்து அரசாண்ட சிம்மாசனத்தில் ஒரு நரியிருந்து நாடாள முடியுமா? எனது தமையனுக்கு யானே முடிசூட்டிவைப்பேன்; அரிபிரமேந்திராதி தேவர்களாயினும், மற்றும் விண்ணுலகத்தாராயினும், இந்த மண்ணுலகத்தாராயினும், வேறு யாராயினுஞ்சரி, தடுக்க முடியுமானால் தடுக்கட்டும்; கைகேசி தான் அப்படிச் சொன்னாலும் சக்கரவர்த்தி எப்படி என் தமையனைக் காட்டிற்கனுப்ப எண்ணலாம்; ஆகா! அவரும் வயோதிகத்தால் மதிமயங்கிவிட்டாரா? சரி, நான் இதோ மாளிகைக்குச் சென்று பட்டாபிஷேகத்தை முடித்து வைக்கிறேன்.

(என்று இப்படிச் சொல்லுவதற்கிடையில் இலக்குமணனது ஆர்ப்பரிப்பைக்கேட்டு ஸ்ரீராமர் அவ்விடத்திற்கு வருகிறார்.)

இ: (புன்னகைசெய்து) தம்பி! பகைவர் முன்னிலையிலல்லாமல் ஒரு போதுங்கோபங்கொள்ளாத நீ இப்பொழுது இப்படிக் கோபாவேசத்துடன் நிற்கவேண்டிய காரணமென்ன?

இல: அண்ணா! நானே உமக்கு முடிசூட்டிவைக்கத் துணிந்தேன்; கைகேசியானாலுஞ்சரி, வேறு யாரானாலுஞ்சரி தடுக்க முடியுமானால், தடுக்கட்டும்.

இ: இலட்சுமணா! இது கோபிக்கத்தக்க இடமல்லவே; எப்படி உனக்குக் கோபம் வரலாம்?

இல: அண்ணா! சக்கரவர்த்தி பலாத்காரமாய் இவ்விராச்சியத்தை உமக்குத்தர, நீர் தந்தைசொல்லைத் தட்டமுடியாமல் இதனை ஏற்றுக்கொண்டீர்; பின்னர்க் கைகேசி காரணமொன்றுமில்லாமல் உம்மைக் காட்டுக்கனுப்பத் துணிந்தால் இவற்றையெல்லாங் கேட்ட யான் சும்மாவிருப்பேனா? இவ்விடத்தில் வராத கோபம் வேறெவ்விடத்திற்றான் வரும்; இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு நான் சும்மாவிருந்தால், தந்த இராச்சியத்தை இல்லையென்று சொன்ன சக்கரவர்த்திக்கு ஒப்பாவேனல்லவா?

இ: தம்பி! எய்தவன் இருக்க அம்பை நோகலாமா? அரசாளுவ தற்கு உடன்பட்டது என்மேற் குற்றம்; நாம் செய்த குற்றத் திற்காகப் பிறரைக் குறைசொல்லலாமா? அல்லாமலும், விதியை விலக்க என்னால் முடியுமா?

இல: அண்ணா! கைகேசியின் மதியையும், இந்த விதியையும் என் னுடைய ஓர் அம்பினால் மாற்றி உமக்கு முடிசூட்டி வைக்கின் றேன்; அனுமதி செய்யவேண்டும்.

இ: தம்பி! கோபம் மூண்டுவிட்டால் வாயில்வந்ததெல்லாம் பேச லாமா? எம்மை அரிதிற்பெற்ற தாய்தந்தையரைக் கோபிக்க லாமா? 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ'மல்லவா?

இல: அண்ணா! உம்மையல்லாமல் எமக்கு யார் தாய்தந்தையர்கள் இருக்கிறார்கள்; இக்கொடிய செய்கையைச் செய்யத்துணிந்த அவ்விருவருமா எனக்குத் தாய்தந்தையர்கள்?

இ: தம்பி! யான் சொல்வதைக் கேள்; வரங்கேட்டவள் பெற்ற தாய், கொடுத்தவர் நமது பிதா; அரசாள இருப்பவனோ எனது அரிய தம்பி; நாம் அடையப்போகுஞ் செல்வமோ தவம்; இவற்றைப் பார்க்கிலும் உலகத்திலே பெறக்கூடிய பேறு என்ன இருக்கின்றது? அல்லாமலும், தம்பி, இலட்சுமணா! உடன்பிறந்த தம்பியைக் கொன்று, தாயை வென்று, தந்தை யைப் பொய்யனாக்கி, இந்த இராச்சியத்தைப் பெறுவதில் என்ன புண்ணியம்; செல்லாவிடத்திற் சினந் தீது என்பதை நீ அறி யாயா? அப்பா, இலட்சுமணா! இதோ நீ கொண்ட கோபந் தணி குதி.

இல: ஆம், ஆம்! என்செய்யலாம்? குங்குமஞ்சுமந்த கழுதைபோல் வில்லும் அம்புக்கூடுஞ் சுமக்கப் பிறந்தேனல்லாமல் வேறு என்ன என்னாலாகப்போகின்றது!

இ: தம்பி! இன்னும் உனக்குப் புலப்படவில்லையா? நான் பிதாவி னுடைய சொல்லைத் தட்டக்கூடாதென எண்ணிக் காட்டிற்குப் போகத் துணிந்தேன்; அப்படியிருக்க என் வார்த்தையை நீ தட்டுவதால் ஏதும் நன்மை உண்டாகுமா?

(இதனைக் கேட்ட இலட்சுமணன் உடனே கோபம் நீங்கி ஒன்றும் பேசாதவனாய்த் துன்பத்துடனே தலைகுனிந்து நிற்கின்றான்.)

இ: தம்பி! நீ ஒன்றுக்கும் வருந்தவேண்டாம்; வா, எங்கள் அன்னை சுமித்திராதேவியிடம் போவோம். (இருவருஞ் செல்கின்றார்கள்.)

---

## பன்னிரண்டாங் காட்சி.

**காலம்-பின்பகல். இடம்-சுமித்திரையின் மாளிகை.**

சுமி: எல்லாம் விதியின் வண்ணமே முடியும்! கைகேசியினுடைய மனமா இப்படி மாறுபட்டது? இப்படியானால் உலகத்தில் யாரைத்தான் நம்பலாம்?

(இதற்கிடையில் ஸ்ரீராமரும் இலட்சுமணனும் வர அவர்களைக் கண்டு சுமித்திரை வீழ்ந்து புலம்புகின்றாள்.)

இ: (தனது சிற்றன்னையை இருகரங்களாலும் அணைத்தெடுத்து) அம்மா! நீரும் இப்படிக் கலங்கலாமா? என்பிதாவைச் சத்தியந் திறம்பச்செய்து நான் இராச்சியத்தை விரும்பினால், உலகத்தவர் நம்மை ஏளனஞ் செய்யாரா? பதினான்கு வருஷம் எனக்குப் பதினான்கு நாளல்லவா? வருந்தாதீர்.

சுமி: கண்மணி! உன்னைத் தனியே காட்டிற்கு அனுப்பிவிட்டு நாங்கள் எப்படி உயிர் தரிப்போம்?

(ஒரு சேடி மரவுரியைக் கையிற் கொண்டுவருகிறாள்.)

சேடி: இளவரசே, இந்த மரவுரியை உம்மிடங் கொடுக்கும்படி உமது சிற்றன்னையார் தெரிவித்தாள்.

இ: அப்படியா! இங்கே தருகுதி.

இல: (தனக்குள்) கைகேசி செய்கின்ற அகியாயத்தையெல்லாஞ் சகித்தற்கு என் அண்ணன் இருக்கின்றார்; அவைகளைக் கண்ணுற் பார்த்தற்கு நான் இருக்கின்றேன்.

இ: (சுமித்திரையை நோக்கி) அம்மா! இன்னும் யான் காலதாமசஞ் செய்வது சரியல்ல; அனுமதி கொடுக்கவேண்டும் யான் வனம் போவதற்கு.

சுமி: அப்பா மகனே! உன் தம்பி இலட்சுமணன் இருக்கும்வரைக்கும் நீ தனியே வனம்போக முடியாது. (இலக்குமணனைநோக்கி) மகனே! உன் அண்ணனுடன் காட்டுக்குப் போவதற்குப் புறப்படு; இன்னமும் நீ இங்கே நிற்பது குற்றம்; உன் தமையன் செல்லும் அந்தக் காடே உனக்கு அயோத்திநாடாகும்;

உனக்கு அரசனும் இராமனே; உனக்குத் தாய் நானல்ல, சீதையே; உன்னை இராமனுடைய தம்பி என்று எண்ணாதே, அடிமை என்று நினைத்துக்கொள்; இவன் இங்கே மீண்டு வந்தால் நீயும் வா; இவனுக்கு ஏதும் அபாயம் நேர்ந்தால் நீ முந்தி உன் உயிரைக் கொடு; (என்று சொல்லிக் கண்ணீர்விட, இருவரும் விடைபெற்றுக்கொண்டு அப்புறஞ் செல்கின்றார்கள்.)

---

## பதின்மூன்றுங் காட்சி.

காலம்-பின்பகல். இடம்-சுமித்திரையின் மாளிகைக்குப் பின்புறத்தேயுள்ள ஒரு வீதி.

[ஸ்ரீராமரும் இலட்சுமணனும் மாவுரி தரித்துக்கொண்டு வருகின்றார்கள்.]

இ: தம்பீ! நீயும் என்னுடன் வரவேண்டுமென்று பிடிவாதமாய் நிற்கின்றாய்; எமது தந்தையும் அன்னையரும் இந்தச்சமையத்தில் துக்கசாகரத்தில் அமிழ்ந்தியிருக்கின்றார்கள்; நீயும் என்னுடன் வந்துவிட்டால் இவர்களைத் தேற்றுபவர் யார்? என்னுடைய மற்றைத் தம்பிமாரும் இங்கில்லை; ஆதலால், எனக்காக நீ இங்கேயிருந்து அவர்களுக்குத் தேறுதல் சொல்லுதி, பிதா மாதாக்கள் மனம்வருந்த விடலாகாது.

இல: (பதைபதைத்து) அண்ணா! நான் ஏதுங் குற்றஞ்செய்திருந்தால் அதைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்; ஜானகிக்கும் எனக்கும் உம்மையன்றி வேறு கதியுண்டா? பெண்புத்தி கேட்டு, பெற்ற பிள்ளையைக் காட்டுக்கனுப்பிவிட்டுத் தான்மாத்திரம் நாட்டில் உண்டுடுத்து வாழ்கின்றார் சக்கரவர்த்தி; அச்சக்கரவர்த்தியின் புதல்வன்தானே இவனென்றெண்ணியா எனக்கு இந்த வார்த்தை சொன்னீர்; நான் ஏதோ உமக்குக் குற்றஞ் செய்திருக்கவேண்டும்; அல்லாவிடில் இந்தவிதமான வார்த்தை ஒருபோதும் உமது வாயினின்றும் வரமாட்டாது; என்னைத் தன்னந்தனியே இங்கே விடுத்து நீர் காட்டுக்குப் போதல் அண்ணா! ஒருபோதுஞ் சரியல்ல.

இ: தம்பீ! நீ உன் இஷ்டப்படியே என்னுடன் வருவாய்.

(இருவருஞ் சிறிதுதூரஞ் செல்ல வசிட்டர் எதிரே வருகின்றார்.)

வசி: மகாதேவா! ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற்பாலதோ! இன்றைக்கு மகுடந்தரிக்கவேண்டிய இவன் மரவுரிதரிக்கலானான்; அரிபிரமேந்திராதி தேவர்களாலும் விதியை வெல்ல முடியாது; கூனியையும் அவள் கூறிய புத்தியைக்கேட்ட கைகேசியையுங் குற்றஞ்சொல்வதாற் பயனில்லை. (இதற்கிடையில் ஸ்ரீராமரும் இலட்சுமணனும் விரைந்து வந்து முனிவரை நமஸ்கரிக்க அவர் ஆசீர்வதித்து) அப்பா, ஸ்ரீராமா! தந்தைவாக்கிய பரிபாலனத்தின் பொருட்டு நீ கானகஞ் செல்லத் துணிந்தாய்; ஆனால் பின்வருவனவற்றை யோசித்தாயில்லை; நீ கானகஞ் சென்றால் உன் தந்தை இறப்பது நிச்சயம்; இவ்விருத்தாப்பிய தசையில் அவரை வருந்தவிட்டுப் போவது உனக்கு அழகல்ல.

இ: சுவாமீ! எனது பிதாவுக்கு வந்த துன்பத்தை நீக்குதல் தங்கள் கடமையாகும்; அவர் வாக்கைச் சிரமேற்கொண்டு கானகம் போதல் எனது கடனாகும்.

வசி: இராகவா! உன்னைக் காட்டிற்குப் போகும்படி உன் தந்தை ஒருபோதுஞ் சொல்லவில்லை; கைகேசி இப்படிக் கேட்பாளென்று அவர் கனவிலும் நினைத்ததுமில்லை; மந்தரையின் சூழ்ச்சியால் கைகேசி இத்தீய செயலுக்கு உடன்பட்டாள்.

இ: சுவாமீ! என் பிதா சத்தியத்தைக் காக்கும்படி என் சிற்றன்னைக்கு இவ்வரத்தைக் கொடுக்கவேண்டியவரானார்; சிற்றன்னையோ என்னைக் காட்டிற்கனுப்ப மனங்கொண்டாள்; இவையெல்லாம் அறிந்த தாங்கள் இப்படித் தடுத்துச் சொன்னால் யான் செய்யக்கூடியதென்ன? எவ்விதமான சஞ்சலம் நேர்ந்தாலும் பெரியோர் மனம் தடுமாறலாமா?

வசி: (தனக்குள்) ஆம்! ஆம்!! தேவர்கள்செய்த தவமும் பொய்க்குமா? ஸ்ரீராமா! உனது இஷ்டத்துக்கு மாறாக இனி யான் ஒன்றுஞ் சொல்லவில்லை; சுகமே போய் மீண்டு வருவீர்கள்;

(இருவரும் முனிவரை வணங்கிச் செல்கின்றார்கள்; வசிட்டரும் மீண்டு செல்கின்றார்.)

---

## பதினாலாங் காட்சி.

காலம்-பின்பகல். இடம்-ஸ்ரீராமரது மாளிகையின் அந்தப்புரம்.

(ஸ்ரீராமர் சீதையிடஞ் செல்கின்றார்.)

சீதை: (தனிமொழி) பிராணேசர் வருகின்றார்; (சிறிது உற்றுநோக்கி) ஐயோ! இது என்ன ஆச்சரியம்; முடிசூடும்படி சென்ற என் காதலர் ஏதோ விபரீதமான உடை தரித்து வருகின்றார்; (இதற்கிடையில் ஸ்ரீராமர் சமீபத்தில் வருதலும் அவரை வணங்கி) பிராணேசா! பட்டாபிஷேகம் என்பதாகச் சென்றீர்களே; அது நடக்கவில்லைப்போலிருக்கிறது; இதென்ன வேறுபாடான உடை தரித்திருக்கின்றீர்கள்.

இ: கண்மணி! என் அருமைத்தம்பி பரதனே முடிசூடப்போகின்றான்; யான் வனஞ்சென்று முனிவர்களைச் சேவிக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றேன்; சிலவருடஞ் செல்ல மீண்டு இங்கே வருவேன்; நீ உன் மாமியருடனே இங்கேயே இருப்பாய்; பரதன் முடிசூடவேண்டுமென்பதும், யான் பதினான்கு வருடம் வனவாசஞ் செய்யவேண்டுமென்பதும் என் சிற்றன்னையின் விருப்பம்; தந்தையின் ஆஞ்ஞை; எனக்கும் அது ஆநந்தம்; ஆதலால் என் பிரிவை எண்ணி நீ மனம் வருந்தாதே.

சீ: பிராணேசா! பிதாமாதாக்களுடைய சொல்லைத் தட்டக்கூடாதுதான்; நான் உமக்கு ஏதும அபராதஞ் செய்ததுண்டோ? அப்படிச் செய்திருந்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டியதல்லவா?

இ: கண்ணே! ஏன் இப்படிச் சொல்லுகின்றாய்; நீ ஒரு அபராதமுஞ் செய்ததில்லையே; அப்படிச் செய்தாலும் பொறுத்துக்கொள்வேன் யான்.

சீ: பிராணபதி! என்னைப் பிரிந்து நீர் உயிர்வாழ்ந்தாலும் உம்மைப் பிரிந்து நான் உயிர்வாழ்வேனா? ஏன் உமது வார்த்தையால் எனது மனசை வருத்துகின்றீர்?

இ: மானே! வனவாசம் எப்படிப்பட்டதென நீ அறியாய்; கல்லும் முள்ளும் நிறைந்த கானகத்தில் நடந்தால், பஞ்சினும் மிருதுவாகிய உன் பாதம் வருந்துமென்று அஞ்சியே இப்படிச் சொன்னேன்; அல்லாமலும் கானகஞ் செல்லும் மார்க்கத்திலே பாலை

வனங்களையுங் கடந்து செல்லவேண்டி வரும்; பொறுமையுடையார் உள்ளம்போலக் கொதிக்கின்ற அந்தப் பாலைவனத்தைக் கடத்தல் உன்னால் முடியாது; ஆதலால், கண்ணே, சீதா! நீ இங்கேதானேயிரு; வனவாசத்தால் வருந் துன்பங்களைச் சகிக்க உன்னால் முடியாது.

சீ: பிராணநாதா! உமது பிரிவாகிய துன்பத்தைப் பார்க்கிலும் வனவாசத்தால் வருந் துன்பம் பெரிதல்லவே? நீர் இருந்தால் காடு நாடாகும்; நீர் இல்லாவிட்டால் நாடு காடாகும் எனக்கு; (என்று கூற அதனைக்கேட்ட இராமர் மௌனமாய் நிற்க, அம்மௌனத்தை அனுமதியாகக்கொண்டு சீதை மரவுரி புனையும்படி அறையுட் பிரவேசிக்கின்றாள்.)

இ: (தனிமொழி) ஜானகியும் என்னுடன் காட்டிற்கு வரவேண்டுமென்று பிடிவாதமாய் நிற்கின்றாள்; இவளுங் கானகம் வருவாளாயின் பல துன்பங்கள் நேருமென்பது நிச்சயம்; இங்கேதானே விட்டுச் சென்றாலும் என் பிரிவாற்றாமல் வருந்துவாள்; இருதலைக் கொள்ளி எறும்புபோலானேன்; இதற்கு என்செய்வேன்.

(ஜானகி மரவுரிபுனைந்து தன் நாயகன் கரத்தைப் பற்றிக்கொள்ளுகின்றாள்.)

சீ: பிராணேசா! வாருங்கள் கானகஞ் செல்ல!

இ: சீதா! நீயும் காட்டுக்கு வரப் புறப்பட்டு நிற்கின்றாய்; ஆனால் உன்னாற் பலகஷ்டங்கள் நேரிடும்.

சீ: ஆம். நான் வந்தால் துன்பமாக்கும்; என்னைப் பிரிந்து போனால் ஒரு துன்பமும் வாராதாக்கும்.

(ஸ்ரீராமரும் சீதையும் புறப்பட்டு இலட்சுமணனுடன் வெளியே போகின்றனர்.]

## பதினைந்தாங் காட்சி.

காலம்-மாலை. இடம்-அயோத்திமாநகரப் புறவீதி.

[ஸ்ரீராமரும் இலட்சுமணனும் சீதையும் தேர்மீதிருக்க சுமந்திரன் தேர் செலுத்திக்கொண்டு செல்கின்றான். அயோத்தியிலுள்ள ஆடவர் மகளிர்களிருபாலாரும் ஸ்ரீராமரது பிரிவாற்றாது அலறிக்கொண்டு பின் செல்கின்றார்கள்.]

இ: (சுமந்திரனை நோக்கி) மந்திரி! இந்த நகரத்திலுள்ள சனங்கள் என்மீது கொண்ட அன்பினால் என்னுடன் கானகம் வரத் துணிந்தார்கள்; அவர்களைக் கானகம வராது தடுத்தலோ அரிது! இச்சோலைக்கணித்தாய் இரதத்தை நிறுத்துதிர் (என்று சொல்லச் சுமந்திரன் தேரை நிறுத்துகின்றான்.) நீர் சிறிது நேரம் இங்கே நின்று பின்னர் இரதத்துடன் நகரத்துக்கு மீளுவீராகில் தேர்ச்சில்லின் சுவட்டைப் பார்த்த சனங்கள் யானும் நகரத்துக்கு மீண்டுவிட்டேனென்று எண்ணித் தாமும் மீண்டு செல்வர்.

சும: இளவரசே! உமது விருப்பப்படி செய்கின்றேன்; அதிருக்க, உம்மை இங்கே விட்டுப் பிரிந்து எப்படி அயோத்திக்குப் போவேன்; சக்கரவர்த்தி 'சுமந்திரா! எங்கே எனது ஆசைமகன்' என்று கேட்டால் யான் என்ன கூறுவேன்? உமது மக்களையும் மருகியையும் தேரின்மீது கொண்டுபோய் நகர்ப்புறத்தே விட்டேனென்று சொல்ல எப்படி மனந்துணிவேன்? நீவிர் கானகஞ் சென்றீர்களென்ற வார்த்தையைக் கேட்டவுடனே சக்கரவர்த்தி உயிர் விடுவரே! இந்தக் கொடிய சமாச்சாரத்தைச் சக்கரவர்த்திக்குத் தெரிவித்து அவர் உயிரை நீக்குவேனாகில், நான் கூற்றினுங் கொடியேனாவேன்; இராகவா! அயோத்திமாநகரத்தில் நடக்குஞ் சஞ்சலத்தைப் பார்த்துக்கொண்டு உயிர்வாழ என்னால் முடியாது; யானும் உங்களுடன் காட்டிற்கு வருகின்றேன்; புறக்கணியாதீர் (என்றுகூறி வீழ்ந்து அழுகின்றான்.)

இ: (அவனை அணைத்தெடுத்து) மந்திரத் தலைவரே! கல்வியறிவில் பிரகஸ்பதியும் உமக்கு ஒப்பாகமாட்டார்; எல்லாம் அறிந்த நீர் கேவலம் சாமானிய மனிதர்கள்போல் இப்படிப் புலம்பலாமா? நீர்க்குமிழி போன்ற நிலையற்ற வாழ்க்கையை நிசமென்று நம்பலாமா? "மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம் போலச் சாந்துணையுஞ் சஞ்சலம்" என்பது நீர் அறிந்த விஷயந்தானே; தருமத்தைத் துணையெனக் கடைப்பிடித்த நாம் அதனால் இன்பம் வரினும் துன்பம் வரினும் இடையில் மனந் தளராது அறன்வழியே ஒழுகுதலல்லவா முறையாகும்; உயிர் தான் நீங்கவந்தாலும் சத்தியந் திறம்பாத உத்தம சூரியன்மரபில் உதித்தவர்—அழியாப் பெரும்புகழ் படைத்த தசரதச்

சக்கரவர்த்தி—தன் மகன்பொருட்டுச் சத்தியந் தவறினரென்றால், அந்த வசை உலகமுள்ளவரைக்கும் உண்டல்லவா? ஆகலால் சுமந்திரரே! நீர் மனம் வருந்தவேண்டாம்; சீக்கிரம் நகருக்கு மீண்டு, வசிட்ட முனிவருக்கு என் வணக்கத்தைக் கூறி என்னை மன்னிக்கும்படி அவரிடஞ் சொல்லும்; பின்னர் அம்முனிவருடன் சென்று யான் மிக்க மனமகிழ்ச்சியுடன் கானகஞ் செல்கின்றேனென்று என்னருமைப் பிதாவுக்குத் தெரிவியும்; பதினான்குவருடஞ் சென்றபின் யான் மீண்டு வந்து அவருடைய பாதங்களை நமஸ்கரிப்பேனெனச் சொன்னேனென்றுந் தெரிவியும்; என் அன்னையர் மூவருக்கும் என் வணக்கத்தைக்கூறி அவர்களையும் வருந்தவேண்டாமென்றுஞ் சொல்லும்.

(ஸ்ரீராமர் கூறிய வார்த்தையைக் கேட்டுக்கொண்டு சுமந்திரன் சீதையைப் பார்க்க.)

சீ: ஐயா, சுமந்திரரே! மாமாவுக்கும், என் அத்தையருக்கும் நான் வணங்கியதாகச் சொல்லவேண்டும்; அதுவுமல்லாமல் நான் வளர்த்த கிளிகளையும், நாகணவாய்களையும், பூனை முதலியன பிடிக்காதபடி சாவதானமாய் வளர்க்கும்படி என் தங்கையருக்குச் சொல்லும்.

சும: (தனக்குள்) ஐயோ! இச்சீதாதேவியின் வார்த்தைகளை எண்ண எண்ண என் மனம் புண்ணாகின்றதே; (சீதையை நோக்கி) அம்மா! அப்படியே தெரிவிக்கின்றேன்; இளையபெருமாளே! சக்கரவர்த்திக்குத் தெரிவிக்கவேண்டியது ஏதுமுளதோ?

இல: தெரிவிக்கவேண்டியதா! ஒரு பெண்மீது கொண்ட மோகத்தால், தன் புதல்வனுக்குக் கொடுத்த இராச்சியத்தை இல்லையென மறுத்த சத்தியவந்தனாகிய சக்கராவர்த்திக்கு யான் என்ன சொல்லவேண்டியது? தன் அருந்தவப் புதல்வன் காட்டிற் சென்று காய்கனி உண்டு பல கஷ்டங்களையும் அனுபவிக்க விடுத்துத் தான்மாத்திரம் மாளிகையிலிருந்து அறுசுவை உண்டி குறைவற அருந்தித் தன்காதலியுடன் இனிதுவாழும் வாழ்க்கையைக் குறித்து மிகவும் விபந்தானென்று தெரிவியும்; அல்லாமலும், பரதசத்துருக்கர் அயோத்திக்கு வருங்காலத்தில் அவ்விருவருக்கும் நான் சகோதரனல்லனென்றும் தெரிவியும்.

இ: இப்படித் தகாத வார்த்தைகளைச் சொல்லாதே; (சுமந்திரனை நோக்கி) சுமந்திரரே! எம்மைத் தொடர்ந்துவந்த அயோத்திமா நகர்வாசிகளெல்லோரும் இப்பொழுது இச்சோலையின்கண்ணே உறங்குகின்றனர்; ஆதலால் நீர் மீண்டுசெல்வதற்கு இதுவே சமையம்; நீர் மனம் வருந்தாது சென்றுவாரும்.

(சுமந்திரன் அனுமதிபெற்றுக்கொண்டு செல்கின்றான்.)

---

## பதினைந்தாங் காட்சி.

காலம்-சந்திரிகையோடு கூடிய இரவு. இடம்-கைகேசியின் மாளிகை.

[மாளிகையின் கடைவாயிலில் தன்வரவை எதிர்பார்த்து நின்ற வசிட்டரிடஞ் சுமந்திரன் செல்கின்றான்.]

வசி: சுமந்திரா! ஸ்ரீராமன் மீண்டு வருதற்கு மறுத்தனன்போலும்?

சும: சுவாமீ! நான் எத்தனையோ விதமாக எடுத்துச் சொன்ன போதிலும், இளவரசர் மறுத்துவிட்டார்; மேலும் தன்னை மன்னிக்கும்படியும், தன் நமஸ்காரத்தை ஏற்றுக்கொள்ளும்படியும் தெரிவிக்கச் சொன்னார்.

வசி: அப்பா! இனியென்ன! இறந்தார் நமதுசக்கரவர்த்தி; ஆனால் சக்கரவர்த்தியிடம் இதை எப்படித் தெரிவிப்பது? சுமந்திரா, பிதா இருக்கும் நிலைமை தெரியாதா அவனுக்கு?

சும: தெரியும் சுவாமீ! நான் என்னசெய்வேன்; நான் சொல்ல வேண்டியதெல்லாஞ் சொன்னேன், கேட்கமாட்டேனென்றார்; தம் பிதாவின் சத்திபத்தைக் காக்கவேண்டுமென்ற பிடிவாதத்துடன் நிற்கின்றார்.

வசி: ஆம்! ஆம்!! விதிப்பயனை வெல்ல வேதனாலும் முடியாது; சரி வருகுதி, சக்கரவர்த்தியிடஞ் செல்லுவோம்; சம்போ சிவ, எப்படித் தெரிவிப்பேன் சக்கரவர்த்திக்கு; (என்று சொல்லிக்கொண்டு இருவரும் மாளிகையினுள்ளே போய்ப் பிரக்ஞையற்றுக் கிடக்குஞ் சக்கரவர்த்தியை முனிவர் கூப்பிடுதலும், சக்கரவர்த்தி சிறிது மயக்கம் நீங்குகின்றார்.)

தச: இராமா! இராமா!! அப்பா கொடிது,—கொடிது, பிள்ளைப்பாசம்.

வசி: அரசே!

தச: என்மகன் வந்துவிட்டானோ? சுவாமீ!

வசி: (வாவில்லையென்று சொல்ல நாவெழாமற் சிறிதுநேரம் மௌனமாய் நின்று பின் தனக்குள்) ஈசா! இங்கே நின்று இத்துயரத்தைக் கண்ணுற்பார்க்க முடியாது (எனக் கூறிச் செல்கின்றார்)

தச: சுமந்திரா! என்கண்மணி காட்டிற்குப் போய்விட்டானா?

சும: அரசே! வனவாசம் முடிந்தபின் மீண்டு வருவதாகத் தெரிவித்தார்; தங்கள் பாதாரவிந்தங்களை நமஸ்கரித்ததாகச் சொல்லும்படியுந் தெரிவித்தார்; பதினான்குவருஷம் தனக்குப் பதினான்கு நாளல்லவோ என்று சொல்லித் தங்களை மனம்வருந்த வேண்டாமென்றுஞ் சொன்னார்; ஜானகியும் இலட்சுமணனும் கூடிச் செல்கின்றார்கள்.

தச: வந்த-கருமம்-முடிந்தது; ஈசனே! உடல்-பொருள்-ஆவி-மூன்றும் உமக்கு அடைக்கலம் (என்று சொன்ன மாத்திரத்தே உயிர் நீங்குகின்றது.)

கோ: பிராணநாதா! பிராணநாதா! (தன் கைகளால் சக்கரவர்த்தியைப் பரிசித்து) ஐயோ! ஒன்றுந் தோன்றவில்லையே; மனம் பதறுகின்றதே. சுமந்திரரே! இதென்ன இது, வந்து பாரும்.

சும: (பரிசித்துப்பார்த்துச் சக்கரவர்த்தி ஆவி நீங்கினரென அறிந்து மனம் வருந்திக் கோசலையை நோக்கி) அம்மா! என்ன செய்யலாம்! 'வினைப்போகமே ஒருதேகங் கண்டாய், வினைதானொழிந்தால் தினைப்போதும் நில்லாது; (என்று சொல்லிக் கண்ணீர் விடுகின்றான்.)

கோ: அரசே! அரசே!! எங்களையெல்லாங் கைவிட்டீரா! உமது முடிவுக்கா இந்தப் பட்டாபிஷேகம் வந்தது! என் ஆருயிரே! இனி எப்போது உம்மை நான் என் கண்ணுற் பார்ப்பேன்! ஏகசக்கராதிபதியாய், எத்தனையோதேசத்து அரசர்களெல்லாம் வந்து அடிபணிந்து, நாற்புறமுஞ் சூழ்ந்துநிற்க, சிம்மாசனத்தில் இனிது வீற்றிருக்கக் கண்ட பாவியாகிய நான் இப்பொழுது உம்மை இக்கோலத்துடன் காண வந்தேனோ? ஐயோ, அரசே! உலகத்தில் நோயாலிறப்பார்கள்; இப்படிப் புத்திரசோகத்தால் இறந்தவர் யாருமுண்டோ? இராமா! நீயே உன் பிதாவுக்கு யமனானாய்? ஆ, கைகேசி! நீ உன் எண்ணத்தை முடித்தாய்; என் அரசனையும் முடித்தாய்; (என்று இப்படிப் பலவாறு புலம்புஞ் சமையத்தில் முனிவர் வருகின்றார்.)

வசி: அம்மா! அழுதாற் பயனென்ன? நொந்தாற் பயனென்ன? ஆவதில்லை; எழுதாப்படி ஏதும் வருமோ? எல்லாமறிந்த நீரும் இப்படிப் புலம்பலாமா? (என்றுசொல்லிக் கோசலையைத் தேற்றி அப்புறஞ் சுமந்திரனை நோக்கி) மந்திரீ! சக்கரவர்த்தி நான்கு புத்திரர்களைப் பெற்றும் அந்தியகாலத்தில் ஒருவராயினுஞ் சமீபத்தில் இல்லாமற்போயினர்; எது நடக்கவேண்டுமோ அது நடந்தேதீரும்; பரதன் வந்தபின் சக்கரவர்த்திக்குச் செய்யவேண்டிய கருமங்களைச் செய்வோம்; நாடு ஒரு நொடிப் பொழுதாவது அரசன் இல்லாமலிருக்கவொண்ணாது; ஆதலால் பரதன் வரும்வரைக்கும் நீயே அரசனாயிருக்கவேண்டும்; மேலும் சக்கரவர்த்தியின் மரணத்தைக் காத்திராப் பிரகாரமாய்ப் பரத சத்துருக்கர்களுக்கு நாம் தெரிவித்தல் புத்தியல்ல; ஆதலால் அவர்களைச் சீக்கிரம் வரும்படி சக்கரவர்த்தி யழைத்ததாக எழுதி ஒற்றர் மூலமாய்க் கேகயநாட்டிற்கு ஓர் கடிதம் விடுக்குதி.

சும: சுவாமீ! தங்கள் ஆஞ்ஞைப்படியே அனைத்துஞ் செய்கின்றேன்.

முதல் அங்கம் முற்றிற்று.

# இரண்டாம் அங்கம்.

## முதற்காட்சி.

காலம்-பின்பகல். இடம்-கங்காநதிதீரத்துள்ள ஒரு முனிவராச்சிரமம்.

[ஸ்ரீராமர் அங்குள்ள முனிவர்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கின்றார். குகன் வருகின்றான்.]

குக: இந்த ஆச்சிரமத்திலேதான் ஸ்ரீராமபிரான் எழுந்தருளியிருக்க வேண்டும்; சரி, சமீபத்திற்போய்க் கூப்பிட்டறிவோம்; (பர்ணசாலையின் வாயிலை யடைந்து) சுவாமீ! அடியேன் கும்பிடுகின்றேன்.

இல: (சத்தத்தைக் கேட்டுப் பன்னசாலையின் புறத்தே வந்து) அப்பா! நீ யார்? இங்கே யாரைத் தேடுகின்றாய்?

குக: சுவாமீ! நானே ஏழை வேடன்; சிரிங்கிபேரம் என்னும் கிராமத்தில் இருப்பவன்; என்னைக் குகனென்று சொல்லுவார்கள்; இந்த ஆற்றைக் கடந்து செல்பவர்களுக்கு ஓடம் விடுவது என் தொழில்; சுவாமியைக் கும்பிடும்படியாக இங்கே வந்தேன்.

இல: அப்பா! நீ இங்கேதானே நில்; எனது அண்ணனுக்கு உனது வரவைத் தெரிவிக்கின்றேன் (எனக் கூறி ஸ்ரீராமரிடஞ் சென்று) அண்ணா! வேடுவர்குலத்தவனும்; இக்கங்கையைக் கடப்பவர்களுக்கு ஓடஞ் செலுத்துபவனும்; சமீபத்திலுள்ள சிரிங்கிபேரம் என்னுங் கிராமத்தில் வசிப்பவனும்; குகன் என்னும் பெயரையுடையவன்; பார்க்கும்போது தங்களிடத்து மிகவும் பக்தியுடையவன்போலக் காணப்படுகின்றான்; தங்களைத் தரிசிக்க ஆசைகொண்டு இப்பர்ணசாலையின் புறத்தே நிற்கின்றான்.

இ: தம்பி! அப்படியானால் அவனை இங்கே அழைத்துவா.

இல: (அவனிடஞ் சென்று) அப்பா! தமையனார் உன்னை அழைத்து வரும்படி தெரிவித்தார்.

குக: பெரும் பாக்கியம் சுவாமீ. (இருவரும் ஸ்ரீராமரிடஞ் செல்கின்றார்கள்.)

இ: அப்பா! சமீபத்தில் வருவாய்.

குக: தெண்டம் சுவாமீ! (எனக்கூறி சாஷ்டாங்கமாக வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து வாய்புதைத்து மிக்க விநயத்துடன் நிற்கின்றான்.)

இ: ஏன் நிற்கின்றாய்; அப்படி அமருவாய்.

குக: சுவாமீ! இது ஏழை; இப்படி நிற்கின்றேன்; சாமிக்காக நல்ல தேனும், தெரிந்தெடுத்த மீனும் கொண்டுவந்திருக்கின்றேன்; தங்கள் விருப்பமெப்படியோ?

இ: (பக்கத்திருந்த முனிவரை நோக்கி, குகனுடைய அன்பையும் அறியாமையையுங் குறித்துப் புன்னகை செய்து) அன்புடன் இடப்பட்ட கூழ் தேவாமிர்தத்தைப் பார்க்கினும் இனியதல்லவா?

முனிவர்: ஆம், அரசனே! அதற்குமோர் ஆட்சேபமுண்டா?

இ: (குகனை நோக்கி) அன்பனே! அத்தேனில் கொஞ்சந் தருகுதி; (குகன் இருகரங்களாலுங் கொடுக்க அதனை வாங்கி அருந்தி) அப்பா இந்தத் தேன் நல்லாயிருக்கின்றது; இஃதிருக்க, நாளைக்கு நாங்கள் இந்த ஆற்றைக் கடக்கவேண்டும்; ஆதலால், நீ இன்றைக்கு உன்னுடைய வீட்டிற்கு மீண்டுபோய் நாளை விடியலில் உன் சுற்றத்தவருடன் ஓடங் கொண்டு இங்கு வா.

குக: சுவாமீ! தங்கள் வார்த்தையைத் தட்டுகிறேனென்று என்னைக் கோபிக்கவேண்டாம்; தங்கள் திருக்கோலத்தின் அழகைக் கண்டு பின் மீண்டு வீட்டிற்குப் போக என் மனம் எழவில்லை, இங்குதானே இருந்து தங்களுக்குத் தொண்டு செய்ய விரும்புகின்றேன்; அருள்செய்யவேண்டும்.

இ: (இலட்சுமணனையுஞ் சீதையையும் நோக்கி) ஆகா! இவ்வேடுவராசன் எம்மிடத்திற் பாராட்டும் பக்தியை என்னென்று பகருவேன்; (குகனை நோக்கி) அப்பா! உன் விருப்பம் அப்படியாயின் இந்த இரவை எங்களுடன் கழித்து விடிய உன் கிராமத்துக்குச் சென்று ஓடத்தைக் கொண்டுவந்து எங்களை அக்கரையிற் சேர்ப்பாய்.

குக: (நமஸ்கரித்து) மகா பாக்கியம் சுவாமீ! இந்த அடிமை ஒன்று அறிய விரும்புகின்றேன்: எதற்காகத் தாங்கள் நாட்டை விட்டுக் காட்டிற்கு வந்ததோ?

இல: எனதண்ணன் தந்தையினுடைய சத்தியத்தைக் காக்கும்பொருட்டு, சிற்றன்னையாகிய கைகேசியின் விருப்பத்தின்படி, தன் தம்பிக்கு இவ்விராச்சியத்தைக் கொடுத்துவிட்டுக் காட்டுக்குப் போகும் மார்க்கத்திலே இங்கு வாலாயினர்.

குக: ஆகா! அப்படியா! ஏதோ நானும் கொஞ்சம் புண்ணியஞ் செய்தமையினாலே, சுவாமியைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேன். (ஸ்ரீராமரை வணங்கி) சுவாமி! நானும் என்னுடைய இனத்தவர்களும் தங்களுக்குவேண்டிய குற்றேவலெல்லாஞ் செய்வோம்; தாங்கள் உண்ணுதற்கு வேண்டிய தேனுந் தினைமாவும் உண்டு; வேட்டையாடுதற்குச் சமீபத்திலே மிருகங்கள் நிறைந்த காடுண்டு; ஸ்நானஞ் செய்வதற்குப் பரிசுத்தமான கங்கை யுண்டு; உடுத்தற்கு மிருதுவான புலித்தோல் உண்டு; நித்திரை செய்தற்கு உந்நதமான பரண் உண்டு; தேவலோகத்திலுள்ள பொருளாயினும் வேண்டுமானால் உடனே போய்க் கொண்டுவருவோம்; என் வேடுவச் சேனையோ தேவர்களையும் வெல்லத்தக்க வலிமையுள்ளது; ஆதலால், சுவாமீ! எங்களுடைய குடிவில் சிலகாலந் தங்கியிருந்து ஏழைகளுக்கு அருள் செய்யவேண்டும்; (என்று சொல்லி விழுந்து நமஸ்கரிக்கின்றான்.)

இ: அன்பனே! உன் பக்தியை மெச்சினேன்; யான் கானகஞ் சென்று அங்குள்ள முனிவர்களைத் தரிசித்தபின் மீண்டு இங்கு வருவேன்; ஆதலால், இப்பொழுது என்னைத் தடைசெய்யாதே? இன்றிரவு இங்குதானே தங்கி விடிந்தபின் உன் ஊருக்கு மீண்டு போய் ஓடங் கொண்டுவந்து எங்களை அக்கரையிற் கொண்டு போய்ச் சேர்ப்பதே நீ செய்யவேண்டிய பேருதவி.

குக: சுவாமி கட்டளைப்படியே செய்கின்றேன்.

---

## இரண்டாங் காட்சி.

காலம்-காலை. இடம்-கங்கையின் மற்றக்கரை.

[ஸ்ரீராமர் முதலியோரை ஓடத்தில் ஏற்றிக் குகன் கங்கையின் அக்கரையிற் சேர்க்கின்றான்.]

இ: அன்பனே! நீ செய்த பேருதவியை நான் ஒருகாலமும் மறவேன்; இப்பொழுது சித்திரகூடத்திற்குச் செல்லும் மார்க்கத்தை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.

குக: (வணங்கி) சுவாமி! தங்கள் உத்தரவு கிடைத்தால் நானும் சித்திரகூடத்திற்கு உங்களுடன் வருகின்றேன்; அல்லாமலும் இக்காட்டிலே உள்ள பாதைகள் எனக்கு நல்லாய்த் தெரியும்;

வேண்டிய வேண்டிய இடங்களில் தாங்களிருப்பதற்குப் பர்ண சாலைகள் அமைப்பேன்; நொடிப்பொழுதாயினும் தங்களை நீங்காமல் உடன் இருந்துகொண்டு வேண்டிய தொண்டுசெய்வேன்; உணவுக்காக இனிய காய் கனி கிழங்குகளைக் கொண்டுவந்து கொடுப்பேன்; குடிப்பதற்குச் சுத்தமான தண்ணீர் கொண்டு வந்து தருவேன்; தாங்கள் ஏவிய வேலைகளைச் செய்வேன்; அதிக இருளிலும் வழிபிடித்துச் செல்லுவேன்; சத்துருக்கள் வந்தாலும் அவர்களுடன் எதிர்த்துப் போர்செய்து வெல்லுவேன்; துஷ்டமிருகங்களைக் கொல்லுவேன்; தாங்கள் அனுமதி தந்தால் ஏழையின் சேனைகளையும் உடன் கூட்டிக்கொண்டு வருவேன்; தங்கள் சித்தம் எப்படியோ?

இ: அப்பா குகனே! என்மேல் நீ வைத்திருக்கும் அன்பை நான் எப்படிச் சொல்லுவேன்; இன்று தொடக்கம் உன்னையும் என் தம்பிமாரில் ஒருவனாக வைத்துக்கொண்டேன்; இலட்சுமணனை உன் தம்பியாகவும், இச்சானகியை உன் சுற்றத்தவளாகவும் மதித்துக்கொள்; இந்த நாடுமுழுவதும் உன்னுடையதே; இதுவரையில் நாங்கள் நான்கு சகோதரர்களிருந்தோம்; இன்றைக்கு உன்னுடன் ஐவரானோம்; என்னைப் பிரிந்தமையினாலே உன் தம்பியாகிய பரதன் சதா வருந்திக்கொண்டிருக்கின்றான்; அவனே அயோத்தியிலுள்ள சனங்களைப் பாதுகாக்கின்றான்; இங்குள்ள சனங்களை நீயே பாதுகாக்கவேண்டும்; அவர்களைத் துன்பமடைய விடவொண்ணாது; (குகனைத் தழுவி) தம்பி என் சொல்லைத் தட்டாதே; உன் நாட்டிற்குப்போ, நான் அயோத்திக்கு மீண்டு வரும்பொழுது உன்னிடத்திற்கு வருகின்றேன்.

குக: (வணங்கி எழுந்து அழுதபடியே) சுவாமி! அருளிருக்கவேண்டும்; போய்வருகின்றேன்.

இ: அப்பா வருந்தாதே, எப்பொழுதும் என் மனத்தில் உன் ஞாபகமிருக்கும், சுகமே போய்வா.

(குகன் மூவரிடத்திலும் விடைபெற்றுச் செல்கின்றான்; இராமர் முதலிய மூவரும் சித்திரகூடத்தை நோக்கிச் செல்கின்றார்கள்.)

---

## மூன்றுங் காட்சி.

காலம்-நண்பகல். இடம்-சித்திரகூடத்திற்குச் செல்லும் மார்க்கத்தில் பல தடாகங்கள் பூஞ்சோலைகள் செறிந்த ஒரு வனம்.

[ஸ்ரீராமர் அவ்வனத்தின்கண்ணுள்ள காட்சிகளைத் தமது தேவிக்குக் காட்டி வர்ணித்துக்கொண்டு செல்கின்றார்; இலட்சுமணர் பின்னே செல்கின்றார்.]

இ: அருந்ததியன்ன பெருந்தகைக்கற்பினாய்! கொண்டலைக்கண்டு மயில்களுக் குண்டான கொண்டாட்டத்தினால் அவைகள் ஒருங்குகூடி நடிப்பன பாராய்.

சீ: ஆம் பிராணேசா! நன்றாயிருக்கின்றது; பிராணநாதா! அதோ பாருங்கள் ஒரு மயில் எங்களைக் கண்டவுடனே ஆடுவதை விட்டுத் தன் கலாபத்தைக் குவித்துக்கொண்டு பயந்து ஒரு புறத்தே போய் நிற்கின்றது.

இ: ஆம் கண்மணி! அக்கலாபமஞ்ஞை உன்சாயலைக் கண்டு நாணங் கொண்டு நடனத்தை விடுத்து ஒரு புறத்தே போய் ஒதுங்கி நிற்கின்றது.

சீ: பிராணேசா! அப்படியல்ல, தங்களுடைய திருமேனியின் நீல வர்ணத்தைக் கண்டு, அதனால் நாணங்கொண்டு, மனம்விண்டு அப்புறம்போய் ஒதுங்கியதென்று நான் எண்ணுகின்றேன்.

இ: கண்ணே! நல்லாயிருக்கின்றது உன்வார்த்தை.

சீ: நாதா! ஏன் இம்மான்கூட்டங்களெல்லாம் எங்களைக் கண்டு வெருண்டோடுகின்றன சொல்லுங்கள்?

இ: கஞ்சமலரிற் சஞ்சரிக்கும் ஹம்ஸமும் அஞ்சும் நடையாளே! மானினம் ஏன் ஓடுகின்றன என்றனை? உன் விழிகளுக்குப் பயந்தே.

சீ: பிராணேசா! என்ன பரிகாசஞ்செய்கின்றீர்கள்; நாதா அதோ பாருங்கள், தடாகக்கரையிலே பொன்போன்ற பூங்கொத்துக் களையும் நீண்ட காய்களையும் பொறுக்கமுடியாமல், கொம்புகள் ஒசியப்பெற்றதாய் ஒருமரம் நிற்கின்றது; சில கொம்பர்கள் பூங்கொத்துக்களுடன் தடாகத்திலுள்ள நீரிலே படிந்திருக்கின்றன, அதென்ன சொல்லுங்கள்?

இ: விண்ணுடருந்துதிக்கும் பெண்ணாமுதே! அது கொன்றை மரமாகும்; உன்னுடைய இடையைப்போல் நுடங்கமுடியாது நாணமடைந்து தடாகத்தில் மூழ்கி மறைய நினைத்தலை நிகர்க்கும் அது நீரின்கண்ணே படிந்திருக்குந்தன்மை.

சீ: (புன்னகைசெய்து) பிராணேசா! இத்தடாகத்தின் சமீபத்திற் சென்று அதன் சிறப்பைப் பார்ப்போமா?

இ: ஆம் கண்ணே! வருவாய் செல்லுவோம்.

(தடாகத்தை நோக்கிச் செல்கின்றார்கள்.)

சீ: பிராணநாதா! பாருங்கள் இத்தாமரைப்பூக்கள் எவ்வளவு அழகாயிருக்கின்றன.

இ: காதளவோடிய கண்ணுளே! உனது வதனத்திற்கு அவைகள் உவமானமாக விரும்பி, சாட்சாத் ஈசனை நோக்கி நீரின்கண்ணே நின்று அருந்தவஞ் செய்தலை நிகர்க்கின்றதல்லவா இத்தடாகத்திலே தாமரைமலர்கள் அலர்ந்திருக்குந் தன்மை.

சீ: என் பிராணேசா! தங்களுடைய கண்களுக்கும் பாதங்களுக்கும் ஒப்பாக விரும்பித் தவஞ் செய்கின்றன என்று சொன்னாலென்ன?

இ: கிளிமொழியாளே! நன்கு கூறினை; சமீபத்திலே யிருக்கின்ற தேரைகள் இக்கமலமலர்களிலுள்ள தேனை யுண்ணாது பார்த்துக்கொண்டிருக்க, சோலையின்கண்ணே சஞ்சரிக்கும் வண்டுகள் அக்கமலமலரை வந்து அண்டித் தேனை மொண்டு உண்டிருக்குந் தன்மை—என் ஆருயிரே, எதை நிகர்க்கின்றது?

சீ: எனக்குத் தெரியவில்லை, பிராணேசா! சொல்லுங்கள்.

இ: பஞ்சினும் மெல்லடிப் பாவாய்! சொல்லுவேன் கேள்; தம்பிதா வித்துவானாயிருப்பவும், அவனது பிள்ளைகள் அவனிடத்தே கல்வி பயிலாது வீணே காலங்கழிக்க, அந்நியருடைய பிள்ளைகள் அவ்வித்துவானிடத்தில் வந்து கல்வியாகிய தேனைக் கிரகித்துக்கொண்டு போவதை நிகர்க்கின்றதல்லவா?

சீ: ஆம், பிராணேசா! நன்றாகச் சொன்னீர்கள்;

(பரத்துவாசமுனிவர் சிறிது தூரத்தில் வருகின்றார்.)

இல: அண்ணா! அதோ யாரோ ஒரு தபோதனர் விரைவாக வருகின்றார், எங்களைக் காணுதற்குப் போலும்.

இ: (உற்று நோக்கி) ஆம், தம்பி! எம்மிடத்திற்றான் வருகின்றார்; அத்தபோதனரை நீ யாரென அறியாயா? அவர்தான் தவத்தால் மேம்பட்ட பரத்துவாசமுனிவர்; எமது தந்தையார் இம் மகானிடத்தில் மிகவும் பத்திபாராட்டுவார்; வாருங்கள் நாம் அவரை எதிர்கொள்வோம்; (மூவரும் முனிவருக்குச் சமீபமாகச் சென்று) சுவாமீ! நமஸ்காரம்.

பரத்துவாசர்: புதல்வர்காள் ஆசீர்வாதம், மங்கள முண்டாகுக; (சீதையை நோக்கி) அம்மா, ஜானகி! க்ஷேமமுண்டாகக்கடவது; (ஸ்ரீராமரை நோக்கி) அப்பா, ஸ்ரீராமா! உங்கள் வரவையறிந்து தான் யான் இங்கே வந்தேன்; இஃதென்ன தவவேடம்?

இ: சுவாமீ! ஏதோ இத்தவவேடத்தைப் பூணுதற்கு ஜென்மாந்திரத்தில் அற்ப புண்ணியஞ் செய்திருந்தேன்போலும்

பரத்: சரி, காலமாகின்றது, காலதாமசம்பண்ணக்கூடாது; சமீபத்திலிருக்கின்றது எனது ஆச்சிரமம்; வாருங்கள், நாங்கள் அங்கே சென்றபின் எல்லா விஷயத்தையும் சாவகாசமாய்ப் பேசிக்கொள்வோம். (முனிவர்பின்னே மூவரும் போகின்றார்கள்.)

---

## நாலாங் காட்சி.

காலம்-காலை. இடம்-பரத்துவாசமுனிவர் ஆச்சிரமம்.

[முனிவர் புலித்தோலாசனத்திலும் ஸ்ரீராமர் பிறிதோராசனத்திலும் உட்கார்ந்துகொண்டு ஒருவரோடொருவர் சம்பாஷிக்கிறார்கள். இலட்சுமணரும் சீதையும் ஒருபுறமாக நிற்கின்றார்கள்.]

பரத்: அப்பா, ஸ்ரீராமா! தந்தைவாக்கியபரிபாலனஞ் செய்யவேண்டுமென்னும் கருத்துடன் நீ இக்கானகம் வந்தேனெனக் கூறுகின்றனையே; உன்னைப் பிரிந்து உன்பிதா எவ்வளவு நேரமும் உயிர்வாழமாட்டாரே; எனக்கல்லவா தெரியும் என்னரிய நண்பராகிய சக்கரவர்த்தி உன்மீது வைத்திருக்கும் ஆசை.

இ: சுவாமீ! என்மீது எவ்வளவு அன்புதானிருந்தாலும், சத்தியத்தைத் காத்தலல்லவா உத்தமருடைய கடனாகும்; சிற்றன்னைக்கு அவர் ஈந்த வரத்தை இல்லையென்னலாமா? அல்லாமலும், தவமென்னும் மேலான செல்வத்தை யான் பெறும்பொழுது என் பிதா அதை எண்ணி மகிழ்வதன்றி, வருந்தலாமா? எல்லாமறிந்த தங்களுக்கு யானெடுத்துச் சொல்வதென்ன?

பரத்: இராமச்சந்திரா! உன்னைக் கண்டமாத்திரத்தே என்னரிய நண்பாரகிய சக்கரவர்த்தியைக் கண்டாற்போல் ஆனந்தங்கொண்டேன்; இந்த யௌவன பருவத்திற்றானே உனக்கு இத்துணை ஞானம் ஏற்பட்டிருக்கின்றது; ஆனால் அது ஆச்சரியமன்று; ஏனெனில் உன்னை நீ அறியாய்; அப்பா! திருமகளை நிகர்த்த இச்சானகியையும் உடன் அழைத்துக்கொண்டு துஷ்டமிருகங்களும் இராக்கதரும் சஞ்சரிக்கின்ற கானகத்தின்கண்ணே அதிக தூரம் போவது புத்தியாகாது; யான் வசிக்கும் இவ்விடமோ சாமனியமான இடமல்ல; இது கங்கையும் சரயுவும் யமுனையும் ஒருங்கு சங்கமிக்கும் புண்ணிய ஸ்தானமாகையால், இதற்குத் திருவேணிசங்கமம் என்னுங் காரணப்பெயருண்டு; சமீபத்திலுள்ள இத்தீர்த்தமோ அரிபிரமேந்திராதி தேவர்களாலும் விரும்பப்படுவது; இவ்விசேடத்தை நோக்கியே யான் இங்கு உறைகின்றேன்; ஆதலால் நீவிரும் இவ்வாச்சிரமத்தின் கண்ணே இருந்துகொண்டு அரிய தவத்தைச் செய்யுங்கள்.

இ: சுவாமி! தாங்கள் கூறியது முழுவதும் உண்மையே; ஆனால் இந்த இடம் அயோத்தியினின்றும் அதிக தூரமல்ல; நாங்கள் இங்கே வாசஞ்செய்வதை அயோத்திமாநகரிலுள்ளார் அறிய நேர்ந்தால், எம்மை மீண்டும் அயோத்திக்கு வரும்படி வேண்டிக்கொள்வார்கள்; ஆதலால் சுவாமீ, என்னை மன்னிக்கவேண்டும்; நாங்கள் இன்னுஞ் சிறிதுதூரத்திற் போய் வசித்தலே புத்தியாகும்.

பரத்: (தனக்குள்) ஆம் தேவர்களும் முனிவர்களும் செய்த தவம் பொய்க்காது; என்னால் இவர்கள் செலவைத் தடுக்க முடியாது; (ஸ்ரீராமரை நோக்கி) அப்பா, இராமா! அப்படியா உன் அபிப்பிராயம்; சரி இப்பொழுது எவ்விடம் நோக்கிச் செல்ல அபேட்சிக்கின்றாய்?

இ: சுவாமி! சித்திரகூடஞ் செல்ல மெத்தவுஞ் சித்தங்கொண்டேன்; அதற்கு இன்னும் அதிகதூரஞ் செல்லவேண்டுமோ?

பரத்: அதிகதூரமில்லை; இன்னும் பத்துக்காதவழி தூரந்தானிருக்கின்றது; அச்சித்திரகூடமும் மிக விசேடமுடையது.

இ: சுவாமீ! நாங்கள் போய்வருதற்கு விடையளிக்கவேண்டும்; (வணங்குகின்றார்கள்.)

பரத்: ஆம் சுகமே சென்றுவாருங்கள் (மூவரும் போகின்றார்கள்.)

---

## ஐந்தாங் காட்சி.

காலம்-மாலை. இடம்.சித்திரகூடத்தில் இலட்சுமணரால் புதிதாக அமைக்கப்பெற்ற பர்ணசாலை.

இல: அண்ணு! இதோ புதிதாக ஒரு பர்ணசாலை அமைத்திருக்கின்றேன், தாங்களும் சீதாபிராட்டியும் வசித்தற்கு.

இ: (சீதையுடன் சமீபத்திற் சென்று பர்ணசாலையைப் பார்த்து அற்புதமடைந்து) ஆகா! நன்றாயிருக்கின்றது தம்பி! இராசகுமாரர்களுக்கு இத்தொழில் மெத்தத் தூரமாகுமே; நீ இதை அமைத்தற்கு எங்கு கற்றனை?

இல: அண்ணு! வறுமையுஞ் செல்வமும் ஒருவன் பங்கல்ல; வறியவர் செல்வராவர், செல்வர்கள் வறியராவர்; இது தங்களுக்கே தெரியும்; வறுமை வந்தகாலத்தும் வாழத்தக்கதாகப் பயின்று வந்தேன்.

இ: ஆகா! அப்படியா தம்பி! என்னாலல்லவா நீ இவ்விதமான துன்பங்களையெல்லாம் அனுபவிக்கின்றாய்

இல: அண்ணு! துன்பம் அயோத்தியாபுரியிலேயே ஆரம்பித்துவிட்டது; அதை எண்ணியெண்ணி வருந்துவதால் என்ன பலன்?

இ: தம்பீ! இப்பொழுதுதான் எங்களுக்கு வந்த துன்பமென்ன? அரசவாழ்க்கையால் அடையும் பொருட் செல்வத்துக்கோ அழிவுண்டு; அருந்தவமாகிய இச்செல்வத்திற்கு ஒருகாலத்தும் அழிவில்லை; அரசர்களினும் முனிவர் மேம்பட்டவரல்லவா? ஆதலால் இப்பொழுது துன்பம் வந்ததென்றெண்ணி நீ சிறிதும் வருந்தாதே; துன்பமும் இன்பமெனக் கொள்ளுதலே பெரியோர் செயல்; (எனக்கூறி ஸ்ரீராமர் சீதாபிராட்டியுடன் பர்ணசாலையின்கண்ணே அமர, இலக்குமணர் காவல்புரிந்துகொண்டு வெளியேநிற்கின்றார்.)

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

---

# மூன்றாம் அங்கம்.

## முதற்காட்சி.

காலம்-காலை. இடம்-அயோத்தியாபுரியில் தசரதர்மாளிகைக்குச் செல்லும் நெறி.

[கேகயநாட்டினின்றும் புறப்பட்டுவந்த பரதனுஞ் சத்துருக்கனும் அயோத்திமாநகரம் அமங்கலத்தோடு கூடியிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்து பலவாறு யோசித்துக்கொண்டு செல்கின்றார்கள்]

பரதன்: தம்பி! இந்நகரம் இவ்வளவு அமங்கலத்தோடு கூடியிருக்க வேண்டிய காரணமென்ன! ஏதோ பெரும் விபத்து நேர்ந்திருக்கவேண்டும்! வீதிகளில் மனிதசஞ்சாரத்தைக் காணோமே! மங்கலவாத்தியங் கேட்கவில்லையே; மேல்மாடங்களிலுள்ள சாளரங்கள்தோறும் அழகிய மாதர்கள் வீணாகானஞ்செய்து கொண்டிருப்பார்களே! முகிற்படலத்தை யொத்த தங்கள் கேசங்கட்கு அகிற்புகை யூட்டிக்கொண்டு நிற்பார்களே! சந்திரன்போன்ற வதனத்தையுடைய மகளிர்கள் சாளரவழியாய் வீதியில் நடக்கும் விநோதங்களை ஆவலுடன் பார்த்துக்கொண்டு நிற்பார்களே! இவற்றையெல்லாம் இன்று காணோமே! வாயில்கள்தோறும் பூரணகும்பம் வைத்திருக்கக் காணோமே! மகர தோரணங்களும் மலர்மாலைகளும் தொங்கக் காணோமே! ஜெயபேரிகையின் முழக்கங் கேட்கவில்லையே! யானையின் பிளிற்றொலியும் குதிரைகளின் கனைப்பும் காதிற் படவில்லையே! அரண்மனைவாயிலில் வெற்றிக்கொடி காணப்படவில்லையே! இஃதென்ன ஆச்சரியம்? தம்பி! மாளிகைக்குச் சமீபத்தில்வர என்மனம் ஏதோ ஒருவாறு சஞ்சலமடைகின்றது!

சத்துருக்கன்: அண்ணா! எனக்கும் ஒன்றுந் தோன்றவில்லை; அதோ வீதியில் வருபவர்களை, இங்கே நிகழ்ந்ததென்னவெனக் கேட்டறிவோம்.

பர: தம்பி! கேட்பதென்ன? ஏதோ பேராபத்து நேர்ந்ததென்பதற்குச் சந்தேகமில்லை; அரண்மனைக்குச் சென்று நாமே அறிந்துகொள்வோம்; சீக்கிரஞ் செல்வோம் வருவாய்; (எனக்கூறித் தேரினின்றும் இறங்கித் தசரதனுடைய மாளிகையுட் பிரவேசிக்குஞ் சமையத்தில் ஒருதோழி அவர்களிடம் விரைந்து வருகின்றாள்.)

தோழி: (இருவரையுஞ் சமீபித்து) இளவரசர்காள்! நமஸ்காரம், உங்கள் அன்னையார் உங்களை அழைத்துவரும்படி தெரிவித்தார்கள்.

பர: ஆகா, அப்படியா! மகாபாக்கியம்; தந்தையாரைத் தரிசித்து விட்டு வருவதாகச் சொல்.

தோ: சக்கரவர்த்தியும் அங்கிருப்பதாகத் தெரிவித்தார்கள் உங்கள் தாயார்.

பர: ஆகா, அப்படியா! மகாபாக்கியம்; வருகின்றோம்.

(கைகேசியின் மாளிகையை நோக்கிச் செல்கின்றனர்.)

---

## இரண்டாங் காட்சி.

காலம்-முன்பகல். இடம்-கைகேசியின் மாளிகை.

[கைகேசி தனது மாளிகையில் ஒருபுறமாக ஆழ்ந்த சிந்தனையுடன் இருக்குஞ் சமையத்தில், பரதனுஞ் சத்துருக்கனும் அவளிடஞ் செல்கின்றார்கள்.]

பர-சத்: அம்மா! நமஸ்காரம்.

கை: கண்மணிகாள்! வந்துவிட்டீர்களா? இப்படி அமருங்கள்.

(இருவரும் உட்காருகின்றார்கள்.)

நீங்கள் கேகயநாட்டை விட்டுப் புறப்பட்டு எத்தனை நாட்களாயின?

சத்: இன்றோடு ஏழுநாட்களாயின அம்மா.

கை: உங்கள் பாட்டன் பாட்டியார் க்ஷேமந்தானே.

சத்: ஆம் அம்மா, அவர்களனைவரும் க்ஷேமந்தான்; உம்மைப் பார்க்கவேண்டுமென்னும் அபேட்சை யுடையவர்களா யிருக்கிறார்கள்; பார்த்து நெடுநாளாய்விட்டதென்று தெரிவிக்கும்படி சொன்னார்கள்.

பர:: அம்மா! பிதா இங்கே யிருப்பதாகக் கூறினீர்களே; எங்கே யவர்?

கை: (திகைக்குற்றுச் 'சிறிதுநேரம் மௌனமாயிருந்து பின்னர்) இங்கு—தான்—இருக்—கிறார்.

பர: அம்மா! ஏன் முகம் திடீரென வாடியது; பிதாவுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்ததா? சொல்லுங்கள் சீக்கிரம்,

கை: கண்ணே, பரதா! இன்னும் அறியாயா உன் பிதாவின் கதியென்னவென்று?

பர: ஐயோ! யாதொன்றுமறியேன்: நடந்ததென்ன? சீக்கிரஞ் சொல்லுங்கள்; சரீரம் பதறுகின்றது.

சத்: அம்மா! எங்களை இங்கே வரும்படி தந்தையார் தாமே நிருபம் எழுதியிருந்தாரே; அதற்கிடையில் நடந்த விசேடமென்ன!

கை: என்ன செய்பலாப்; நீங்கள் அவரை உயிருடன் காணும்படியான பாக்கியத்தைப் பெறவில்லை; விதியை வென்றார் யார்?

சத்: என்ன! என்ன! தந்தையார் இப்பொழுதில்லையா?

கை: அவர் இந்த உலகவாழ்வை வெறுத்து எங்களை யெல்லாம் கைவிட்டு விண்ணுலகடைந்தார்.

(கேட்டமாத்திரத்தே இருவரும் அறிவழிந்து வீழ்கின்றார்கள், பின்னர்ச் சிறிது மயக்கம் நீங்கிப் பலவாறு புலம்புகின்றார்கள்.)

கை: மக்காள்! வீணே வருந்துவதால் ஆவதென்ன? ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் மீண்டு வரப்போவதில்லை; நீங்கள் வருந்தவேண்டாம்.

பர: என்ன! வருந்தவேண்டாமா? வருந்தாமல் முடியுமா எம் தந்தைக்காக? நீரல்லாமல் வேறொருவரும் இப்படிச் சொல்லார்கள்; (கைகேசி மௌனமாயிருக்கின்றாள். பரதன் சத்துருக்கனை நோக்கி) தம்பீ! தந்தை தாய் குரு தெய்வமாயுள்ளவர் எமது தமையனார்; அவரைத் தரிசித்தாலல்லாமல் என் துயரம் நீங்காது; வா, அவரிடஞ் செல்வோம்.

(போக முயல்கின்றார்கள்.)

கை: கண்ணே, பரதா! உன் தமையன் இப்போது இங்கில்லை; அவனும் இலட்சுமணனும் ஜானகியும் வனஞ் சென்றுவிட்டார்கள், தவஞ்செய்வதற்காக.

பர: என்ன! என் அண்ணனும் இங்கில்லையா? ஐயோ! தந்தையார் இறந்துவிட்டார்; தமையனாரும் வனம் போயினாராம்; இடியின் மேல் இடியிடித்தாற்போல இன்னும் என்காதாரக் கேட்கக் கூடிய துக்க சமாசாரம் என்னென்ன உண்டோ அறியேன்; சரி, என்னண்ணன் காட்டிற்குப் போகவேண்டிவந்த காரணமென்ன? யாருக்காயினுந் தீங்கிழைத்தாரா? அல்லது தெய்வ சங்கற்பத்தினலா? அவர்தான் ஒரு குற்றத்தைச் செய்தாலும் இங்குள்ளோர் எல்லோரும் அதனைப் பொருட்படுத்தார்களே?

கை: அப்படியொன்றுமில்லை.

பர: தந்தை இறந்தபின்பா வனஞ்சென்றான்?

கை: இல்லைக் கண்ணே! அவர் இருக்கும்பொழுதே காட்டிற்குப் போனான்.

பர: குற்றமொன்றுஞ் செய்யவில்லை என்கின்றீர்; அப்படியாயின் எனது அண்ணன் காட்டிற்குப் போகச் சக்கரவர்த்தி எப்படிச் சம்மதித்தார்?

கை: இராமனது பிரிவாற்றாமலே அவர் உயிர் நீங்கினர்.

பர: (சினந்து) அன்னையே, நீர் சொல்வதொன்றும் எனக்குப் புலப்படவில்லை; என் தமையனர் காட்டிற்குப் போகவேண்டிய காரணமென்ன? அவரது பிரிவை யாற்றாமல் சக்கரவர்த்தி இறக்கவேண்டிவந்ததென்ன? ஒன்றையும் ஒழியாமற் சொல்ல வேண்டும்.

கை: கண்ணே, பரதா! என்மீது கோபித்துக்கொள்ளாதே; உன்மீது கொண்ட அன்பின்நிமித்தம் நீ நாடாளவேண்டுமென்றும், இராமன் வனவாசஞ் செய்யவேண்டுமென்றும் இரு வரங்களையும் பெற்றுக்கொண்டேன் சக்கரவர்த்தியிடம்; இந்த வரத்தை இல்லையென்று சொல்ல முடியாமையால், இராமன் வனம்போனான்; புத்திரசோகத்தால் உயிர்நீங்கினர் சக்கரவர்த்தி.

பர: (கேட்டமாத்திரத்தே அடங்காக் கோபங்கொண்டு) ஆ சண்டாளி! என்னசெய்யத் துணிந்தனை? நீ எனக்குத் தாயல்ல, பொல்லாப் பேயே; ஐயோ! உன்னைப்போற் பெண்களும் உலகத்திலுண்டா? உன் வஞ்சனையினால் என் அரிய தந்தையைக் கொன்றனை; என் அண்ணனைக் காட்டுக்கனுப்பினை; உன் மகனுக்கும் இந் நாட்டை ஆக்கினை; ஆகா! உன்னைப்போல் ஒரு அன்னை எனக்குக் கிடைக்குமா? ஏ! வஞ்சகி; ஏன் இந்த விபரீத எண்ணம் ஏற்பட்டது உனக்கு? பரதன் இதற்கு உடன்படுவான் என்று தான் எண்ணினையா? இருக்கலாம்; ஏன் இப்பரதனும் உன்பாழ் வயிற்றில் ஜெனித்தவன்தானே; இக்கொடிய வார்த்தையைக் கூறிய உன் நாவை இச்சணமே என் உடைவாளாற் சேதிப்பேன்; ஆயினும் என் தமையனர் கோபிப்பார் என்றுமாத்திரம் அஞ்சுகின்றேன்; ஐயோ, தெய்வமே! ஏன் என்னை இப்பாவி

வயிற்றில் உதிக்கச்செய்தனே; என்ன அநியாயம்! மாசற்ற சூரிய குலத்தில் உதித்த அரசர்களது பாரம்பரைமுறை, பரதன் என்றொரு பாவி பிறந்ததால், திறம்பியதாமென்னும் பழிமொழியைத் தேடிவைத்தாயே! யாருடைய ஏவலினால் இக்கொடிய செயலைச் செய்யத் துணிந்தாய்? நான் இங்கில்லாத நேரத்தில் நீ எனக்குத் தேடிவைத்த நன்மை இதுதானா? ஐயோ! இன்னும் என்னென்ன நன்மைகளை எனக்குச் செய்ய எண்ணியிருக்கின்றாயோ; என் பிதா இறக்கும்பொழுது பரதனும் இதற்கு உடன்பட்டிருப்பான் என்றுதானே எண்ணியிருப்பார்; அண்ணா! நீர் வனஞ்செல்லும்பொழுது என்னைக்குறித்து என்ன நினைத்தீரோ! இப்பாவிமீதுஞ் சந்தேகங்கொண்டீரோ? பரதன் உம்மிடத்துள்ள அன்பு உமக்கே தெரியும்; ஆ! நீர் காட்டிலேயிருந்து கந்தமூலாதிகளையுண்ண, நான் நாட்டிலேயிருந்து அறுசுவையுண்டி குறைவற உண்டு சுகிக்கின்றேன்; என்னைப்போல் சகோதரத் துரோகிகள் யார்தாம் இருக்கிறார் இப்புவியில்; என்செய்வேன்! இப்பாவி வயிற்றிற் பிறந்தமையாலல்லவா இப்படித் தன்னந் தனியே நின்று கலங்குகின்றேன். (அழுகின்றான்.)

சத்: அண்ணா! முடிந்த விஷயத்துக்கு அழுது வருந்துவதால் ஆவதென்ன! அன்னையைக் கோபிப்பது தருமமாகாது: எய்தவனிருக்க அம்பை நோகலாமா? இவையெல்லாம் விதியின் செயலன்றி வேறொன்றுமல்ல; "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான் முந்துறும்" நாம் இங்கில்லாத சமையத்தில் இச்சம்பவங்களெல்லாம் நடந்தமை இதற்கொரு திருஷ்டாந்தமல்லவா.

பர: தம்பி! தன் கணவனைக்கொன்ற கொடுமீவியை இன்னும் வாய் கூசாது அன்னையென்று அழைக்கின்றாய் உன் சிறுபிள்ளை மதியால்; 'கோடாலி தன்னுளே மரமதுபுகுந்து தன்கோத்திரமெல்லாம் அழிக்கும்' என்றபடி, இக்கொடியவளே எங்கள் குலத்திற்கு ஒரு கூற்றுவனாய்ப் புகுந்தாள்; (கைகேசியைநோக்கி) ஆ, பாவி! உன் உயிரை நீயே மாய்த்துக்கொண்டாயானால் உனக்கு உண்டான வசை சிறிது நீங்கும்; நான் உன் முகத்தில் விழிப்பதும் பாவம்; இனி ஒரு நிமிஷமும் இங்கிருக்கமாட்

டேன்; என் பெரியன்னையாரைத் தரிசித்துக்கொண்டு கானகஞ் செல்லுவேன் தபசுசெய்யும்படி; தம்பி! வருவாய்
(இருவருங் கோசலையின் மாளிகைக்குச் செல்கின்றார்கள்.)

---

## மூன்றுங் காட்சி.

காலம்-நண்பகல். இடம்-கோசலையின் மாளிகை.

[கோசலை துக்கசாகரத்தி லமிழ்ந்தியவளா யிருக்குஞ் சமையத்தில் பரதனுஞ் சத்துருக்கனும் அழுதுகொண்டு வருகின்றார்கள்.]

பரத: (கோசலையின் பாதங்களில் வீழ்ந்து) அம்மா! என் தந்தையார் எங்கே? என் தமையனுரை எங்கனுப்பினீர்கள்; இந்தக் கொடுமையெல்லாம் நடக்க நீங்களும் பார்த்துக்கொண்டுதானே யிருந்தீர்கள். கேகயநாட்டைவிட்டு நாங்கள் இங்கே வந்தது இந்தக் கொடுமைகளைக் காணவும் கேட்கவுமா? பாவியாகிய நானல்லவா இவற்றிற்கெல்லாங் காரணனுய் நின்றேன்.

கோ: அப்பா பரதா! உன் அன்னை செய்த வஞ்சனை உனக்குத் தெரியாதா?

பர: (திகைத்து) அம்மா! நீர் கூறிய இவ்வார்த்தை என் உள்ளத்தை ஊடுருவுகின்றது; என் அறிவை பொழிக்கின்றது; நான் ஒன்றும் அறியேனே; இவ்வஞ்சனையில் யான் சம்பந்தப்பட்டவனேயாகில், இதனை முன்னரே அறிந்திருந்தவனேயாகில், யான் சந்திரசூரியர் உள்ளவரையும் கொடிய நரகிற் கிடந்து அழுந்துவேன்; அம்மா! நான் என் தமையனுருக்குத் துரோகம் எண்ணியிருப்பேனுகில் தருமத்தைக் கெடுக்க முயன்றவன், இரக்கமில்லாதவன், பரதாரகமனஞ் செய்தவன், கொலைப்பாதகன், அருந்தவ முனிவர்க்குத் துன்பஞ் செய்தவன், குருவையும் மகளிரையுங் கொன்றவன், அரசனுக்குரிய பொருளை வஞ்சித்தவன், பகைவருக்கஞ்சி யுத்தமுனையில் புறங்காட்டியவன், ஏழைகளைக் கொன்று அவர்களுடைய பொருளை அபகரித்தவன், அந்தணருக்கு அபராதஞ் செய்தவன், வேதத்தைப் போற்றாதவன், பொய்யன், பெற்றதாயைப் பசிக்கவிட்டுத் தான்மாத்திரம் உண்டவன், அடைக்கலம் புகுந்தவரைக் காக்காதவன், என்னும் இவர்கள் வீழும் நரகில் யானும் வீழ்ந்தழுந்துவேன். அன்னையே இன்னும் உரைப்பேன் கேட்பீர்: இவ்விராச்சியத்

தின்மீது சிறிதும் ஆசை வைத்திருப்பேனேயாகில், அந்தணர் இல்லத்துக்கு நெருப்பு வைத்தோன், புத்திரகாதகன், பொய் வழக்குத் தொடுத்தவன், கன்றுக்குப் பால்விடாமற் கறந்தவன், கள்வன, செய்ந்நன்றி மறந்தவன், பாய்ச்சாட்சி சொன்னவன், தெய்வத்தை நிந்தனை செய்தவன், தன்னுடன் கூடிவந்த பெண்களை ஆபத்து வந்தகாலத்தில் இடைவழியில் விட்டுத் தன் உயிரைமாத்திரம் தப்புவிக்கும்படி ஓடினோன், பசித்துவந்தோர்க்குக் கொடுத்துண்ணுப்பாவி, கொடுங்கோன் மன்னன், கன்னிகை கற்பைப் பங்கஞ்செய்தோன், குருபன்னியை இச்சித்தோன், கள்ளுண்போன், உண்ணத்தகாதவிடத்தில் நாய்போல் உண்டவன்; பிறன்வசை சொல்வோன், தன்மரபுக்கு வசையுண்டாக்கினோன், என்னும் இவர்கள் வீழும் அருநரகில் யானும் வீழ்வேன்: அம்மா! உண்மையாய் நான் ஒன்றுமறியேன்; கொடிய கைகேசியின் புதல்வன்தானே என எண்ணி என்மீது சந்தேகங் கொள்ளாதீர்; யான் அச்சமையத்தில் இங்கிருப்பேனாயின் இத்துன்பங்கள் நிகழ்ந்திரா (எனக்கூறி அழுகின்ருன்.)

கோ: (கண்ணீர் சொரிந்துகொண்டு பரதனை எழுந்திருக்கச் செய்து) கண்ணே, பரதா! ஏதோ என் பெண்மதியால் உன் மனம் வருந்தும்படியான ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டேன்; அதற்கு நீ வருந்தாதே; நீயே சக்கரவர்த்தியின் உத்தம புத்திரன்; என் அருஞ் செல்வன்; உன் அண்ணனிடத்தில் நீ வைத்திருக்கும் உண்மையான அன்பை இன்றல்லவோ அறிந்தேன்; இச்சூரியன் மரபில் உதித்த அரசர்களில் உனக்கு ஒப்பானவர்கள் யாருமில்லை. (இப்படிப் பேசிக்கொண்டிருக்குஞ் சமையத்தில் வசிட்டர் வருகின்ருர்.)

பர: (அவர் பாதங்களில் வீழ்ந்து புலம்பி) சுவாமீ! தங்களைக் குருவாகக் கொள்ளும் பாக்கியம் பெற்ற எங்களுக்கும் இக்கதி வரலாமா? தங்கள் சொல்லையுந் தட்டினரா என் அண்ணர்.

வசி: அப்பா! வருந்தாதே; விதி யாரைத்தான் விட்டது; நடந்த விஷயத்தை எண்ணியெண்ணி வருந்துவதால் ஆவதென்ன? எல்லாம் ஈசன் செயல்; சரி, உன் பிதா இறந்து இன்று பதினன்கு நாட்களாயின; சக்கரவர்த்தி நான்கு புத்திரர்களைப்

பெற்றும், அவர் அந்தியகாலத்தில் நீவிர் ஒருவரேனுஞ் சமீபத்தி லில்லாதுபோனீர்கள்; இன்னும் அவருக்குரிய ஈமக்கடனை முடியாது காலதாமசஞ் செய்தல் தோஷமாகும்; (இதற்கிடையில் சுமந்திரன்வர அவனைக்கண்டு பரதன் அழுகின்றான்.)

சும: ஈசன்செயல் இப்படியென்று யார்தாம் அறிவார்! நாமொன்றெண்ணத் தெய்வமொன்றெண்ணியது; இளவரசே, வருந்தாதீர்; தந்தையாருக்குச் செய்யவேண்டிய அந்தியகடனைச் சீக்கிரஞ் செய்தல்வேண்டும்; இதுவரையும் உங்கள் வரவையே எதிர்பார்த்திருந்தோம்; சக்கரவர்த்தியின் ஈமக்கடனை முடித்தற்கு, தமையனாரும் இங்கில்லாமையால் நீரே அதனைச் செய்தல்வேண்டும்.

பர: மந்திரத் தலைவரே! மரணகாலத்தில் என் தந்தையாருடன் கூடவிருக்கும் பாக்கியத்தை யான் பெறாவிட்டாலும், அவருக்கு அந்தியகிரியைகளைச் செய்யும் பாக்கியமாவது பெற்றேனே.

வசி: (தனக்குள்) மஹாதேவா! சக்கரவர்த்தி இறக்குங்காலத்தில் கூறிய வார்த்தையை இவனுக்கு நான் எப்படிச் சொல்லத் துணிவேன்; (பரதனை நோக்கி) அப்பா, பரதா! உனக்கு யான் சொல்ல வேண்டியது ஒன்றுண்டு; உன் அன்னை செய்த வஞ்சனையால் சக்கரவர்த்தி அவள்மேல் துவேஷமுற்று 'கைகேசி தனக்குத் தாரமல்லள்' என்றும், 'அவள் உதரத்திற் ஜெனித்த பரதன் அபரக்கிரியைக்கு அருகனல்லன்' என்றுங் கூறி இறந்தார்.

பர: (இடியேறுகேட்ட சர்ப்பம்போலப் பதைபதைத்து) ஐயையோ இதுவா என்விதி; என்பிதாவுக்கு அபரக்கிரியை செய்யத்தானும் உரிமையற்றவனானேன்; சக்கரவர்த்தி என்மேற் சந்தேகத்துடன்தான் இறந்தார்; இதற்குச் சிறிதும் ஆட்சேபமில்லை; ஆ! தாயெனவந்த கொடியாளே, என் அரும்பிதா இறக்கும் போது என்னை வெறுக்கச் செய்தாய்; என் ஆருயிரொத்த அண்ணனை வனம்போகச் செய்தாய்; அயோத்தியாபுரியைக் கலங்கவைத்தாய்; மாசற்ற சூரியன் மரபுக்கு என்றும் அழியாத பழியைத் தேடிவைத்தாய்; பாவியாகிய உன்வயிற்றில் உதித்த தோஷத்தால் உலகத்தில் எல்லோரும் என்னைப் புறக்கணிக்க வைத்தாய்; என் அன்னையே எனக்கு இன்னும் என்

னென்ன நன்மைகளைச் செய்தற்கு எண்ணியிருக்கின்றனரோ, நான் அறியேன்; (என்றுகூறி வருந்துகிறான்.)

சுமந்: இளவரசே! வருந்துதல் ஒழிவீர்; (வசிட்டரை நோக்கி) சுவாமி! இப்பொழுது ஈமக்கடன் செய்தற்கு யார் உரியர் சொல்லியருள வேண்டும்,

வசி: சத்துருக்கன் செய்யலாம்.

சுமந்: அப்படியே ஆகட்டும்; சரி, எல்லோரும் வாருங்கள், அதற்காகவேண்டியவற்றைச் செய்வோம்; (எல்லோரும் சக்கரவர்த்தியைச் சேமித்து வைத்திருக்குமிடத்திற்குச் செல்கின்றனர்கள்.)

---

## நாலாங் காட்சி.

காலம்-காலை. இடம்-அத்தாணிமண்டபம்.

[வசிட்டர் மற்றும் அந்தணர் சுமந்திரன் முதலிய அமைச்சர்கள், சேனைத்தலைவர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், பெரியோர்கள் என்னும் இவர்களனைவரும் ஒருங்கு கூடியிருக்கின்றனர்கள்.]

சுமந்: (வசிட்டரை நோக்கி) சுவாமீ! இத்தினத்தில் யாம் அனைவரும் இங்கே கூடிய காரணம் எதன்பொருட்டு என்பதை இங்கு சமூகமாயிருக்கும் எல்லோரும் அறிவார்களென்று நினைக்கின்றேன்; சக்கரவர்த்தியின் தகனம் முடிந்தும் இன்று பத்துநாட்களாயின; நாடு அரசனின்றி அணுத்துணை நேரமும் இருக்கக்கூடாதென்பது மனுசாஸ்திர முறையாகும்; யாம் இவ்விஷயத்தில் யாதும் பிரயத்தனமின்றி வாளாவிருப்பது தருமமாகாது; பரதனே இராச்சியபாரத்தை வகித்து நடத்தும் கருத்துடையவன்போற் காணப்படவில்லை; அவன் தந்தை இறந்தமையினாலும், தமையனைப் பிரிந்தமையினாலும் சந்ததமுஞ் சிந்தை நொந்து புலம்புகின்றான்; அவனையன்றி அரசுபுரிதற்குரியவர் இப்பொழுது இங்கு யாருமில்லை; ஆதலால் எல்லாம் அறிந்த நீரே அவனது கவலையை ஒருவாறு தேற்றி, இவ்விராச்சிய பாரத்தை வகிக்கும்படி செய்தல்வேண்டும்; பரதனை இங்கே அழைத்துவரும்படி எம்முட் சிலரை அனுப்பியிருக்கின்றேன்.

சபையோர்: முனீந்திர! எங்கள் அபிப்பிராயமுமதுவே; (இதற்கிடையில் பரதனும் சத்துருக்கனும் அங்குவந்து முனிவரை வணங்கி ஆசனத்தில் உட்காருகின்றனர்கள்.)

வசி: அரசிளங்குமர! யாமனைவரும் இப்பொழுது இங்கே வந்து கூடியதும், உன்னை இங்கே வரவழைத்ததும் யாதுகாரணம் பற்றியெனில் சொல்லுகின்றேன்;—

"வள்ளுறும் வயிரவா ளரசில் வையகம்
நள்ளுறு கதிரிலாப் பகலும் நாளொடும்
தெள்ளுறு மதியிலா இரவுந் தேவுடன்
உள்ளுறை உயிரிலா வுடலு மொக்குமே."

என்றபிரகாரம் அரசனில்லாநாடு ஒருபோதுஞ் சிறப்படையாது; என்ன, மீகாமனில்லா மரக்கலமோடுமோ? விண்ணுலக வாசிகளும் தமக்கு ஓர் அரசனை வேண்டிநிற்பர்; உனது பிதாவோ இறந்தனர்; உன் அன்னை பெற்றுக்கொண்ட வரத்தின்படி உன் தமையன் கானகஞ்சென்றான்; ஆதவன் குலத்துதித்த அரசர்களால் பூர்வந்தொட்டக்கம் பரிபாலிக்கப் பெற்றுவந்த இந்த அயோத்தியாபுரி இப்படி இடையில் அரசனின்றி ஒரு காலத்திலும் இருந்ததில்லை; ஆதலால், அப்பா, பரதா! இப்பொழுது இவ்விராச்சியபாரத்தை வகித்துப் பரிபாலனஞ் செய்தல் உனது கடனாகும்; இதனை உனக்குத் தெரிவிக்கும்பொருட்டே யாம் அனைவரும் இத்தினத்தில் இங்கே கூடினோம்; இவ்விஷயத்தில் எங்கள் வார்த்தையைத் தட்டாதே.

பர: (உள்ளம் வருந்தி) சுவாமீ! எல்லாமறிந்த தாங்களே தமையனிருக்க யான் முடிபுனையலாம் எனறு கூறுவீர்களானால் என் அன்னையைக் குறைகூறுவது எங்ஙனம்? என் தாய்செய்த வஞ்சனையைத் தாங்களும் அங்கீகாரஞ் செய்வீர்களானால் யான் சொல்வதென்ன? இடையிலுள்ள இருயுங்களையுந் தவிர்த்து இப்பொழுது கலியுகந் தொடங்கிவிட்டதென்றே எண்ணவேண்டும்; ஏன்? கலியுகத்திலேதான் இவ்விதமான அதர்மங்கள் நடைபெறும்; மூத்தவன் இருக்க இளையவன் முடிபுனையலாம் என இச்சபையிலுள்ளோர் யாராயினுஞ் சொல்லுவார்களா? இச்செயல் தருமத்துக்கடுக்குமா? பரதன் பாவியாகிய கைகேசியின் பாழ்வயிற்றில் ஜெனித்தவன்தானே; முறையற்ற விஷயத்துக்கும் உடன்படுவான் என்பது உங்கள் அபிப்பிராயமா? அதிகம் பேசுவதென்ன? யான் ஒருபோதும் இதற்குடன்படமாட்டேன்; இப்பொழுதே என் அண்ணனிடத்திற் சென்று அவரை

அயோத்திக்கு மீண்டுவந்து அரசாளும்படி இரப்பேன்; அவர் அதனை மறுப்பாராயின் யானும் அவருடன்சென்று கானகத்தினிடமாகத் தவஞ்செய்வேன்; (எனக்கூறிக் கண்ணீர்சொரிகின்றான்.)

சபை: இளவரசே! இச்சூரியகுலத்தில் என்றும் அழியாப் புகழை நிறுத்தினர் உம்மைப்போல் எவருமில்லை; உமது அன்னையின் வஞ்சனையினால் உம்மீதுஞ் சந்தேகங்கொண்டார் சிலர்; உம்மைப்போற் சகோதர பத்தியுடையவர்களை யாம் ஒருபோதும் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை; வாழுதிர் வாழுதிர் என்ஞான்றும் வாழுதிர்.

பர: (சத்துருக்கனை நோக்கி) தம்பீ! எமது தமையனாரை யாம் அழைத்துவருதல் வேண்டும்; இந்நகரவாசிகளையும் எம்முடன் புறப்பட்டுவரும்படி முரசறைவிப்பாய்.

சத்: அண்ணா! உமது ஆஞ்ஞைப்படியே. (சபை கலைகின்றது.)

---

## ஐந்தாங் காட்சி.

காலம்-பின்பகல். இடம்-அயோத்திமாநகரினின்றுந் தென்றிசை நோக்கிக் கானகஞ்செல்லு மொருமார்க்கம்.

[வசிட்டர், மரவுரிதரித்தவனாய்ப் பரதன், சத்துருக்கன், சுமந்திரன், கோசலை, கைகேசி. சுமித்திரை, அந்தணர், அமைச்சர், சேனைத் தலைவர், நகரவாசிகள் முதலானோர் ஸ்ரீராமரை அழைத்துவரும்படி கானகஞ் செல்கின்றார்கள்.]

சுமந்: (வசிட்டரை நோக்கி) சுவாமீ! அரசகுமாரர் இதற்கு உடன்படுவரோ என்னவோ தெரியவில்லையே.

வசி: சுமந்திரா! இதைக்குறித்து எம்மால் என்னசொல்லமுடியும்? இவையனைத்தும் தெய்வசங்கற்பத்தால் நிகழ்கின்றன என்றே எண்ணவேண்டும்; யான் முன்னர்ப் பலவாறு கூறியபோதும் அவன் உடன்படவில்லை; இப்பொழுது இதற்கு இணங்குவான் என்பதுஞ் சந்தேகமே.

சத்: (வழிச்செல்வோருடன் மந்தரை போதலைக்கண்டு அடங்காக் கோபங்கொண்டு அவள் சமீபத்திற் சென்று) அடி நாசகாலி! யார் உன்னை இங்கே புறப்பட்டுவரச்சொன்னார்? உன்னாலல்லவா இவ்வளவு சஞ்சலம் விளைந்தது! அட, துன்மார்க்கி! அத்தனை கர்வமா உனக்கு! (எனக்கூறி அவளை அடித்துத் துரத்த முயலுஞ் சமையத்தில் அதனைக்கண்ட பரதன் தடுக்கின்றான்.)

பர: தம்பி! தம்பி! விடு, விடு, என்னசெய்யத் துணிந்தனை? அவ ளுக்கு ஒருதீங்குஞ் செய்யாதே; பாவம், வயதுசென்றவள்.

சத்: இவளையும் விடலாமோ அண்ணா! இத்துணை தீமைக்குங் கார ணம் இவளல்லவா? இவளைக் கொன்றாலன்றி என் கோபந் தணியாது; வனத்திலும் வந்து இவள் என்னென்ன தீமைக ளைச் செய்வாளோ!

பர: தம்பி! கொண்ட கோபந் தணிதி; எய்தவனிருக்க அம்பை நோகலாமா? அவளைக் கோபித்தலாலாவதென்ன? இத்துணை தீமைகளையெல்லாம் விளைத்த நமது அன்னையைத் தண்டித் தோமா, இவளைத் தண்டித்தற்கு; சொல்லுவார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியென்ன? அல்லாமலும் நமது தமையனார் எம்மைக் கோபிப்பார் இவளுக்கு நாம் ஏதுமிடர்செய்தால்; பாவம் அவளும் வரட்டும்.

சத்: ஆம். அண்ணா! நீர் சொல்வது உண்மையே.

பர: (மந்தரையை நோக்கி) ஏ மந்தரை! நீ ஒரு புறமாகப் பெண்க ளுடன் கூடிக்கொண்டு வருகுதி.

(எல்லோருஞ் சென்று, இராக்காலமாதலும் ஸ்ரீராமர் தங்கிய சோலையில் தங்குகின்றார்கள்.)

---

## ஆறாங் காட்சி.

காலம்-பின்பகல். இடம்-கங்காநதியின் தென்கரையிலுள்ள சிருங்கி பேரம் என்னும் கிராமம்.

[பரதன் முதலானோர் கங்கையின் வடகரையில் வருதலைக் கண்ட குகன், பரதனே ஸ்ரீராமர்மீது படையெடுத்து வருகின்றான் எனவெண்ணி அடங்காக் கோபங்கொண்டு தென்கரையில் நின்று ஆர்ப்பரிக்கின் றான்.]

குக: (சிறிது உற்றுநோக்கித் தனக்குள்) இன்னுமேன் சந்தேகம்? என் ஐயன் சொல்லியபடி இவன்தான் அந்தப் பரதனாயிருக்கவேண் டும்; இவன் சேனைகளுடன் வருகின்றான்; அப்படி வரக் காரண மென்ன? சுவாமியின் நாடுநகரங் கவர்ந்து அவரைக் காட்டிற்கு அனுப்பினான்; அதுவும் போதாதென்று இப்பொழுதும் அவர் மீது படையெடுத்துக்கொண்டு வருகின்றான்; இவனுடைய எண்ணமென்ன? தன் தமையனென்றும் பார்த்தானல்லன்; இளையபெருமாள் அவருடன் போகின்றாரென்பதையும் எண்ண

வில்லை; நாடாளவேண்டுமென்னும் ஆசையால் படையெடுத்து இங்கே வருகின்றான்; வரட்டும் பார்ப்போம்; என்னுயிர் போன பின்புதான் இவன் இந்த ஆற்றைக் கடக்க முடியும்; என்ன! என் சுவாமிக்காக நான் இந்த உயிரை விட்டாலென்ன? எல்லாரும் என்னை ஏசார்களா? அடடா! இவனுக்கு அத்தனை கர்வமா? ஏழை வேடன்தானேயென என்னை நினைத்தானா? ஏன், வேடர் எய்யும் அம்பு அரசருடைய மார்பில் ஏறாதா? வரட்டும் பார்க்கின்றேன் என்னாலானமட்டும்; இப்பரதனுடைய சேனைகளையெல்லாம் நாசஞ்செய்து இவனையும் யமலோகம் அனுப்பாவிட்டால் நான் குகனல்லன்; சரி, காலம் போக்கக்கூடாது (தன் சேனைகளைக் கூவி) அடா, வீரர்களே! வாருங்கள் இங்கே; (எல்லோரும் வருகின்றார்கள்) என் சுவாமிக்கு எதிராக அதோ பாருங்கள் அச்சகோதர காதகன் படையெடுத்து வருகின்றான் என்னையும் எண்ணாமல்; இதோ அவன் சேனைகளைச் சின்னாபின்னமாக்கி அவனையுங் கொன்றுவிடுகின்றேன்; அப்படிச் செய்யாவிட்டால் நான் சாமியின் அடிமையல்ல; நீங்கள் ஒருவரும் ஓடஞ் செலுத்தவேண்டாம்; இங்குதானே நில்லுங்கள்; (எனக் கூறி நதியின் ஓரமாகச் சென்று உற்றுப்பார்க்கையில் பரதன் மரவுரி தரித்து, கண்ணீர் ததும்பியபடியே ஸ்ரீராமர்சென்ற வழியை நோக்கி வணங்கிய கரத்தனாய் நிற்கக் கண்டு தான் பரதன்மீது கொண்ட எண்ணம் முழுவதும் தவறு என உணர்ந்து தனக்குள்) ஐயையோ! மோசமெண்ணிவிட்டேனே; என் சுவாமியுடன் பிறந்தவர்களும் தப்பிதஞ் செய்வார்களா? இவனோ மரவுரி தரித்து, தவக்கோலம் பூண்டு வருகின்றான்; சுவாமி போன திக்கைப் பார்த்துக் கும்பிடுகின்றான்; முகம்வாடியிருக்கின்றது; சீ! நான் என்ன வீணெண்ணங் கொண்டேன்; அவன் ஒருபோதுந் தன் தமையனுக்கு மாறாய் வரமாட்டான்; அதிகம் யோசிப்பதென்ன? அருகிற் போனால் எல்லாந் தெரியவரும்; (தன் பரிவாரங்களை நோக்கி) ஏ, வீரர்களே! இந்த மார்க்கத்தைக் காத்துக்கொள்ளுங்கள்; அக்கரையிற் போய் எல்லாவிஷயமும் அறிந்துவருகின்றேன்.

பரிவாரங்கள்: கட்டளைப்படி செய்கிறோம். (குகன் ஓடத்தின்மீதேறிக் கங்கையின் வடகரையை நோக்கிச் செல்கின்றான்.)

## ஏழாங் காட்சி.

காலம்—அஸ்தமயனம். இடம்—கங்கையின் வடகரை.

[பரதன் முதலானோர் கங்கையின் வடகரையில் நிற்கின்றனர்.]

பர (சுமந்திரனை நோக்கி) மந்திரத்தலைவரே! இந்தநதியைக்கடந்து செல்லவேண்டும்; ஓடம் ஒன்றையுங் காணோமே இங்கு.

சும: (இதற்கிடையில் குகன் வருங் குறிப்பை யறிந்து) இராசகுமாரா! அதோபாரும்; ஒருவன் ஓடஞ்செலுத்திக்கொண்டு கரையை நோக்கி வருகின்றான்; இவன் இக்கங்கைத்துறைக்குத் தலைவன்; வேட்டுவர்குலத்தவன்; இந்நதியின் தென்கரையிலுள்ள சிருங்கிபேரம் என்னுங் கிராமத்தில் வசிப்பவன்; களங்கமற்ற சிந்தையுடையவன்; குகன் என்னும் நாமத்தைப் பூண்டவன்; உமது தமையனார்மீது அளவிறந்த பக்தியுடையவன்; உம்மைக்காண விரும்பி இங்கே வருகின்றான்; நாம் இந்நதியைக் கடத்தற்கு இவன் துணைபுரிவான்

பர: ஆகா! என் தமையனார்மீது அளவிறந்த பக்தியுள்ளவனா? நாமமென்ன? குகன்; அப்படியானால் காலதாமசஞ் செய்யாது நாமே சிறிதுதூரஞ் சென்று அவனை அழைத்துவருவோம்; என் அண்ணனுக்கு அன்பன் எனக்கும் அன்பனல்லவோ? (சத்துருக்கனை நோக்கி) தம்பீ! நீயும் வருவாய் அழைத்துவருவோம் அவனை. (இருவரும் சிறிதுதூரஞ் செல்வதற்கிடையில், குகன் அவர்கள் சமீபத்தில் வருதலும் ஒருவரை யொருவர் வணங்குகின்றார்கள்.) அப்பா! நீதானா குகன்?

குக: ஆம்! சாமி; அடிமையைக் குகன் என்று சொல்லுவார்கள்.

பர சந்தோஷம்! உன் வரலாறெல்லாம் நமது மந்திரி சற்று முன்பாகத் தெரிவித்தார்.

குக. சுவாமீ! தாங்களெல்லோரும் இந்தவழியாய் வந்தது ஏதோ?

பர. அப்பா! என்னெனச் சொல்லுவேன் எமக்கு வந்த சஞ்சலத்தை; என் தாயின்வஞ்சனையினால் என் அரிய தமையனார், நான் அயோத்தியில் இல்லாத சமையத்திற் கானகஞ் செல்லும்படி நேரிட்டது; அவரை மீளவும் அயோத்தியாபுரிக்கு இரந்து அழைத்துவரும் நோக்கமாகவே இங்கு வரலாயினோம்; அவருடைய அன்பன் நீ என்று சுமந்திரர் சொல்லக் கேட்டு, நான் அளவில்லாத ஆனந்தமடைந்தேன்; அன்பிற்கும் பெரியோர் சிறியோர் என்ற நியதி உண்டா? இல்லையே.

குக. ஏதோ எனது ஐயனுக்கு இந்த நாயின்மீதும் கொஞ்ச விசுவாசமுண்டு சுவாமி; உமது தாயார் ஆளும்படி கொடுத்தநாட்டை வேண்டாமென்று தமையனார்மீது கொண்ட பக்தியினால் பின்பும் அவரையே நாட்டிற்கு அழைத்துப்போக வேண்டுமென எண்ணி இங்கே வந்தீர்; ஐயனே! உம்மைப் போற் சகோதரபக்தியுள்ளவர்கள் ஒருவரையும் நான் கண்டதில்லை; உம்மைப் போற் புகழைப் பெற்றவர் உலகத்தில் ஆர் இருக்கின்றார்; அந்த இராமசுவாமியும் உமக்கு ஒப்பாகமாட்டார்; ஒன்றுமறியாத ஏழை வேடனா உமது பெருமையைச் சொல்லத்தக்கவன்!

பர. அப்பா குகனே! என் தமையனார் இங்கே வந்தபொழுது இராவிற் றங்கிய இடமெங்கே? அதனை எனக்குக் காட்டுவாயா?

குக. ஆம் சுவாமி! காட்டுகிறேன்; கொஞ்சத்தூரம் என்னுடன் வரவேண்டும்; (இருவரும் சிறிதுதூரஞ் சென்றபின் ஓர்பன்னசாலையைக் காட்டி) ஐயனே! இந்தக் குடிசையிலேதான் சுவாமியுந் தேவியும் தங்கியிருந்தார்கள்.

பர. அப்படியா? என் அண்ணா' என்னாலல்லவா இத்துணைக் கஷ்டமெல்லாமடைந்தீர்கள்; (எனக்கூறிக் கண்ணீர்சிந்தி) அப்பா! என் தம்பி தங்கிய பன்னசாலை எங்கே? காட்டுதி பார்ப்போம்.

குக. இளையபெருமாள் உறங்குவதில்லை; 'அவருக்குப் பன்னசாலையுமில்லை; என் ஐயனும் தேவியும் பன்னசாலையிலுறங்க, அவர் அம்புவில்லேந்தியபடியே விடியும்வரையும் உறக்கமில்லாமற் காவல்செய்துகொண்டு நின்றார்,

பர. ஆகா! அப்படியா? தம்பி! நான் என் அண்ணனுக்கு எப்பொழுதும் துன்பத்துக்கேகாரணமாயிருக்கின்றேன்; நீ அத்துன்பங்களை நீக்க நின்றாய்; (எனக்கூறி அப்பன்னசாலையில் உட்கார்ந்து பின் குகனை நோக்கி) வேட்டுவர்தலைவனே! எம்மையெல்லாம் அக்கரையிற் கொண்டுபோய்ச் சேர்ப்பது உன்கடனாகும்.

குக. சுவாமி! அதற்குந் தடையுண்டா; இன்றிரவு இங்கே தங்கி நாளைக்கு அப்பாற் போகக்கூடாதா? சாமியும் முன் அப்படியே செய்தார்.

பர. அதற்கென்ன, உன்னிஷ்டப்படி செய்யலாம்; (இதற்கிடையில் மற்றெல்லாரும் அப்பன்னசாலைக்கு வருகின்றார்கள்.)

குக. (கோசலையை வணங்கிப் பின் பரதனை நோக்கி) இந்த அம்மா யாரோ, சொல்லவேண்டும் சுவாமி.

பர. அன்பனே! இவர்தான் நமது சக்கரவர்த்தியின் பட்டமகிஷி; நமது தமையனுரைப் புத்திரனுகப்பெறப் பாக்கியம் பெற்றவர்; பரதனுகிய என்னுல் நாயகனை இழந்து நற்புதல்வனைப் பிரியும் நிர்ப்பாக்கியம் பெற்றவரும் இவரே. (குகன் பின்னரும் கோசலையை வணங்குகின்றுன்.)

கோ. பரதா! என் செல்வமே! ஏன் அப்படிக் கூறுகின்றுய்; உன்னைப் புதல்வனுகப் பெறும் பாக்கியம் உலகில் வேறு யாருக்குத்தான் கிடைக்கும்; சரி அதிருக்க, எங்களிடத்தில் அதிக அன்புபாராட்டுகின்றுர், இவர் யார்?

பர. அம்மா! இவர் வேட்டுவ அரசன்; சமீபத்திலுள்ள சிருங்கிபேரம் என்னுங் கிராமத்தில் வசிப்பவர்; இக்கங்கையைக் கடக்க விரும்புவோருக்கு ஓடஞ்செலுத்துபவர்; எமது தமையனிடத்து மிக்க விசுவாசமுடையவர்; நண்பால் எங்கள் நால்வர்க்கும் தமைபன்முறை பூண்டவர்; குகன் என்னும் நாமமுடையவர்.

கோ. அப்படியா! அப்பா குகனே, நீங்கள் ஐவரும் சகோதரத்துவம் பூண்டு நெடுங்காலம் வாழவேண்டும்.

குக. பெரும் பாக்கியம் தாயே, (எனக்கூறி சுமித்திரையைக் குறித்துப் பரதனை நோக்கி) இந்த அம்மா யாரென்று சொல்லவேண்டுஞ் சாமி.

பர. இவர் நமது சிற்றன்னையார்; என் அண்ணுவை எந்நாளும் நீங்காது நிழல்போற் பின்தொடர்ந்துசெல்லும இளையபெருமாளின் தாயார். (குகன் சுமித்திரையை வணங்குகின்றுன்.)

குக. (கைகேசியைக் குறித்து) இந்த அம்மா யார்?

பர. (நெட்டுயிர்த்து) அப்பா! இச்சஞ்சலத்திற்கெல்லாம் காரணமாயுள்ள இவர்தாம் எனது நற்றுபார். (குகன் வணங்குகின்றுன்)

சும. (அனைவரையும் நோக்கி) நாம் இன்றிரவு இங்கேதானே துயின்று அதிகாலையிற் கங்கையைக் கடந்து செல்வதே புத்தியாகும்,

பர. ஆம், அப்படியே செய்வோம்.

(எல்லோரும் பன்னசாலையில் தங்குகின்றுர்கள்)

---

## எட்டாங் காட்சி.

காலம்—நண்பகல். இடம்—சித்திரகூடம்.

[பரதன் முதலானோர் கங்கையைக் கடந்துசென்று சித்திரகூடத்திற்குச் சமீபமாகச் செல்லும்போது அவர்கள் வரவைக் குன்றின்மீது நின்று சேய்மையிற்கண்ட இலக்குமணன், பரதன் தமையன்மீது படையெடுத்து வருகிறானெனவெண்ணிக் கோபமுறுகின்றான்.]

இல. (சிறிது உற்றுநோக்கித் தனியே) இது என்ன ஆச்சரியம்! கைகேசி புதல்வன் கஜரததுரகபதாதிகள் என்னும் நால்வகைச் சேனைகளோடனும் வருகின்றான்; இப்படி வரவேண்டிய காரணமென்ன? வேறொன்றுமல்ல, எமது தமையனாருடன் யுத்தஞ்செய்தற்கே இப்படி வரலானான்; பரதன் அப்படியும் நினைப்பானா? ஆம், நினைக்கக்கூடும். ஏனென்றால், கொடியவளாகிய அக்கைகேசியின் வயிற்றிற் பிறந்தவன்தானே இவனும்; இச்சகோதரத் துரோகி என்னசெய்யத் துணிந்தான்? தன் தமையன் என்னும் எண்ணம் இவனிடத்திற் சற்றுமில்லாமற் போயிற்றா? ஒருபோது எங்கள் இருவரையும் தனித்தவர்கள் தாமே என்று எண்ணினானோ? இவன் எண்ணம் நன்று! நன்று!! இலக்குவன் கணைபை விலக்குவன் என்று தன் மனத்தில் நினைத்தானா; சரி, ஆகட்டும் பார்ப்போம்; ஆனால் நாம் தமையனாருக்குத் தெரிவிக்காது ஒன்றையுஞ் செய்யவொண்ணாது; ஆ! என்னண்ணன் பரதனிடத்தில் இன்னமும் அதிக அன்பு பாராட்டுகின்றாரே! பரதன் இவர்மேற் பாராட்டும் அன்பை இப்பொழுது தமையனாருக்குக் காட்டுவேன்;(எனக்கூறி ஸ்ரீராமரிடஞ் செல்லுகின்றான்

இ. தம்பீ! என்ன அதிக பரபரப்புடன் வருகின்றனையே; யாதும் விசேடமுண்டோ?

இல. (வணங்கி) அண்ணா என்ன சொல்வேன்; கடைசி யுகமாகிய கலியுகம் பிறந்துவிட்டது; அதற்குச் சந்தேகமில்லை.

இ. தம்பீ! ஏன் அப்படிக் கூறுகின்றாய்? நடந்ததென்ன?

இல அண்ணா! அநுமதிதரல்வேண்டும்; கைகேசிபுதல்வன் சிறிதும் யோசனையின்றிப் படையெடுத்து வருகின்றான் தங்கள்மீது; இதோ அவன் சேனையனைத்தையும் நீறாக்கி, அவனையும் நரகலோகத்தையாளச் செய்கின்றேன்; சிறிது அருள்புரியுங்கள்.

இ. தம்பீ! பரதனு அப்படிச் செய்யத் துணிபவன்? அப்படி ஒரு போதும் நினையாதே; என் பிரிவாற்ருமையால் என்னைக் காணும்படி இங்கே வருகின்ருன்; இன்னுஞ் சற்றுநேரத்துள் எல்லாம் தெரியும், அவசரப்படாதே; (இதற்கிடையில் பரதன் தன்னுடன் வந்தவர்களைச் சிறிது தாமதித்து வரும்படி செய்துவிட்டுக் கூப்பிய கரமும், அழுத கண்ணும், சிந்திய மூக்குமாகச் சத்துருக்கனுடன் முந்தி வருகின்ருன்.)

இ. (அதனைக் கண்டு இலக்குமணனுக்குக் காட்டி) அதோ பார்த்தனையா தம்பீ பரதன் போர்க்கோலத்தை; ஆதவன் குலத்துதித்தோர் அல்லன செய்யார் கண்டாய்.

(இலக்குமணன் நாணத்துடன் தலைகுனிந்து நிற்கின்ருன்.)

(பரதன் சமீபத்தில் வந்து ஸ்ரீராமருடைய பாதங்களில் வீழ்ந்து கோவென்றலற அவர் தம்பியை யெடுத்துத் தேற்றுகின்ருர்.)

இ. தம்பீ! வருந்தவேண்டாம், வருந்தவேண்டாம்; இவையெல்லாம் விதியின் செயல்; எல்லாமறிந்த நீயும் இப்படித் துன்பமுறலாமா? தம்பீ, பரதா! எங்கள் தந்தையார் க்ஷேமந்தானே?

பர. (கண்ணீர் சொரிய) அண்ணு! என்னைப் பெற்றவளுடைய வஞ்சனையாலும், உமது பிரிவாலும் எங்கள் தந்தையார் விண்ணுலகஞ் சென்றனர்.

இ. (கேட்டமாத்திரத்தே அறிவுசோர்ந்து வீழ்ந்து பின் ஒருவாறு தெளிந்து புலம்புகின்ருர்.) ஐயா! எம்மையெல்லாம் இங்கே தியங்கவிட்டு நீர் விண்ணுலகம் நண்ணினீரா! பிள்ளையில்லையென்று புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து என்னைப்பெற்று நீர் அடைந்த பேறு இதுதானு! எந்தாய், யானே உமக்குக் கூற்றுவனுகப் பிறந்தேன்; பூபாரத்தை என்னிடஞ் சுமத்திவிட்டு, வானப்பிரஸ்த நிலையை அனுசரிக்கும்படி வனஞ் செல்வதாகச் சொன்னீரே! அங்ஙனஞ் செல்லாது விட்டு விண்ணுலகஞ் சென்றமை, சத்தியந் திறம்பாத தங்களுக்கு முறையாகுமா! சம்பரனைக் கொன்று இந்திரனுக்கு வாழ்வுகொடுத்த எந்தையே, யான் அயோத்திக்குமீண்டுவந்து ஆர்முகத்தைப் பார்ப்பது? என் அரும் பிதாவே! நான் தனியேயல்ல, என்னரிய தம்பியும், ஜானகியும் உடன்வரக் காடுபோந்தமையைச் சகிக்க முடியாமல் நீரோ ஆருயிர் துறந்தீர்; கன்னெஞ்சனுகிய யான் உம்மைப்பிரிந்தும் உயிருடன் இருக்கின்றேன்; "பெற்றமனம் பித்தும் பிள்ளைமனங் கல்லும்" என்னும் பழமொழியை உண்மையாக்கி விட்டேன் பாவியேன்.

(இங்ஙனம் வீழ்ந்துகிடந்து புலம்பிய ஸ்ரீராமரைத் தம்பியர் மூவரும் எடுத்தணைக்க வசிட்டர் ஆங்கு வருகின்றார்.)

வசி. அப்பா, ஸ்ரீராமா! கலங்காதே! கலங்காதே!! எல்லாமுணர்ந்த நீயும் இங்ஙனங் கலங்குவாயாகில் இனித் தேற்றுபவரார்; செழுமதியிலேச்சிய முழுமுதற்கடவுளன்றி வேறுயார் காலத்தைக் கடந்தவர்? அரிபிரமேந்திராதி தேவர்களும் அழியும் பான்மையரல்லரோ இராகவா,

"சாருறு தந்தை யாருந் தாயரு மனந்தஞ் சன்மம்
ஊருமோ ரனந்தம் வாய்த்த வுருவுமோ ரனந்தப்பெற்ற
பேருமோ ரனந்தங் கன்மப் பெருக்குமோ ரனந்தங்கொண்ட
சீருமோ ரனந்தம் இன்னுஞ் சேர்வது மனந்த மாமால்."

இவையெல்லாம் நீ அறியாதனவா? அரசிளங்குமர! சஞ்சலம் வேண்டாம்; உனது அரிய தந்தையாருக்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்யவேண்டும்; வருகுதி செல்வோம் நதிதீரத்திற்கு.

(ஸ்ரீராமர் வசிட்டர் முதலியோர் நதிதீரத்திற்குச் செல்கின்றார்கள்)

---

## ஒன்பதாங் காட்சி.

காலம் - பின்பகல். இடம் - சீதையின் பன்னசாலை.

[வசிட்டர், ஸ்ரீராமர், பரத சத்துருக்கர் வரச் சீதை அவர்களை வணங்கி உபசரிக்கின்றாள்.]

பர. (சீதையின் கோலத்தையும் பன்னசாலையையும் பார்த்துப் பதைபதைத்துக் கண்களினின்றும் நீருகுவி பாய) அம்மா! என்னாலல்லவா நீரும் இத்துயரெல்லாம் அநுபவிக்க நேர்ந்தது.

சீ. அரசே! யான் மிக்க ஆனந்தத்தோடுகூடி வாழ்கின்றேன்; வருந்தவேண்டாம்.

இ. தம்பி! வருந்தவேண்டாம்; நீ வருந்துவதைப் பார்க்க யான் சகிக்கேன்; (ஜானகியை நோக்கிக் கண்ணீர் கலுழ்ந்து) கண்ணே சீதா எங்கள் பிரிவாற்றாதவராய் உனது மாமனார் விண்ணுலகஞ் சென்றுவிட்டனராம்.

(தன் மாதுலன் இறந்தமையைக்கேட்டுச் சீதை புலம்புகின்றாள்]

வசி. அம்மா, சீதா! அழவேண்டாம்; யார்தாம் இக்கிருக்கப் பிறந்தார்.

(சுமந்திரன், கோசலை, கைகேசி, சுமித்திரை, மந்திரத்தலைவர், சேஞவீரர், பரிசனர் முதலிய எல்லாரும் அங்கு வருகின்ருர்கள்.)

இ: (தாயரின் சமீபத்திற் சென்று) அன்னையர்காள்! தந்தையாரை எங்குவிட்டு வந்தீர்கள்; எந்தையே, இறக்கும்போது என்ன நினைந்தீரோ; (என்று புலம்பி நிலத்தில் வீழ்கின்ருர்.)

சுமி: கண்ணே, இராகவா! எழுந்திரு, என்னசெய்யலாம்; நாங்கள் செய்த பாக்கியம் இவ்வளவுதான்.

சும: அரசே! வருந்தாதீர்.

கோ: கண்ணே, சீதா! இது என்ன கோலம்; இக்கோலத்துடன் உன்னைப் பார்த்தற்கா இங்குவந்தேன் பாவியேன்.

சுமி: அம்மா, ஜானகி! இங்கே வா; ஏன் கண்ணீர் சொரிகின்ருய்; வேண்டாம் (என்று சொல்லித் தன் வஸ்திரத்தால் அவள் கண்ணீரைத் துடைக்கின்ருள்.)

வசி: நீவிரெல்லாரும் சாமான்யர்கள்போல் இங்ஙனம் வருந்திக் கொண்டிருப்பதனுல் ஆவதென்ன! சீதா, நின் மாமியர் முதலியோரைப் பன்னசாலையினுள்ளே அழைத்துச்செல்; அவர்கள் பிரயாண சிரமம் பெரிதும் அடைந்திருக்கின்றனர். (சீதை தன் மாமியரைப் பன்னசாலையினுள்ளே அழைத்துக் செல்கின்ருள்.)

வசி: (ஸ்ரீராமரைநோக்கி) இராகவா! வருகுவாய்; யாமெல்லாம் நின் பன்னசாலைக்குச் செல்லுவோம். (எல்லோருஞ் செல்கின்ருர்கள்.)

---

## பத்தாங் காட்சி.

காலம்-காலை. இடம்- சித்திரகூடத்தில் ஸ்ரீராமரது பன்னசாலை.

[வசிட்டர் முதலாம் முனிவர், சுமந்திரன் முதலாம் அமைச்சர், சேனைத்தலைவர், சகோதரர் மூவர், பிரசைகள் முதலிய எல்லோருஞ் சூழச் ஸ்ரீராமர் இருக்கின்ருர்.]

இ: தம்பீ, பரதா! எந்தையோ விண்ணுலகடைந்தார்; அவருடைய ஆஞ்ஞையின் வண்ணம் அயோத்திநாடு நின்னதேயாகும்; அங்ஙனமாக, அதனைப் பரிபாலியாது தவவேடம் பூண்டு நீ இங்கே வந்தமை தம்பீ, தருமமல்லவே.

பர: (நெட்டுயிர்த்து) அண்ணு! கைகேயிதனைபனுதலால் யான் தவநெறி பூணவொண்ணுது என்பது தங்கள் அபிப்பிராயமா? பாவகாரிவயிற்றிற்பிறந்த பாவியாகிய யான், தவத்திற்குமுத

வேன், சாகின்றேனுமில்லை; ஈசனே! எவ்வாறு இத்தீராப்பழியினின்றும் கடைத்தேறப்போகின்றேனோ அறியேன்: அண்ணா! கற்பில்லா மகளிர் ஒழுக்கமும்; பொறுமையற்றவர் செய்யுந் தவமும், அருளின்றிச் செய்யும் அறமும், முறை திறம்பியாளும் அரசும் ஒருகாலும் விருத்தியடையா என்பது தங்கட்குத் தெரியாதவல்ல; அரசாளப் பிறந்த நீர் அதனை விடுத்துக் கானகஞ்சென்று துறவறம்பூண, அந்த ராச்சியத்தை யான் கவர்ந்து ஆள்வேனென்றால் என்னைப்போற் புல்லன் யாருமுண்டா? ஐயனே, நீர் கானகஞ்செல்ல, உமது பிரிவாற்றாது எம்பிதா இறக்க, யான் அரசுபுரிவேனாகில், இவ்விராச்சியத்தை அபகரிக்கச் சமையம்பார்த்திருந்த சத்துருவாகவன்றோ என்னை எல்லாருங் கருதல்வேண்டும்; அண்ணா! என்னுள்ளத்தை மேலும் மேலும் புண்படுத்தத்தக்க இன்னோரன்ன வார்த்தைகளைக் கூறுவதொழிந்து கருணைபுரியுங்கள்; சக்கரவர்த்தி வரமீந்தமையால் வந்த வசையும்; எனதன்னை வஞ்சனையால் வந்த வசையும் நீங்கும்வண்ணம், என்னரிய அண்ணா! தாமே திருவுள மிரங்கி, அயோத்திக்கு மீண்டு முறைப்படி அரசுபுரிதல்வேண்டும்; (என்று கூறிப் பரதன் ஸ்ரீராமரை வணங்குகின்றான்.)

இ: தம்பீ! யான் சொல்வதைக் கேள்; 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வ'மென்பர் ஆன்றோர்; என்னரிய தாய் கேட்டுப் பெற்ற வரத்தின் பிரகாரம், தந்தையார் பணிக்க யான் கானகம் நண்ணினேன்; புதல்வராயுள்ளவர்கள் தம்மைப் பெற்றோருக்கு இசையைத் தேடிவைத்தல் வேண்டுமேயன்றி வசையைத் தேடிவைத்தலாகாது; எனது அரிய தந்தையார் சத்தியந் திறம்பி நரகிடைக் கிடந்து வருந்த யான் நாடாளுவதென்றால், யார்தாம் நம்மை யெள்ளார்? நீயோ க்ஷத்திரியகுலத்தினுதித்துள்ளனை; மன்னுதிமன்னரெல்லாம் மலரடிபணியப் புவியாண்ட தசரதச்சக்கரவர்த்தியின் அரிய புதல்வனாயுள்ளனை; அரசருக்குரிய லக்ஷணங்களத்தனையும் உன்னிடத்துள்ளன; தமக்குப்பின் இந்நாட்டைப் பரிபாலிக்கும்படி எந்தையாரும் உனக்கு ஆஞ்ஞாபித்துள்ளனர்; அதனையே யானும் பெரிதும் விரும்புகின்றேன் தம்பீ, பரதா! நீயே சென்று நாடாளுதி; வருந்தாதே.

பர: அண்ணு! எந்தை தந்தமையால் நாடு எனக்கே உரியதென்றீர்; இப்பொழுது எந்தை எனக்குத் தந்த நாட்டை யான் உங்களிடம் ஒப்பிக்கின்றேன்; நீர் அந்நாட்டையும் என்னையும் ஆண்டருளவேண்டும்.

இ: தம்பீ! அங்ஙனமன்று; தந்தையார் பணித்தவண்ணம் பதினான்கு வருடம் வனவாசஞ் செய்ய உடன்பட்டு வந்தேன்; இப்பொழுது அவ்வாக்கை மீறி யான் ராச்சியபரிபாலனஞ் செய்தல் முறையாகுமா? உலகத்தவர் என்னை ஏசாரா? பிதாவின் சொற்படி நான் பதினான்குவருடம் வனவாசஞ் செய்து பின்னர் அயோத்திக்கு மீண்டு இராச்சியபாரத்தை வகித்து நடாத்துவேன்; அதுவரைக்கும் நீயே நாடாளவேண்டும் தம்பீ, இன்னுங் கேள், எம்மரிய பிதா உயிருடனிருக்கவும் அவர் சொல்லைக் கடத்தற்கு அஞ்சியே யான் முடிபுனைய உடன்பட்டேன்; இப்பொழுது நீ என்வாக்கைக் கடத்தல் அழகாகுமா?

வசி: வாராய், இரகுராமா! சிருட்டிகாலந்தொடக்கம் இதுகாறும் சூரியன் மரபிற் பிறந்த அரசர்களாகிய நின் மூதாதையரே இவ்வயோத்தியாபுரியை வரன்முறைதிறம்பாது பரிபாலனஞ் செய்துவரலாயினர்; இப்பொழுதும் நீ அவ்வரன்முறையைத் திறம்பச்செய்வது அழகல்லவே; இன்னுமொன்று இயம்புதுங் கேள்; அறியாமை யென்னும் அந்தகாரத்தை அகற்றி ஞானச்சுடரேற்றிப் பாவபுண்ணியங்களைப் பகுத்தறியச் செய்து, ஆன்மாவுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாச் சாதனமாகிய கல்வியை உதவும் ஞானசாரியன், ஐம்முதுகுரவருள்ளுஞ் சிறந்தவன்; யான் உனது ஞானசாரியனன்றோ; என் வார்த்தையை நீ அலட்சியஞ் செய்தல் முறையல்லவே; ஆதலால், இராகவா! என் ஆஞ்ஞைப்படி இவ்விராச்சியபாரத்தை நீ ஏற்றல்வேண்டும்.

இ: முனிவர்பெருமானே, நமஸ்காரம்; குருவார்த்தைக்கு எதிர்வார்த்தை கூறுகின்றேனென என்னை முனியாது கருணைசெய்ய வேண்டும்; சுவாமீ! முன்பே எமது பிதாவின் ஆஞ்ஞைப்படி பதினான்குவருடம் வனவாசஞ்செய்ய உடம்பட்டேன்; தாங்கள் இப்பொழுது அதற்கு மாருக ஆஞ்ஞை செய்தால் சிறுவன் யான் யாதுசெய்வேன்; சொல்லியருளவேண்டும்.

வசி: (சிறிதுநேரம் யோசித்து) இராசகுமாரா! நீ சொல்வது வாய்மையே.

பர: அண்ணு! நாட்டை யாராயினும் ஆளட்டும்; யான் உம்முடன் கானகம் வருகின்றேன்,

## அசரீரி.

"ஹே, பரத! ஸ்ரீராமச்சந்திரன் பிதிர்வாக்கிய பரிபாலனஞ் செய்யும்பொருட்டுக் கானகஞ் செல்லவேண்டும்; அந்தப்பதினான்கு வருடமும் நீயே இராச்சியபரிபாலனஞ் செய்தல்வேண்டும்; இஃது உன் கடமையாகும்; அறிகுதி,"

இ: தம்பீ! கேட்டனையா அசரீரியை; நீ நாடாளவேண்டுமென்பதே தேவர் சித்தமும்; எனக்கும் அதுவே விருப்பம்; ஆதலால், தம்பீ! வருந்தாதே; என்சொல்லைத் தட்டாது அயோத்திக்கு மீண்டுசெல்; பதினான்குவருட எல்லை முடிதலும் யான் அவ்விடம் வருவேன்; இது சத்தியம்,

பர: (அழுதபடியே) அண்ணா! தங்கள் ஆஞ்ஞைப்பின்வண்ணஞ் செய்கின்றேன்; தங்கள் பாதுகைகளைத் தாருங்கள்; அவைகளே எனக்குக் கிரீடம்.

இ: (பாதுகைகளைப் பரதனிடங் கொடுத்து) தம்பீ! வருந்தாதே.

பர: (பாதுகைகளைச் சிரசின்மீது சூடி) அண்ணா! யான் சென்றுவருகின்றேன், அனுமதி செய்யுங்கள்; ஆனால், பதினான்குவருட எல்லை கடந்து தாங்கள் வருதற்கு ஒருநாழிகை தவறினும் யான் அக்கினிப்பிரவேசஞ்செய்வேன்; இது சத்தியம்; மேலும் அயோத்தியாபுரியிலிருந்து அரசுபுரிதற்கு யான் அருகனல்லேன்.

இ: தம்பீ! சஞ்சலம் வேண்டாம்; யான் தவறாது வருகின்றேன்; சென்றுவருவாய்.

(அயோத்தியினின்றும் வந்தவர்களெல்லோரும், ஸ்ரீராமர், சீதை, இலக்குமணர் என்னும் மூவரிடத்தும் விடைபெற்றுச்செல்கிறார்கள்.)

இ; தம்பீ இலட்சுமணா! கண்ணே சானகி! சித்திரகூடமோ அயோத்திக்குச் சமீபத்திலுள்ளது; நாம் இங்கு தங்கியிருந்தால், அயோத்தியாபுரியிலுள்ளவர்கள் இன்னமும் வந்து எம்மை அங்கு வரும்படி சங்கடஞ் செய்வர்; ஆதலால் இவ்விடத்தை விட்டுத் தென்திசையை நோக்கி அப்பாற் செல்வோம்; வருகுதிர், (செல்கின்றார்கள்.)

உ

## 1926ம் ஆ கேம்பிறிஜ்
## ஸீனியர் பரீட்சைக்குரிய புஸ்தகங்கள்:

1. பாரதம் ராசசூயச்சருக்கம் பதவுரை,
   விருத்தியுரை, நூலாசிரியர் வரலாறு
   என்னுமிவைகளுடன் ... ... சதம் 75
2. திருக்குறள் 10 (XXI.—XXX.) அதிகாரம்,
   பதவுரை, கருத்துரை, விசேடவுரை, ஆங்கில
   மொழிபெயர்ப்பு, நூலாசிரியர் வரலாறு என்னு
   மிவைகளுடன் ... ... ... சதம் 50.
3. மணிமேகலைக்கதைச் சுருக்கம்,
   மகாமகோபாத்தியாயர் ஸ்ரீமத் சாமிநாதஐயர் பதிப்பு சதம் 75.

☞ Cambridge Senior Tamil questions 1919—1924 Cents 40.
" " 1919—1925 " 50.

## 1926ம் ஆ கேம்பிறிஜ்
## ஜூனியர் பரீட்சைக்குரியபுஸ்தகங்கள்:

1. அம்பிகாபதியும் அரசிளங்குமாரியும்,
   (சென்னபட்டணம் பதிப்பு) ... சதம் 75.
2. நீதிமஞ்சரி முதல் 150 செய்யுட்கள்,
   பதவுரை, பொழிப்புரை, விசேடவுரை
   முதலியவற்றுடன் ... ... சதம் 60.

நீதிமஞ்சரிமுழுவதும் ஷ உரைகளுடன் சதம் 75.

### மற்றும் புஸ்தகங்கள்.

இராமாயணம் அயோத்தியாகாண்ட வசனம்.
(நாடகரூபமாக எழுதப்பட்டது.)
1926ம் ஆ தமிழ்உபாத்தியாயர்களின் முதல்வருடப்
பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பட்டது சதம் 75.

ஷ நூல் நாடகத்திற்காகிய பாக்களுடன் .... ரூ 1.

புலோலிப் பசுபதீசுவரர் பதிற்றுப்பத்தந்தாதி,
(பண்டிதை ஸ்ரீமதி. ந. பத்மாசனி அம்மாள்
இயற்றியது) ... ... ... சதம் 25.

The Clough Printing Works, Grand Bazaar, Jaffna.